உ

ஹிதபாஷிணீ வெளியீடு நெ. 8.

சிவானந்த லஹரீ

ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்களால்
அருளிச்செய்யப்பட்டது.

மூலம் தேவநாகரத்திலும் தமிழிலும்.

"ஹிதபாஷிணீ" ஆசிரியர் R. முத்துகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் தமிழில் பதவுரை கருத்துரையுடன் ஹிதபாஷிணீ 4 & 5-வது தொகுதியில் பிரசுரம் செய்யப்பட்டது.

ஹிதபாஷிணீ ஆபீஸ், மேலவீதி, தஞ்சை.

த... பிரைட்] [ஹி...

உண்... ட்டில் பேஜ், ஜயவேல் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பட்டது.
...ால் செய்கின்றார்கள்.

ஹிதபாஷிணீ.

ஸம்ஸ்கிருதத்தில் உள்ள அரிய பொக்கிஷங்களை எளிய த
எடுத்துரைக்கும் ஓர் சிறந்த தமிழ் மாத சஞ்சிகை. 1947ல் ஸ்த
கப்பட்டது. வருட சந்தா ரூ. 3. மாதிரிப் பிரதிக்கு எழுதுங்கள்.

ஹிதபாஷிணீ வெளியீடுகள்.

நெ. 4. **அக்ஷர சருளார்.**

உங்கள் காரிய சித்தியைப்பற்றி அறிய இந்நூல் உங்களு
மிக்க பயன்படும். இது தஞ்சை ஸரஸ்வதி மஹாலிலிருந்து எடு
புதிதாக பிரசுரம் செய்யப்பட்டது. தமிழ். ஆங்கில மொழி பெயர்
களுடன் கூடியது. சொற்ப பிரதிகளே பாக்கி இருக்கின்றன. உட
எழுதுக. ரூ. 1-[illegible]-0க்கு M. O. செய்து புக் போஸ்டு மூலம் பெறல

நெ. 7. **ஸ்துதிகுஸுமமாலா.**

இதில் பாராயணத்திற்கு உரிய 13 சிறந்த ஸ்தோத்ரங்கள்
மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்டிருக்கின்றது. மூலம் தேவ
ரத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில
ற்சி இல்லாதவர்களும் பாராயணம் செய்து பயன் பெறலாம். ரூ.
அனுப்பி புக் போஸ்டு மூலம் பெறலாம்.

நெ. 8. **சிவானந்த லஹரீ.**

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் அருளிச்செய்த இ
சிறந்த ஸ்தோத்ரம் தமிழில் பதவுரை கருத்துரையுடன் வெளியிட
பட்டிருக்கிறது. பக்கங்கள் 100. விலை அணா 12.

நெ. 9. **ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம்.**

இது ஓர் சிறந்த தமிழ் நாடகம். விலை அணா 6.

நெ. 10. **கேனோபனிஷத்.**

நாகரலிபியில் மூலத்துடனும், சாங்கரபாஷ்யத்தைத் த
தமிழ் விரிவுரையுடனும் கூடியது. விலை அ

ஹிதபாஷிணீ ஆபீஸ், மேலவீதி, தஞ்சா

சிவானந்தலஹரீ.

कलाभ्यां चूडालंकृतशशिकलाभ्यां निजतपः-
- फलाभ्यां भक्तेषु प्रकटितफलाभ्यां भवतु मे ।
शिवाभ्यामस्तोकत्रिभुवनशिवाभ्यां हृदि पुन-
र्भवाभ्यामानन्दस्फुरदनुभवाभ्यां नतिरियम् ॥ 1

கலாப்4யாம் சூட3ாலங்க்ருதசசி1கலாப்4யாம் நிஜதப:-
பப2லாப்4யாம் ப4க்தேஷு ப்ரகடிதப2லாப்4யாம் ப4வது மே 1
சி1வாப்4யாமஸ்தோகத்ரிபு4வநசி1வாப்4யாம் ஹ்ருதி3 புநர் 1
ப4வாப்4யாமாநந்த3ஸ்பு2ரத3நுப4வாப்4யாம் நதிரியம் ॥

(ப-ரை) கலாப்யாம் — ஸகல வித்யாஸ்வரூபர்களாயும், சூடா3லங்க்ருதசசிகலாப்4யாம் — கேசங்களால் அலங்கரிக்கப் பட்ட சந்திர கலையை உடையவர்களும், நிஜதப: ப2லாப்யாம்— தனது சொந்ததவத்தின் பயனுக தோன்றியவர்களாயும், ப4க்தேஷு—தன் பக்தர்களிடம், ப்ரகடித ப2லாப்4யாம்-ப்ரகடனம் செய்யப்பட்ட பலவித பலதானங்களையுடையவர்களாயும், அஸ்தோகத்ரிபுவனசிவாப்4யாம்—மூவுலகங்களுக்கும் அதிகமான மங்களங்களை அளிக்கின்றவர்களாயும், ஹ்ருதி3—மனதில், புனர் ப4வாப்4யாம்—அடிக்கடி தோன்றுகின்றவர்களாயும், ஆனந்த3 ஸ்புரத3நுப4வப்4யாம்—ஆனந்தமயமாக பிரகாசிக்கும் ஞான ஸ்வரூபர்களுமான, சிவாப்4யாம்—பார்வதி பரமேச்வரர்களின் பொருட்டு, — மே-என்னுடைய, இயம்நதி:- இந்த நமஸ்காரம், ப4வது — இருக்கட்டும்.

(க-ரை) பரம கருணாமூர்த்தியான ஸ்ரீசங்கரபகவத் பாதா லத் சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீபரமேச்வர ஆராதன மஹிமையால் ஸகல வேத வேதாங்கங்களின் அர்த்தங்களையும் உணர்ந்து ஸ்வயம் ஜீவன் முக்தர்களாய் இருந்தபோதிலும் ஸம்ஸாரத்தில் உழன்று தி பரிதவிக்கும் மற்ற ஜீவராசிகளையும் உஜ்ஜீவிக்கும்படி செய்ய கின் அவர்களுக்கும் பரமேச்வரனிடம் பக்தியுண்டு பண்ணுவதற்காக யே "சிவானந்தலஹரீ" என்ற இச்சிறந்த ஸ்தோத்திரத்தை இயற்றி யுள்ளார்கள். இது எவ்வித இடையூறுமின்றி முடிவடைவதன் உண்பொருட்டு மங்களஸ்வரூபிகளான ஸ்ரீபார்வதீ பரமேச்வரர் ஸம் களின் நமஸ்கார ரூபமான மங்களத்தை இந்த முதல் ச்லோகத் ால் செய்கின்றார்கள்.

ச்ருதிகளில் ஸ்ரீபார்வதி பரமேச்வரர்கள் ஸகல வித்யாஸ்வ ரூபமாக கூறப்பட்டிருக்கிறார்கள். இந்த ஸ்தோத்ரரூபமான வித்யையும் அவர்களுடைய அருளால் மிகச்சிறந்து விளங்க வேண்டு மென்பதற்காக முதன் முதலில் வித்யாஸ்வரூபமாகவே அவர்களை போற்றுகின்றார்.

ஸ்ரீபார்வதி பரமேச்வரர்கள் இருவரும் சிரஸில் சந்த்ர கலையை தரித்துக்கொண்டிருக்கிறார்கள். சந்த்ர கலையால் சிர ஸிற்கு சோபை என்று மற்றவர்களிடத்தில் கூறலாம். ஆனால் இவர்களிடத்தில் மட்டும் இவர்களுடைய கேசத்தால் தான் சந்த்ர கலைக்கு சோபை அதிகம் என்று குறிப்பிடுகிறார்.

ஸ்ரீபார்வதியை அடையவேண்டு மென்று ஸ்ரீபரமேச்வர னும், ஸ்ரீபரமேச்வரனை பர்த்தாவாக அடையவேண்டு மென்று பார்வதியும் கடும்தவம்புரிந்து அதன் பயனாக ஒருவரை மற்றொ ருவர் பெற்றார்.

ஸ்ரீபார்வதீ பரமேச்வரர்களை அண்டியவர்கள் ஏராளமான பயனைப்பெறலாம் என்பதை அவர்கள்தானே வெளியிடுவதை விட அவ்விதபயன்களைப் பெற்ற பக்தர்கள்மூலம் வெளியிடுவ தன்றோ விசேஷம்! ஆதலால் அவ்விதமே அதை அவர்கள் வெளி யிடுகின்றார்கள் என கூறப்பட்டிருக்கிறது.

பொதுவாக உலகில் மங்களமென்றால் மங்களஸ்வரூபி களான ஸ்ரீபார்வதி பரமேச்வரர்களிட மிருந்தே உண்டாக வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வளவு மஹிமைபெற்ற சிறந்த தெய்வங்களை நாடுவது மிகசுலபம் என்பதை புகட்ட "த்யானம்" செய்யும் போதெல் லாம் மனதில் தோன்றுகின்றனர் என வர்ணிக்கப்படுகிறது.

உபநிஷத்துகளில் பரப்ரம்மத்தை ஸச்சிதானந்த ஸ்வரூபமாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றபடியால் அந்த பரப்ரம்மத்தின் ஸகுணரூபமான ஸ்ரீபார்வதி பரமேச்வரர்களையும் ஸச்சிதானந்த ஸ்வரூபமாகவே இங்கும் போற்றுகிறார். (1)

गलन्ती शंभा त्वच्चरितसरितः किल्बिषरजो
दलन्ती धीकुल्यासरणिषु पतन्ती विजयताम् ।
दिशन्ती संसारभ्रमणपरितापोपशमनं
वसन्ती मच्चेतोह्रदभुवि शिवानन्दलहरी ॥ 2

க3லந்தீ ச1ம்பே4ா த்வச்சரிதஸரித: கில்பி3ஷரஜோ
த3லந்தீ தீ4குல்யாஸரணிஷு பதந்தீ விஜயதாம் ।

தி3ச1ந்தி ஸம்ஸாரப்4ரமணபரிதாபோபச1மநம்
வஸந்தீ மச்சேதோஹ்ரத3பு4வி சி1வாநந்த3லஹரீ ॥ (2)

ஹே! சம்போ4– ஸுகத்திற்கெல்லாம் காரணமான ஹே பரமேச்வரா, த்வச்சரித ஸரித:-தங்களுடைய சரித்திரமாகிற நதியிலிருந்து, க3ளந்தீ-பெருகுகின்றதும், கில்பி3ஷரஜ:- பாபமாகின்ற தூளியை த3ளந்தீ போக்கடிக்கின்றதும் (பிளக்கின்றதும்) தீ3குல்யாஸரணிஷு புத்தியாகிற வாய்க்கால்வழியில், – பதந்தீ செல்லுகின்றதும், ஸம்ஸாரப்4ரமணபரிதாபோபச1மனம் ஸம்ஸாரத்தில் சுற்றுவதால் உண்டான தாபத்தை சமனம் செய்கின்றதுமான சிவானந்த3லஹரீ — பார்வதி பரமேச்வரர்களின் சரித்திர சிரவணம் முதலியவற்றால் உண்டான ஆனந்தத்தின் பிரவாஹம், மச்சேதோஹ்ரத3பு4வி என்மனதாகின்ற மடுவில், வஸந்தீ—நிலை பெற்றதாக இருந்துகொண்டு, விஜயதாம்—மிகமேன்மையுடன் விளங்கட்டும்.

(க-ரை) இந்தசுலோகத்தில் எப்பொழுதும் தன்மனதில் சிவானந்தம் நிலை பெற்றிருக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறார். உலகில் ஓர்நதியிலிருந்துபெருகும் ஓர்பிரவாஹம், அது செல்லுமிடத்திலுள்ள தூசிகளை போக்கடித்துக்கொண்டும், தாபத்தை நிவிருத்திசெய்துகொண்டும் ஓர்வாய்க்கால் வழியாகச் சென்று ஏரிமுதலியநீர்நிலயங்களை அடைந்து அவ்விடத்திலேயே நிலைபெற்றுவிடும். அதுபோல் சிவானந்தம் என்ற பிரவாஹம் அடிக்கடி ஸ்ரீபார்வதி பரமேச்வரர்களுடைய சரித்திரங்களை சிரவணம் செய்வதால் பெருகுகின்றதாம். உலகிலுள்ள மற்ற பிரவாஹங்கள் சில சுகங்களை அளித்தபோதிலும் பலதுக்கங்களையும் உண்டுபண்ணக்கூடும். ஆனால் சிவசரித்திரத்திலிருந்து பெருகும் பிரவாஹத்தில் துக்கசம்பந்தமே இல்லாததால் ஆனந்த லஹரீ என்று கூறப்படுகிறது.

பாபமாகின்ற தூளியை இப்பிரவாஹம் பிளந்து தள்ளிவிடுகிறது. மறுபடியும் பாபம் உண்டாவதற்கு வழியில்லாமல் பாபத்திற்கு மூலகாரணமான அஜ்ஞானத்தை உள்பட அகற்றிவிடுகின்றது என்பதைக்குறிப்பிடவே "த3ளந்தி" என்றசொல்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

உலகிலுள்ள மற்ற பிரவாஹங்கள் சூரிய வெப்பத்தால் உண்டாகும் தாபத்தையே போக்கடிக்கும். இந்தப்பிரவாஹம் ஸம்ஸார பந்தத்தால் ஏற்படும் ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம்,

ஆதிபௌதிகம் என்ற பலவித தாபங்களையும் சமனம் செய்து விடும். ஆதலால் இந்தப்பிரவாஹம் மற்ற பிரவாஹங்களைவிட மிகமிகச் சிறந்ததாம். (2)

त्रयीवेद्यं हृद्यं त्रिपुरहरमाद्यं त्रिणयनं
जटाभारोदारं चलदुरगहारं मृगधरम् ।
महादेवं देवं मयि सदयभावं पशुपते
चिदालम्बं साम्बं शिवमतिविडम्ब हृदि भजे ॥ 3

த்ரயீவேத்3யம் ஹ்ருத்3யம் த்ரிபுரஹரமாத்3யம் த்ரிணயநம்
ஜடாப4ரோதா3ரம் சலது3ரக3 ஹாரம் ம்ருக3த4ரம் ।
மஹாதே3வம் தே3வம் மயி ஸத3யபா4வம் பசு1பதே
சிதா3லம்ப3ம் ஸாம்ப3ம் சி1வமதிவிட3ம்பம் ஹ்ருதி3 ப4ஜே (3)

த்ரயிவே3த்யம்-மூன்று வேதங்களால் அறியத்தகுந்தவரும், ஹ்ருத்3யம்-பக்தர்களுடைய ஹ்ருதயத்தில் தோன்றுகின்றவரும், த்ரிபுரஹரம் த்ரிபுரத்தை ஸம்ஹாரம் செய்தவரும் அல்லது ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் என்ற மூன்று சரீரங்களையும் அழிக்கின்றவரும். ஆத்3யம் சிருஷ்டிக்கு முன்பே இருக்கின்றவரும், த்ரிணயநம்-மூன்று நேத்திரங்களைப் பெற்றவரும், ஜடாப4ரோத3ாரம் அழகிய ஜடைகளால் கம்பீரமாகப் பிரகாசிக்கின்றவரும், சலது3ரக3ஹாரம். அசைந்தாடும் ஸர்ப்பங்களை ஹாரமாக அணிந்தவரும், ம்ருக3த4ரம்-மானைதரிக்கின்றவரும், மஹாதே3வம் எல்லாதேசத்திலும், எக்காலத்திலும், எல்லாமாகவும் இருந்துகொண்டு ஸ்வயம் ப்ரகாசிப்பவராயும், தே3வம் ஆனந்தஸ்வரூபராயும் மயி-என்னிடத்தில், ஸத3யபாவம் தயையுடன் கூடியவரும், பசு1பதிம் ஸமஸ்த ஜீவகோடிகளின் பந்தத்தை நிவிருத்தி செய்கின்றவரும், சித3ாலம்ப3ம்-ஆத்ம ஞானத்தை அடைவதற்கும் சாதனமாயும், ஸாம்ப3ம்-ஸ்ரீபார்வதியுடன் கூடியவரும், அதிவிட3ம்ப3ம்-உலகத்தாரைப் போல் பலகாரியங்களை அநுஷ்டிப்பவருமான சி1வம் ஸ்ரீபரமேச்வரனை, ஹ்ருதி31 மனதில்-ப3ஜே-தியானம் செய்கின்றேன்.

(க-ரை) முன்சுலோகத்தில் வேண்டிக் கொள்ளப்பட்ட சிவானந்தம் சிவபஜனத்தால் எற்படவேண்டியதாகையால் இந்த சுலோகத்தில் தானே சிவபஜனம் செய்கின்றார்.

த்ரிபுரஹரம் உபனிஷத்துக்களில் சரீரமே புரம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்தஸ்தூலசரீரம் உண்டாவதையும் அழிவதையும் நாம் அனைவரும் அறிவோம். நம் பார்வைக்கு எட்டாத "சூக்ஷ்மம்" "காரணம்" என்ற இருசரீரங்களும் அழிந்தால்தான் ஒருவன் முத்தியடைய முடியும். அதற்கு ஸ்ரீபரமேச்வரனுடைய அருளால் ஆத்மஞானம் உண்டாக வேண்டும். ஆதலால் அந்த மூன்று சரீரங்களையும் அழிப்பவர் ஸ்ரீபரமேச்வரன் என்று கூறப்படுகிறது.

ஆத்3யம்-ஸ்ரீபரமேச்வரன் ஜனனமரணமற்ற நித்யஸ்வரூபி யாதலால் சிருஷ்டிக்கு முன்பும் இருக்கின்றார் என உரைக்கப் பட்டிருக்கிறது.

மகாதே3வம்-மஹாம்ச்1சாஸௌ தே3வ:ச-மஹாதே3வ: மஹானும், தேவனும் இருக்கின்றார் என்பது பொருள்.

ஈசனைத்தவிர மற்ற எல்லா வஸ்துக்களும் குறிப்பிட்ட சில இடங்களிலும், குறிப்பிட்ட சில காலத்திலும், குறிப்பிட்ட சில வஸ்துஸ்வரூபத்துடனுமிருக்கின்றபடியால் அவை எல்லாம் கால-தேச-வஸ்து பரிச்சேதமுள்ள அற்பவஸ்துக்கள் ஆகும். ஈசனோ, எக்காலத்திலும் எல்லா இடங்களிலும், எல்லா வஸ்துக் களாகவும் இருக்கின்றபடியால் மேற்கூறிய மூன்றுவித பரிச்சே தங்கள் அற்ற மஹான் எனக்கூறப்படுகின்றார். மேலும் ஈசனைத் தவிரமற்ற பொருள்கள் எல்லாம் ஈசனுடைய தேஜஸ்ஸால் பிரகாசிக்கின்றன. ஈசனோ ஸ்வயம் பிரகாசர். அதையே **மஹாதே3வம்** என்ற சொல் குறிப்பிடுகிறது.

தே3வம்- "தி3வ்" என்ற தாதுவிற்கு ஆனந்தம் என்றும் ஓர் பொருள் உண்டு. அதையொட்டி ஆனந்த ரூபராயிருக் கின்றார் என்று கூறப்பட்டது. இதே தாதுவிற்குப் பிரகாசம் என்றுமற்றொரு பொருள். அதை அநுசரித்து "ஸ்வயம்ப்ரகாசர்" என்று "மஹாதேவம்" என்ற சொல்லில் உரைக்கப்பட்டது.

பசு1பதிம்- ஜீவர்கள் எல்லாம் பசுக்கள் என்றும் அவர்களுடைய பாசமாகிய அதிவித்யையை அகற்றி அவர் களுக்கு விடுதலையை அளிக்கின்றபடியால் ஸ்ரீபரமேச் வரன் பசுபதியாவார்.

சித1ாலம்ப3ம்- ஆத்மஸ்வரூபத்தை அறிந்துகொள்ள ஸ்ரீபரமேச்வரனுடைய அருளே காரணம்.

அதிவிட3ம்ப3ம்- இவ்விதமுள்ள ஸ்ரீபரமேச்வரனும் உலகமக்களைப்போல் விவாஹம்செய்து கொள்ளுவது போலவும்

தவம்புரிவது போலவும், குழந்தைகளுடன் கூடிக்களிப்பது போலவும் நடித்துக் காண்பிக்கின்றூர் அல்லாமல் அவற்றுல் உண்மையில் அவருக்கு சுகமோ துக்கமோ இல்லையென்பதுகருத்து.

ஹ்ருதி3 ப4ஜே- புத்தியை நல்வழியில் செல்லும்படி தாண்டவேண்டுமென்பதற்காக ஹ்ருதயத்தில் ஸ்ரீபரமேச்வரனை பஜிக்கின்றுர். 3

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदाः
न मन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् ।
हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं
चिरं याचे शम्भो शिव तव पदाम्भोजभजनम् ॥ 4

ஸஹஸ்ரம் வர்தந்தே ஜக3தி விபு3த4ா: க்ஷுத்3ரப2லத3ா:
நமந்யே ஸ்வப்நேவா தத3நுஸரணம் தத்க்1ருதப2லம்
ஹரிப்3ரும்ஹாதீ3நாமபி நிகடப4ாஜாமஸுலப4ம்
சிரம் யாசே ச1ம்பே4ா சி1வ தவ பத3ாம்பே4ாஜப4ஜநம் ॥ 4)

(ப-ரை) **ஹேசிவ-** ஏ பரமேச்வர! **ஜக3தி** உலகில் **க்ஷுத்3ரப2லத3ா:** அற்பபயன்களை அளிக்கக்கூடிய, **ஸஹஸ்ரம்** ஆயிரக்கணக்கான **விபுத4ா:-** தேவர்கள் **ஸந்தி-** இருக்கின்றனர். **(அஹம்-நான்,) ஸ்வப்நேவா-** சொப்பனத்தில் கூட, **தத3நுஸரணம்-** அவர்களை பஜனம் செய்வதையோ **தத்க்ருதபலம்-** அவர்கள் அளிக்கும் பயனையோ, **நமந்யே** பெரியதாகக்கருதவில்லை (ஆனல்) **நிகடப4ாஜாம்** சமீபத்திலேயே இருக்கின்ற **ஹரிப்ரும்ஹாதீ3நாமபி-** விஷ்ணு, ப்ரும்ஹா முதலியவர்களுக்குக் கூட, **அஸுலப4ம்-** மிகவும் அரிதான **தவ பதாம்பே4ாஜப4ஜநம்-** தங்களுடைய சரணாரவிந்த பஜனத்தையே, **சிரம்-** வெகுகாலம்வரை, **யாசே-** வேண்டிக் கொள்ளுகிறேன்.

(க-ரை) மற்ற தேவர்களைவிட சிவனே மிகச்சிறந்தவர் எனக்கருதி அவருடைய சரணாரவிந்த பஜனத்தையே இங்கு வேண்டிக்கொள்கிறுர்.

ப்ரும்ஹா, விஷ்ணு முதலிய தேவர்கள் உள்பட ஸ்ரீபரமேச்வர சேவைக்காக அவருடைய சமீபத்திலேயே காத்துக் கொண்டிருந்தும், அவருடைய சேவை சுலபமாகக் கிடைக்கக் கூடியதாக இல்லை என்பதால் ஸ்ரீபரமேச்வரன் மற்ற தேவர்களை

விடமிகச்சிறந்தவர் என்று ஏற்படுகிறது. ஆதலால் "அவருடைய சரணசேவையையே வெகுகாலம் வரை நான் செய்துகொண்டிருக்கவேண்டும்" என வேண்டிக்கொள்கிருர். மற்றதேவர்கள் எல்லாம் மிக அற்பமான பலத்தை அளிக்கக்கூடியவர்கள். ஆதலால் அவர்களுடைய சேவையை சொப்பனத்தில்கூட நான் விருப்பவில்லை என்பதால் ஜாக்கிரத் காலத்தில் விருப்பவில்லை என்பதைப்பற்றி சொல்லத் தேவையில்லை.

இவ்விதம் மற்றதேவர்களைப்பற்றி பேசுவது "நஹிநிந்தா3" நியாயப்படி ஸ்ரீபரமேச்வரனை மிகவும் புகழ்வதற்கல்லாமல் மற்றதேவர்களைப் பற்றி குறைகூறுவதற்கல்ல என்று அறிய வேண்டும்.

नहि निन्दा निन्द्यं निन्दितुं प्रवृत्ता, अपि तु स्तुत्यं स्तोतुम् ।

"ஒருவரை குறைத்துப்பேசுவதின் நோக்கம் மற்ளுருவரைப்புகழ்ந்து பேசுவதற்காகவே தவிர, அவரைக் குறைத்துக் கூறவேண்டுமென்பதற்காகவே அல்ல" என்பதே ஸம்ஸ்க்ருதத்தில் "நஹிநிந்தா3ந்யாயம்" எனப்படும்.

स्मृतौ शास्त्रे वैद्ये शकुनकविता‍गानफणितौ
पुराणे मन्त्रे वा स्तुतिपठनहास्येष्वचतुरः ।
कथं राज्ञां प्रीतिर्भवति मयि कोऽहं पशुपते
पशुं मां सर्वज्ञ प्रथित कृपया पालय विभो ॥ (5)

ஸ்ம்ருதௌ ச1ாஸ்த்ரே வைத்3யே ச1குநகவிதாக3ாநபணிதௌ
புராணே மந்த்ரே வா ஸ்துதிநடநஹாஸ்யேஷ்வசதுர: 1
கத2ம் ராஜ்ஞாம் ப்ரீதிர்ப4வதி மயி கோஹம் பசு1ப்தே
பசு1ம் மாம் ஸர்வஜ்ஞ ப்ரதி2த க்ருபயா பாலய விபே4ா ll (5

(ப-ரை)ஸ்ம்ருதௌ-ஸ்ம்ருதிகளிலோ, **ச1ாஸ்த்ரே**-தர்க்கம் வியாகரணம் முதலிய சாஸ்திரங்களிலோ, **வைத்3யே**-வைத்ய சாஸ்திரத்திலோ, **ச1குநகவிதாக3ாநபணிதௌ**- சகுன சாஸ்திரம், அழகான காவ்யங்களை இயற்றுதல், ஸங்கீதம், இவற்றையெல்லாம் ஸபையில் எடுத்து வெளியிடுதலிலோ, **புராணே**-சைவ வைஷ்ணவ புராணங்களிலோ, **மந்த்ரே வா**-மந்த்ர சாஸ்திரத்திலோ, **ஸ்துதிநடநஹாஸ்யேஷு**- பிறரைப் புகழ்ந்து பேசுதல், நாட்டியக்கலை, ஹாஸ்யம், இவைகளிலோ **அசதுர:**- தேர்ச்சியில்லாத, **அஹம்**-நான், **க:**- என்னமனிதன்?

அல்லது அனைவராலும் வெறுக்கத்தக்கவன். **மயி**- என்னிடம், **ராஜ்ஞாம்**- அரசர்களுக்கு **ப்ரீதி:**- பிரியம். **கத2ம்**- எவ்விதம் **ப4வதி**- உண்டாகும். (ஆகையால்) **பசு1பதே**- ஜீவராசிகளுக்கெல்லாம் ஈசனே! **ஸர்வஜ்ஞ- ப்ரதி2த- விபே4ா**- எல்லாமறிந்தவரும், வேதங்களால் கொண்டாடப்பட்டவரும், எல்லா இடங்களிலும் இருப்பவருமான ஏ பரமேச்வரா! **பசு1ம்**- பசுவைப்போல் ஒன்றையும் அறியாமல் திரிந்துகொண்டிருக்கும் **மாம்**- என்னை, **க்ருபயா**- கருணையால், **பாலய**- இரக்ஷியுங்கள்.

(க-ரை) நேரில் காணமுடியாததும், பிற்காலத்தில் பயனை அளிக்கக் கூடியதுமான தேவதைகளை பஜனம் செய்வதைவிட நேரில் காணக்கூடியவர்களும் விரைவில் பயனை அளிக்கக்கூடியவர்களுமான அரசன்: தனிகன் முதலியவர்களை நேசிப்பதே மிகச்சிறந்தது எனச்சிலர்கருதினால், அவர்களை நேசிப்பதில் விருப்பமில்லாததால் அதற்கு வேண்டிய கலைகளில் நான்தேர்ச்சி பெறவில்லை, எனக்கு வேண்டியது ஸ்ரீபரமேச்வர கிருபை ஒன்றே, என இந்த சுலோகத்தில் எடுத்துரைக்கிறார்:—

அரசர்களிடமோ அல்லது பிரபுக்களிடமோ பிரீதியை சம்பாதிக்கவேண்டுமானால், ஸ்மிருதிகள், சாஸ்திரங்கள் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவர்களுடைய பிரீதியை நான் விரும்பாததால் அவைகளில் நான் தேர்ச்சிபெறவில்லை. ஆகவே ஏ ஈசா! தாங்களே என்னிடம் கருணைபுரிந்து என்னை காத்தருளவேண்டும். 5

घटो वा मृत्पिण्डोप्यणुरपिच धूमोग्निरचलः
पटो वा तन्तुर्वा परिहरति किं घोरशमनम् ।
वृथा कण्ठक्षोभं वहसि तरसा तर्कवचसा
पदांभोजं शंभोभज परमसौख्यं व्रज सुधीः ॥ (6)

க4டோ வா ம்ருத்பிண்டே4ா ப்யணுரபிச தூமோக்3 கிரசல:
படோ வா தந்துர்வா பரிஹரதி கிம் கே4ாரச1மநம் ।
வ்ருத2ா கண்ட2 க்ஷோப4ம் வஹஸி தரஸா தர்க்கவசஸா
பத3ாம்போ4ஜம் சம்பே4ார்ப4ஜ பரம ஸௌக்2யம் வ்ரஜ ஸுதீ4: ।

(ப-ரை) **ஸுதீ4:**- ஏ மங்களகரமான புத்தியே! **க4ட: வா**- குடமோ, **ம்ருத்பிண்டே4ாபி** மண்ணுருண்டையோ. **அணுரபிச**- பரமாணுவோ, **தூம:**- புகையே, **அக்னி:**- நெருப்போ, **அசல:**- மலையோ, **படோவா**- துணியோ, **தந்துர்வா,**-

றாலோ, **கே4ாரச1மநம்**- மிகக்கொடியயமனை, **கிம்பரிஹரதி?**- தடைசெய்யுமா! (தடுக்காது, அப்படி இருக்க,) **தர்க்கவசஸா**- தர்க்கசாஸ்திரத்தில் பிரசித்தமான அநுமான மொழிகளால் **வ்ருத2ா**- வீணுக, **கண்ட2க்ஷோப4ம்**- தொண்டையின் வறட்சியை **வஹஸி**- அடைகின்ருய். **ச1ம்பே4ா:**- ஸமஸ்தசுகங்களுக்கும்காரணமானபரமேச்வரனுடைய, **பத3ாம்பே4ாஜம்** திருவடித்தாமரையை, **ப4ஜ**- பஜனம் செய். **தரஸா**- வெகுசீக்கிரத்தில், **பரமஸௌக்2யம்**- அழிவற்ற பேரானந்தத்தை (மோக்ஷசுகத்தை) **வ்ரஜ**- அடை.

(க-ரை) பலசாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ளாததன் காரணத்தை விளக்கும் முறையில் மனதைப்பார்த்துக்கூறுகிருர். ஸமஸ்தசாஸ்திரங்களையும் கற்றுக்கொள்ள தர்க்கசாஸ்திரம் மிக அவசியமானதால் அந்த சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற அடியிற் கண்ட பல சொற்களை திரும்பத்திரும்பக் கூறுவார்கள் "பர்வத: மலை:- தூம:- புகை, அக்3னி:- நெருப்பு, க4ட:- குடம், ம்ருத் பிண்ட3:" மண்உருண்டை, அணு:-பரமாணு, பட:-துணி, தந்து:- நூல், முதலிய சொற்களைக்கொண்டு, அநுமானங்களையும், கார்யகாரண பாவங்களையும் நிருபணம் செய்வார்கள். இவற்றையெல்லாம் திரும்பத்திரும்பச் சொல்லி வருவதால் தொண்டை வறண்டுபோகுமல்லாமல், அனைவருக்கும் அவசியம் உண்டாகக் கூடிய யமபயத்தைத்தீர்க்க முடியாது. அதைத்தீர்க்கவேண்டுமானல், ஸ்ரீபரமேச்வர சரணரவிந்த பஜனத்தையே செய்தாக வேண்டும். அப்படிச் செய்தால் விரைவில் அழிவற்ற பேரானந்தத்தை அடைவது திண்ணம். 6

मनस्ते पादाब्जे निवसतु वचः स्तोत्रफणितौ
करश्चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे
परग्रन्थान् कैर्वा परमशिव जाने परमतः ॥ (7)

மநஸ்தே பாத3ாப்3ஜே நிவஸது வச: ஸ்தோத்ரப2ணிதௌ
கர: சாப்4யர்சாயாம் ச்1ருதிரபி கத2ாகர்ணநவிதௌ4 ।
தவ த்4யாநே பு3த்3தி4ர் நயநயுக3லம் மூர்த்திவிப4வே
பரக்3ரந்த2ாந் கைர்வா பரமசிவ ஜாநே பரமத: ॥ 7

(ப-ரை) **பரமசிவ**- ஏ பரமசிவ **தே**- தங்களுடைய, **பாத3ாப்3ஜே**- தாமரைபோன்ற திருவடியில், **மந:**-என்னுடைய மனம், **நிவஸது**- வசிக்கட்டும். **வச:**- என்னுடையவாகிந்திரியம்

ஸ்தோத்ரப2ணிதௌ- தங்கள் ஸ்தோத்திரங்களைச் சொல்வதிலேயே (நிலைபெற்றிருக்கட்டும்) கர:ச- எனது கையும், அப்4யர் சாயாம்- தங்களை பூஜிப்பதிலேயே, ச்1ருதிரபி- காதும், கத2ாகர்ணநவிதௌ- தங்கள் கதையைக் கேட்பதிலேயே, (ஈடுபட்டிருக்கட்டும்) பு3த்3தி4:- எனது புத்தியும், தவ த்4யாநே- தங்களை தியானம் செய்வதிலேயே, நிலைபெற்றிருக்கட்டும். நயனயுக3லம்- என் இரு கண்களும், மூர்த்திவிப4வே- (தங்கள்) சரீரத்தின் சோபையைப் பார்ப்பதிலேயே (ஈடுபட்டும்) (இவ்விதம் எல்லா இந்திரயங்களும் தங்கள் விஷயத்திலேயே ஈடுபட்டுவிட்டால்) அத:பரம்- அதற்குப்பின், பரக்3ரந்த2ாந்- இதைத்தவிர மற்றவிஷயங்களைக் கூறும் நூல்களை கைர்வா- எந்த இந்திரியங்களால், ஜாநே- அறிவேன்.

(கூ-ரை) இவ்விதம் முன்சுலோகத்தில் புத்தியை பரமேச்வரபஜனத்திலேயே ஈடுபடும்படி உரைத்துவிட்டு இங்கு மற்ற இந்திரியங்களும் ஸ்ரீபரமேச்வர பஜனத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டுமென்றும், வேறுவிஷயங்களை நிரூபணம் செய்யும் நூல்களை நாடாமலிருக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறார். 7

यथाबुद्धिः शुक्तौ रजतमिति काचाश्मनि मणिः
जले पैष्टे क्षीरं भवति मृगतृष्णासु सलिलम् ।
तथा देवभ्रान्त्या भजति भवदन्यं जडजनो
महादेवेशं त्वां मनसि च न मत्वा पशुपते ॥ 8

யத2ா பு3த்3தி4: சுக்தௌ ரஜதமிதி காசாச்1மநி மணி:
ஜலே பைஷ்டே க்ஷீரம் ப4வதி ம்ருக3த்ருஷ்ணாஸு ஸலிலம் 1
தத2ா தே3வப்4ராந்த்யா ப4ஜதி ப4வத3ந்யம் ஜட3ஜநோ
மஹாதே3வேசம் த்வாம் மநஸி ச நமத்வா பசு1பதே ll

(ப-ரை) ஏமஹாதேவ! ஏபசுபதே! ஜடஜந:- தங்கள் ஸ்வரூபத்தை அறியாத மூடஜனங்கள், த்வாம்- தங்களை, ஈச1ம்- எல்லாவற்றையும் அடக்கி ஆளக்கூடியவராக, மநஸி ந மத்வா மனதால் அறிந்து கொள்ளாமல் சுக்தௌ- முத்துச்சிப்பியில் யத2ா- எவ்விதம், ரஜதமிதி- வெள்ளியென்ற, பு3த்3தி4:- அறிவும், காசாச்1மநி- மணிபோல் தோன்றும் ஒருவிதக்கல்லில், மணிரிதி- மாணிக்யம் என்ற எண்ணமும், பைஷ்டே- மாவு கலந்த ஜலத்தில், க்ஷீரம்- பால் என்ற எண்ணமும், ம்ருக3த்ருஷ்ணாஸு- கானலில், ஸலிலம்- ஜலம், என்ற எண்ணமும்

தோன்றுகின்றதோ, **தத2ா-** அவ்விதமே, **தே3வப்4ராந்த்யா-** தேவன் என்ற பிரமத்தால், **ப4வதந்யம்-** தங்களைத்தவிர மற்ற வரை, **ப4ஜதி-** ஸேவிக்கின்றார்கள்.

(க-ரை) ஸ்ரீபரமேச்வர பஜனத்தாலேயே எல்லாவித பயன்களும் சித்திக்குமானால் சிலர் மற்ற தேவர்களை ஏன் பஜனம் செய்கின்றனர் என்றால் ஸ்ரீபரமேச்வரனுடைய தத்துவத்தை அறியாததுதான் அதற்குகாரணம் என்று இங்கு கூறுகிறார்:-

முத்துச்சிப்பி என்று அறிந்துவிட்டால் பிறகு அங்கு வெள்ளி என்ற எண்ணம் உண்டாகாது இதேபோல் மற்ற பிரம ஸ்தலங்களிலும் எதைக்கண்டு பிரமிக்கின்றானோ அதன் உண்மை புலப்பட்டுவிட்டால் பிறகு அங்கு பிரமம் என்பதே உண்டாகாது. அதுபோல் ஸ்ரீபரமேச்வரனுடைய உண்மையான ஸ்வரூபத்தை அறிந்துகொள்ளாமல் மற்றவர்களை தேவர்கள் என்று பிரமிக்கின்றனர் மூடர்கள்.

गभीरे कासारे विशति विजने घोरविपिने
विशाले शैले च भ्रमति कुसुमार्थं जडमतिः ।
समर्प्यैकं चेतःसरसिजमुमानाथ भवते
सुखेनावस्थातुं जन इह न जानाति किमहो ॥ 9

க3பீ4ரே காஸாரே விச1தி விஜநே கே4ாரவிபிநே
விச1ாலே சை1லேச ப்4ரமதி குஸுமார்த்தம் ஜட3மதி: ।
ஸமர்ப்யைகம் சேத:ஸரஸிஜமுமாநாத2 ப4வதே
ஸுகே2நாவஸ்த2ாதும் ஜந இஹ ந ஜாநாதி கிமஹோ ॥

(ப-ரை) க3பீ4ரே- ஆழமான, **காஸாரே-** குளத்திலும், **விஜனே-** ஜனங்களற்ற, **கே4ாரவிபினே** பயங்கரமான காட்டிலும், **விசாலே** விஸ்தாரமான, **சை1லேச-** மலையிலும், **ஜட3மதி:** சுலபமான உபாயத்தை அறியாத மூடன், **குஸுமார்த்த2ம்-** புஷ்பத்திற்காக, **ப்4ரமதி-** சுற்றுகிறான். **உமாநாத-** ஏ பார்வதீபதே! **ஏகம்** ஒரு, **சேதஸ்ஸரஸிஜம்-** மனதாகிரத்தாமரையை, **ப4வதே** தங்களுக்கு **ஸமர்ப்ய-** அளித்து, **ஜந.-**மனிதன், **இஹ-** இவ்வுலகில் ஒரே இடத்தில் **ஸுகே2ந-** சுகமாக, **அவஸ்த2ாதும்-** அசையாமலிருக்க, **நஜாநாதி** அறியவில்லையே, **கிமஹோ-** என்ன ஆச்சரியம்?

(க-ரை) ஸ்ரீபரமேச்வரனை பஜனம் செய்ய சுலபமான ஓர் உபாயத்தை இங்கு எடுத்துரைக்கிறார்;-

விஷயமறியாதவர்கள் பரமேச்வர பூஜைக்கென்று புஷ்பங்களைக்கொண்டுவர, காடுகளிலும், மலைகளிலும், குளங்களிலும் சுற்றிக்கொண்டிருக்கின்றனர். அது அவசியமே இல்லை. அதனால் சிரமம் அதிகம். பயன் மிகக்குறைவு. மனதாகிற தாமரைப்புஷ்பம் நம்மிடமே இருக்கின்றது. அதைக்கொண்டுவர வேறு இடத்திற்குச் செல்லவேண்டிய அவசியமே இல்லை. அந்த ஒரேபுஷ்பத்தைபரமேச்வரனுக்கு அர்ப்பணம் செய்தால் சுகமாக ஒரேஇடத்திலேயே வீற்றிருக்கலாம். அதாவது மோக்ஷம் என்ற நித்ய சுகத்தைப்பெற்று ஜனனமரணமற்ற ஒரே நிலையிலேயே இருக்கலாம். இந்த சுலபமான உபாயத்தை மூடஜனங்கள் அறியாதது மிகவும் ஆச்சரியம். மனதைஅர்ப்பணம் செய்யாமல் பல புஷ்பங்களைப் பறித்து அர்ப்பணம் செய்தும் பயனில்லை.

உமாநாத:- இவ்வாறு ஸம்போதனம் செய்வதால் பராசக்தியுடன் கூடிய ஸ்ரீபரமேச்வரனையே உபாஸிக்கவேண்டுமென்பதை சூசனம் செய்கின்றார்.

नरत्वं देवत्वं नगवनमृगत्वं मशकता
पशुत्वं कीटत्वं भवतु विहगत्वादिजननम् ।
सदा त्वद्पादाब्जस्मरणपरमानन्दलहरी -
-विहारासक्तं चेद्हृदयमिह किं तेन वपुषा ॥ 10

நரத்வம் தேவத்வம் நக3வநம்ருக3த்வம் மசகதா
பசுத்வம் கீடத்வம் ப4வது விஹக3த்வாதி3ஜநநம் ।
ஸதா3 த்வத் பாத3ாப்3ஜஸ்மரணபரமாநந்த3லஹரீ-
விஹாராஸக்தம் சேத்4 ஹ்ருத3யமிஹ கிம் தேந வபுஷா ॥ 10

(ப-ரை) **நரத்வம்**- மனிதத்தன்மையோ, **தே3வத்வம்**- தேவத்தன்மையோ **நக3வநம்ருக3த்வம்** மலையிலும்காட்டிலும் சுற்றித்திரியும் மிருகமாக இருக்குந்தன்மையோ, **மசகதா**- கொசுவாக இருக்குந்தன்மையோ, **பசுத்வம்**- வீடுகளில் வசிக்கும் பசுவாக இருக்கும் தன்மையோ, **கீடத்வம்**- புழுவாக இருக்கும் தன்மையோ, **விஹக3த்வாதி3ஜநநம்**- பக்ஷியாக இருக்குந் தன்மை முதலியவற்றில் பிறவியோ **ப4வது**- சம்பவிக்கட்டும் (ஏபரமேச்வரா? **இஹ**- மேற்படி பிறவிகளில், **ஸதா3**- எப்பொழுதும், **ஹ்ருத3யம்**- என் மனது **த்வத்பாத3ாப்4 ஜஸ்மரணபரமாநந்த3லஹரீவிஹாராஸக்தம் சேத்**- தங்கள் சரணாரவிந்த ஸ்மரணத்தால் உண்டாகும் பேரின்ப பிரவாஹத்திலேயே மூழ்கிக்கிடப்பதில் ஈடுபட்டிருக்குமேயாகில், **தேந வபுஷா**- அந்த உடலால் **கிம்?**- என்ன குறை?

(க-ரை) ஜன்மாந்தரத்தில் செய்த புண்ணிய பாவத்தால் உயர்ந்ததாயும் தாழ்ந்ததாயும் உள்ள பல பிறவிகள் எற்படினும் எல்லா பிறவிகளிலும் மனது ஸ்ரீ பரமேச்வரனுடைய சரணாவிந்தங்களிலேயே ஈடுபடவேண்மென்று வேண்டிக்கொள்ளுகிறார்:-

बटुर्वा गेही वा यतिरपि जटी वा तदितरो
नरो वा यः कश्चिद् भवतु भव किं तेन भवति ।
यदीयं हृत्पद्मं यदि भवदधीनं पशुपते
तदीयस्त्वं शम्भो भवसि भवभारं च वहसि ॥ 11

வடுர்வா கே3ஹீவா யதிரபி ஜடீவா ததி3தரோ
நரோ வா ய: க: ச்1சித் ப4வது ப4வ கிம்தேந ப4வதி 1
யதீ3யம் ஹ்ருத்3 பத்3மம் யதி3 ப4வத3தீ4நம் பசு1பதே
ததீயஸ்த்வம் ச1ம் பே4ா ப4வஸி ப4வபா4ரம் ச வஹஸி ll 11

(ப-ரை) **வடுர்வா**- பிரும்ஹசாரியாகவோ, **கே3ஹீவா**- கிருஹஸ்தனுகவோ, **யதிர்வா**- சன்னிசியாகவோ, **ஜடீவா**- வாநப்ரஸ்தனுகவோ, **ததி3தர:**- அவர்களைத்தவிர **ய:க:சித்வா**- வேறுயாராகவோ, **ப4வது** இருக்கட்டும். **ப4வ!**-ஏ பரமேச்வர! **தேந**- அதனுல், **கிம் ப4வதி?**- என்ன காரியம் நடைபெற்று விடும்? **பசு1பதே**- ஸர்வபிராணிகளுக்கும் நாயகனுன ஏ சம்போ! **யதீ3யம்**- எவரைச்சேர்ந்த **ஹ்ருத்பத்3மம்**- தாமரை போன்ற ஹ்ருதயம், **ப4வத3தீ4நம் யதி3**- தங்களிடமே ஈடுபட்டதாக இருக்குமோ, **ததீ4ய:**- அவரைச்சேர்ந்தவராக, **த்வம்**- தாங்கள் **பவ4ஸி**- ஆகின்றீர்கள். **ச1ம்பே4ா**- ஏ பரமேச்வரா, **ப4வ ப4ாரம்ச**- அவருடைய ஸம்ஸார பாரத்தையும், **வஹஸி**- வஹிக்கின்றீர்கள்.

(க-ரை) ஒருவனுடைய மனது ஸ்ரீ பரமேச்வரனிடம் ஈடுபடவில்லை யென்றுல், பிருஹ்மசர்யம், கார்ஹஸ்தயம் முதலிய ஆசிரமங்களின் தர்மங்களை முறைப்படி அவன் அனுஷ்டித்தும், பயனில்லை. மனது ஈடுபட்டிருக்கும் பக்ஷத்தில் ஆசிரம தர்மானுஷ்டானத்தின் பூர்ண பயனையும் அவன் அடைவதுடன், ஸம்ஸார வாழ்க்கையையும் சுகமாகவே நடத்திவருவான். (11

गुहायां गेहे वा बहिरपि वने वाद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम् ।
सदा यस्यैवान्तःकरणमपि शम्भो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी ॥ 12

குஹாயாம் கேஹேவா பஹிரபி வநே வாத்ரிசிகரே
ஜலே வா வஹ்நௌ வா வஸது வஸதே: கிம் பலம் ।
ஸதா யஸ்யை வாந்த: கரணமபி சம்போ தவ பதே
ஸ்திதம் சேத்யோகோஸௌ ஸச பரமயோகீ ஸசஸுகீ ॥

(ப-ரை)குஹாயாம்- குகையிலோ, கே3ஹே- வீட்டிலோ, ப3ஹிரபி- வெளியிலோ, வநே வா- காட்டிலோ, அத்3ரிசிக2ரே- மலையின் உச்சியிலோ, ஜலேவா- ஜலத்திலோ, வஹ்நௌவா- ஐந்து அக்னிகளுக்கும் நடுவிலோ (ஒருவன் நான்கு பக்கங்களிலும் அக்னிகளை வளர்த்துக்கொண்டு ஆகாயத்திலுள்ள சூரியனையும் பார்த்துக்கொண்டிருந்தால் அவன் பஞ்சாக்னி மத்தியில் இருப்பவனாகக் கருதப்படுவான்) வஸது- வசிக்கட்டும், வஸதே:- அவ்விதம் வசிப்பதால், கிம் ப2லம்?- என்ன பயன்? வத3- சொல். ச1ம்பே4- ஏ பரமேச்வர! யஸ்ய-எவனுடைய, அந்த: கரணமபி- மனதும்கூட, ஸத3ா-எப்பொழுதும், தவ- தங்களுடைய, பதே- அடிகளில், ஸ்தி2தம் சேத்- நிலைபெற்றிருக்குமேயாகில், அஸௌ- இதுவே, யோக3:- சிறந்த யோகம். ஸச- அவ்வித மனதை உடையவனே, பரமயோகீ3- சிறந்த யோகீ. (நிர்விகல்ப ஸமாதியைஅடைந்தவன்) ஸச- அவனே, ஸுகீ3- பேரின்பத்தைப் பெற்றவனாகவும் (ஆகின்றான்)

9, 10, 11, 12, இந்த நான்கு சுலோகங்களிலும் ஸ்ரீபரமேச்வரனிடம் மனது ஈடுபடவேண்டுமென்பதே பலவிதமாக வேண்டிக்கொள்ளப்படுகிறது. 9-வது சுலோகத்தில் பலவித புஷ்பங்களை எடுத்து அர்ச்சனை செய்வதைவிட மனதை ஸ்ரீ பரமேச்வரனிடம் அர்ப்பணம் செய்வதே மிகச்சிறந்தது என்றும் 10-வது சுலோகத்தில், எப்பிறவியிலும் மனது ஸ்ரீ பரமேச்வரனிடமே நிலைபெற்றிருக்கவேண்டும் என்றும், 11-வது சுலோகத்தில் எந்தஆசிரமத்திலும் அவரிடமே மனதுஇருக்கவேண்டுமென்றும் கூறிவிட்டு இங்கு எந்த இடத்தில் வாசஞ்செய்தபோதிலும், மனது ஸ்ரீ பரமேச்வரனிடமே ஈடுபட்டிருந்தால் அதுவே சிறந்த யோகம் என்றும், அதுவே நிகரற்ற சுகம் என்றும் கூறப்படுகிறது. யோகாநுஷ்டானத்திற்கென்றும், தவத்திற்கென்றும், மலையிலும், குகையிலும், காட்டிலும், ஜலத்திற்குள்ளும், பஞ்சாக்னி மத்தியிலும், பலர் வாசஞ்செய்யக்கூடும். அதனால் மட்டும் எவ்வித பயனும் சித்திக்காது. அவர்களுடைய மனதும் ஸ்ரீ பரமேச்வரனுடைய சரணாரவிந்தங்களில் ஈடுபட்டிருந்தால் அதுதான் சிறந்த யோகமாக ஆகும். அதனால் சிறந்த சுகத்தையும் பெறமுடியும். (12)

असारे संसारे निजभजनदूरेऽजड धिया
भ्रमन्तं मामन्धं परमकृपया पातुमुचितम् ।
मदन्यः कोदीनस्तव कृपणरक्षातिनिपुणः
त्वदन्यः को वा मे त्रिजगति शरण्यः पशुपते ॥ 13

அஸாரே ஸம்ஸாரே நிஜப4ஜநதூ3ரே ஜட3தி4யா
ப்4ரமந்தம் மாமந்த4ம் பரம க்ருபயா பாதுமுசிதம், 1
மத3ந்ய: கோ தீ3நஸ்தவ க்ருபண ரக்ஷாதிநிபுண:
த்வத3ந்ய: கோவா மே த்ரிஜக3தி ச1ரண்ய: பசு1பதே ll 13

(ப-ரை) பசு1பதே- விவேகமற்றவர்களுக்கு ஞானத்தை அளித்து இரக்ஷிக்கின்றவரே! அஜட3- ஜடமான தேஹம் முதலிய வற்றைக்காட்டிலும் வேறானவரே! பரம- எல்லாவற்றையும் விடமிகச்சிறந்தவரே!, அஸாரே- எவ்வித சாரமுமற்றதும், நிஜப4ஜநதூரே- ஆத்மஸ்வரூபமாகிற ஸ்ரீபரமேச்வர பஜனத்தை வெகுதூரத்தில் உடையதுமான, ஸம்ஸாரே- இந்த ஸம்ஸாரத்தில் ப்4ரமந்தம் "எதோசார மிருக்கின்றது" என்ற பிரமத்தால் சுற்றிக்கொண்டிருப்பவனும், அந்த4ம் – ஆத்மாநாத்ம விவேக மற்றவனுயுமுள்ள, மாம்- என்னை, க்ருபயா- கருணைபுரிந்து, பாதும் ஆத்மஞானத்தை அளித்து இரக்ஷிப்பதுதான் உசிதம்- நியாயம். மத3ந்ய: – என்னைத்தவிர வேறான, க:- எவன்தான், தீ3ந:- ஸம்ஸாரதாபத்தால் அவ்வளவு துன்பமடைந்தவன், தவ- தங்களுக்கு இரக்ஷிக்கக் கூடியவனாக இருக்கின்றான்? க்ருபணரக்ஷாதிநிபுண:- ஆத்ம ஞானமற்றவர்களை இரக்ஷிப்பதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவரும், மே- எனக்கு, சரண்ய:- இரக்ஷகராயும், த்ரிஜகதி:- மூவுலகங்களிலும் த்வத3ந்ய:- தங்களைத்தவிர வேறான, க:- யார்தான (இருக்கின்றார்கள்)

(க-ரை) சொற்ப சுகங்கூட இல்லாத இந்த சம்சாரத்தில், ஆத்மானாத்ம விவேகமற்ற நான் தங்களை பஜனம் செய்யாமல் இந்த சம்சாரத்திலேயே சுகங்களை அநுபவிக்கலாம் என்ற எண்ணங்கொண்டு இங்குமங்கும் வீணாகசுற்றிக்கொண்டிருக்கிறேன். கிருபைபுரிந்து தாங்கள் எனக்கு ஆத்ம ஞானத்தை அளித்து என்னை இரக்ஷிக்கவேண்டும். மூவுலகங்களிலும் என்னைவிட துன்புற்றவனையும் தாங்கள் பார்க்க இயலாது. தங்களைத்தவிர வேறு ஒரு இரக்ஷகனையும் நான் அடையமுடியாது. ஆகலால் என்னை தாங்களேதான் இரக்ஷித்தாகவேண்டும். தங்களால் இரக்ஷிக்கப் படவேண்டியவர்களுள் நானே தான் முதல்வன்.

கிருபணன்- என்று இங்கு ஆத்ம ஞானமற்றவனையே குறிப்பிடுகிறார். சாதாரணமாக கையிலிருக்கும் பொருளை உபயோகப்படுத்தாமல் கஷ்டப்படுகின்றவனை கிருபணன் எனக் கூறுவதுண்டு. தன்னிடத்திலேயே உள்ள ஆனந்தஸ்வரூபமான ஆத்மாவை அறியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களையும் இங்கு கிருபணன் எனக்குறிப்பிடுகிறார். உபனிஷத்துகளிலும், பகவத்கீதையிலும்கூட இம்மாதிரிகூறப்பட்டிருக்கிறது.

प्रभुस्त्वं दीनानां खलु परमबन्धुः पशुपते
प्रमुख्योऽहं तेषामपि किमुत बन्धुत्वमनयोः ।
त्वयैव क्षन्तव्याश्शिव मदपराधाश्च सकलाः
प्रयत्नात्कर्तव्यं मदवनमियं बन्धुसरणिः ॥ 14

ப்ரபு4ஸ்த்வம் தீ3நாநாம் க2லு பரமப3ந்து4: பசு1பதே,
ப்ரமுக்2யோஹம் தேஷாமபி கிமுத ப3ந்து4த்வ மநயோ: ।
த்வயைவ க்ஷந்தவ்யா: சி1வ மத3பராத4ா: ச ஸகலா:
ப்ரயத்நாத் கர்தவ்யம் மத3வநமியம் ப3ந்து4 ஸரணி: ॥ 14

(ப-ரை) பசுபதே!- ஏபரமேச்வர! த்வம்- தாங்கள் ப்ரபு4:- ஏழைகளின்ஏழ்மையைத்தீர்க்க வல்லவர் (ஆதலால்) தீ3நாநாம் ஏழைகளுக்கு பரமப3ந்து4: க2லு- மிகநெருங்கிய பந்து என்று பிரசித்திபெற்றிருக்கிறீர். தேஷாம்- அந்த ஏழைகளுள், அஹம்- நான், ப்ரமுக்2ய:- முதல்வனாக இருக்கிறேன். ஆதலால் அநயோரபி- நம்மிருவர்களுக்கும் கூட ப3ந்து4த்வம்- நெருங்கினஉறவு (இருக்கின்றது என்று) கிமுத- சொல்லவும் வேண்டுமா! சி1வ- மங்கள ஸ்வரூபியான ஏபரமேச்வரா! ஸகலா: மத3பராத4ா: என் குற்றங்கள் எல்லாம், த்வயா- தங்களால், க்ஷந்தவ்யா ஏவ- பொருத்துக் கொள்ளப்பட வேண்டியவைகளே. ப்ரயத்நாத்- மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டாவது, மத3வநம்- என்னை இரக்ஷித்தல் என்பது, கர்த்தவ்யம்- செய்யப்படவேண்டும். இயம்- இதுதான், ப3ந்து4ஸரணி:- பந்துக்களின் முறை.

(க-ரை) சுருதி, ஸ்மிருதி, முதலியவற்றில் கூறப்பட்ட கர்மாக்கள் எல்லாம் என்னுடைய கட்டளை. அவற்றை அனுஷ்டிக்காததால் நீ குற்றவாளியாக இருக்கிறாய். உன்னை நான் எப்படி இரக்ஷிக்கமுடியும்! என பரமேச்வரன் கூறும் பக்ஷத்தில் அதற்கு ஸமாதானமாக, "நாமிருவரும் மிக நெருங்கிய பந்துக்கள், ஆதலால் என்னுடைய குற்றங்களை கவனிக்காமல் என்னை இரக்ஷிக்கத் தாங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்எனக்கூறுகிறார்.

उपेक्षा नो चेत्किं न हरसि भवद्ध्यानविमुखां
दुराशाभूयिष्ठां विधिलिपिमशक्तो यदि भवान् ।
शिरस्तद्वैधात्रं ननखलु सुवृत्तं पशुपते
कथं वा निर्यत्नं करनखमुखेनैव लुलितम् ॥ (15)

உபேக்ஷா நோசேத் கிம் ந ஹரஸி ப4வத்3த்4யாநவிமுகா2ம்
து3ராசா1பூ4யிஷ்டா2ம் விதி4லிபி மச1க்தோ யதி3 ப4வாந்|
சி1ரஸ்தத்3வைதா4த்ரம் நநக2லு ஸுவ்ருத்தம் பசு1பதே
கத2ம் வா நிர்யத்நம் கரநக2முகே2நைவ லுலிதம் || (15)

(ப-ரை) **பசு1பதே-** எபரமேச்வரா! **உபேக்ஷா-** (என்னிடம் தங்களுக்கு) கவனமில்லாமலிருத்தல், **நோசேத்-** இல்லையேல், **து3ராசா1பூ4யிஷ்டா2ம்-** கெட்ட விஷயங்களில் அதிக ஆசையை அளிப்பதாயும், **ப4வத்3த4யாநவிமுகா2ம்-** தங்களுடைய தியானத்தில் வெறுப்பை ஏற்படுத்துகின்றதுமான, **விதி4லிபிம்-** பிரும்ஹா எழுதிய எழுத்தை, **கிம்நஹரஸி?** ஏன் அழிக்கவில்லை? **ப4வாந்-** தாங்கள், **அச1க்தோயதி3-** சக்தியற்றவர் என்று சொல்லுவீர்களேயாகில், **தத்-** மிகப்பிரசித்தமாயும், **நநக2லு-** நகத்தால் கிள்ளி எறிய முடியாததுமான, **வைதா4த்ரம்- சி1ர:-** பிரும்ஹாவைச்சேர்ந்த (ஐந்தாவது) தலை, **நிர்யத்நம்-** அநாயாசமாக, **கரநக2முகே2நைவ-** கைநகத்தின் நுனியாலே, **கத2ம்வா-** எப்படி, **லுலிதம்-** கிள்ளி எறியப்பட்டது?

(க-ரை) எபரமேச்வரா? என்னை தாங்கள் கொஞ்சங்கூட கவனிக்காமல் இருக்கின்றீர்கள் என்று தோன்றுகிறது. கவனித்திருக்கும் பக்ஷத்தில் தங்களை இடைவிடாமல் தியானம் செய்யாமலும், கெட்ட விஷயங்களில் அதிக ஆசை கொண்டவனாகவும் நான் இருக்கவேமாட்டேன். "உன் தலையில் எழுத்து, நீ அவ்விதம் இருக்கின்றாய், அதற்கு நான் என்ன செய்யலாம்?" என்று தாங்கள் கூறினால் அதுவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அந்த எழுத்தையும் தாங்களே அழித்துவிடலாமே. அது தங்களால் செயயமுடியாத காரியம் என்றும் சொல்ல முடியாது. பிரும்ஹாவின் ஐந்தாவது தலையை நகத்தால் அனாயாசமாக கிள்ளி எறிந்த தங்களுக்கு பிரும்ஹா எழுதிய என் தலைஎழுத்தை அழிப்பது ஓர் பெரிய காரியமா? ஆதலால் எல்லாம் வல்ல தாங்கள் என்னை அவசியம் இரக்ஷித்தே ஆகவேண்டும். (15)

विरिञ्चिर्दीर्घायुर्भवतु भवतां तत्परशिर-
श्चतुष्कं संरक्ष्यं स खलु भुवि दैन्यं लिखितवान् ।

विचारः को वा मां विशद कृपया पाति शिव ते
कटाक्षव्यापारः स्वयमपि च दीनावनपरः ॥ (16)

விரிஞ்சிர்தீ3ர்க4ாயுர் ப4வது ப4வதா தத்பரசிர-
ச்1சதுஷ்கம் ஸம்ரக்ஷ்யம் ஸக2லு பு4வி தை3ந்யம் லிகி2தவாந்l
விசார: கோவா மாம் விச1த3 க்ருபயா பாதி சிவ தே
கடாக்ஷவ்யாபார: ஸ்வயமபி ச தீநாவநபர: ॥ (16)

(ப-ரை) விசத3- களங்கமற்றவரும், சி1வ- ஆனந்தஸ்வரூபியுமான ஏபரமேச்வரா? விரிஞ்சி:- பிரும்மா, தீ3ர்க4ாயு:- நீண்ட ஆயுளுடையவராக, ப4வது- இருக்கட்டும். ப4வதா- தங்களால் தத்பரசி1ர:சதுஷ்கம்- அவருடைய மற்ற நான்கு தலைகளும், ஸம்ரக்ஷ்யம்,காப்பாற்றப்படவேண்டும். ஸ:- அந்தபிரும்ஹா,பு4வி இப்பூமண்டலத்திலுள்ளவர்களுக்கு, தை3ந்யம்- ஏழ்மையை லிகி2தவாந் க2லு- எழுதியிருக்கின்றார் அல்லவா? தீ3நாவநபர:- ஏழைகளை இரக்ஷிப்பதில் ஈடுபட்ட, தே கடாக்ஷவ்யாபார:- தங்கள் கடைக்கண்களின் வியாபாரம், ஸ்வயமபி- தானே, மாம்- என்னை க்ருபயா- கருணைபுரிந்து, பாதி- இரக்ஷிக்கின்றது. கோ வா விசார:- இவ்விஷயத்தில் ஆலோசனை எதற்கு?

(க-ரை) "பிரும்மதேவன் உன் தலையில் நீ எழையாக இருக்கக்கடவாய் என்று எழுதிவிட்டார். உன்னை நான் எப்படி இரக்ஷிக்கமுடியும்?" என பரமேச்வரன் கூறினல் அதற்கு இங்கு பதில் உரைக்கின்ருர். என்னை எழையாக இருக்கும்படி என் தலையில் எழுதிய ஸ்ரீபிரும்மதேவன் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும். அவருடைய ஐந்தாவது தலையை வெட்டித்தள்ளியது போல் மற்ற நான்கு தலைகளையும் தாங்கள் வெட்டக்கூடாது. அவைகளை அவசியம் தாங்கள் இரக்ஷிக்கவேண்டும். ஏனென்ருல் அவர் என் தலையில் எழையாக இருக்கும்படி எழுதியதால் எனக்கு அவர் மிகவும் உதவிபுரிந்தவராக ஆகின்ருர். அது எப்படி என்ருல், தங்களுடைய கடாக்ஷம் எழைகளிடம் இரக்கங்கொண்டு அவர்களை இரக்ஷிப்பதிலேயே ஈடுபட்டிருக்கிறது. பிரும்மதேவன் என்னை எழையாகப்படைத்ததால்தான் தங்கள் கடாக்ஷம் தானுகவே என்னைக்காக்கக்கூடும். ஆதலால் தங்களுக்கு என்னை இரக்ஷிக்கலாமா? கூடாதா? என்ற கவலை வேண்டாம்.

அதாவது நான் மிக தீனனுக இருப்பதே தாங்கள் என்னை இரக்ஷிப்பதற்கு ஓர் சிறந்த காரணம். இதில் ஆலோசிக்கவேண்டியது என்ன இருக்கிறது? (16)

फलाद्वा पुण्यानां मयि करुणया वा त्वयि विभो
प्रसन्नेऽपि स्वामिन् भवदमलपादाब्जयुगलम् ।
कथं पश्येयं मां स्थगयति नमस्संभ्रमजुषां
निलिम्पानां श्रेणिर्निजकनकमाणिक्यमकुटैः ॥ (17)

ப2லாத்3வா புண்யாநாம் மயி கருணயா வா த்வயி விபே4ா
ப்ரஸந்நேபி ஸ்வாமிந் ப5வத3மலபாத3ாப்3யுக3லம் ।
கத2ம் பச்1யேயம் மாம் ஸ்த2க3யதி நமஸ்ஸம்ப்4ரமஜுஷாம்
நிலிம்பாநாம் ச்1ரேணிர்நிஜகநகமாணிக்யமகுடை: ॥ (17)

விபே4ா? எங்கும் நிறைந்தவரே? **புண்யாநாம்**- நான் செய்த புண்ணியங்களின், **ப2லாத்3வா**- பயனுகவோ, **மயி-கருணயா வா**- என்னிடம் தங்களுக்கேற்பட்ட கருணையாலோ, **ஸ்வாமிந்**- ஏ ஸ்வாமின் பரமேச்வர? **த்வயி**- தாங்கள், **ப்ரஸந்நேபி**- என் முன் தோன்றி அருள் புரிய சித்தமாக இருந்தபோதிலும், **ப4வத3மல பாத3ாப்3ஜயுக2லம்**- தங்களுடைய ஸ்வச்சமான இரு திருவடித்தாமரைகளையும், **கத2ம்**- எவ்விதம், **பச்1யேயம்**- பார்ப்பேன். **நமஸ்ஸம்ப்4-ரமஜுஷாம்**- தங்களை வணங்கும் விஷயத்தில் பரபரப்புடன்கூடிய, **நிலிம்பாநாம்**- தேவர்களுடைய, **ச்1ரேணி:**-வரிசை **நிஜகநகமாணிக்யமகுடை:**- பொன்னுல் செய்யப்பட்டதும், இரத்தினங்கள் இழைக்கப்பட்டதுமான அவர்களுடைய மகுடங்களால், **மாம்**- என்னை, **ஸ்த2க3யதி**- மறைத்துவிடுகிறது.

(க-ரை) ஏபரமேச்வரா! தங்களுடைய திருவடிகளை நான் தரிசனம் செய்துவிட்டால் தங்களுடைய கடாக்ஷம் என்மேல் விழுந்து விடும். அதற்குமேல் எனக்கு யாதொரு கவலையுமிராது. அந்தத் திருவடிகளின் தரிசனமே அரிதாக இருக்கிறதே. நான் என்ன செய்யலாம். எனக் கூறுகிறார்.

நான் பல ஜன்மங்களில் செய்த புண்ணிய வசத்தாலோ, தங்களுக்கு என்னிடமுள்ள கிருபையாலோ, தாங்கள் என்முன் ஆவிர்பவித்தபோதிலும் தங்களுடைய தரிசனத்திற்கு போட்டி போட்டுக்கொண்டு எனக்கு முன் நிற்கும் தேவர்களுடைய வரிசை, நான் தங்கள் சரணங்களை தரிசனம் செய்யமுடியாதபடி என்களை மறைத்துவிடுகிறதே. நான் என்னசெய்வேன். (17)

त्वमेको लोकानां परमफलदो दिव्यपदवीं ।
वहन्तस्त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः ।
कियद्वा दाक्षिण्यं तव शिव मदाशा च कियती
कदा वा मद्रक्षां वहसि करुणापूरितदृशा ॥ (18)

த்வமேகோ லோகாநாம் பரமப2லதோ3 தி3வ்யபத3வீம்
வஹந்தஸ் த்வந்மூலாம் புநரபி ப4ஜந்தே ஹரிமுகா2: ।
கியத்3வா தா3க்ஷிண்யம் தவ சி1வ மதா3சா1 ச கியதீ
கதா3 வா மத்3ரக்ஷாம் வஹஸி கருணாபூரிதத்3ருசா1 ॥ (18)

(ப-ரை) சி1வ- ஸுகஸ்வரூபியான ஏ பரமேச்வரா! **லோகாநாம்**- ஜனங்களுக்கு, **த்வம் ஏக:**- தாங்கள் ஒருவரே, **பரமப2லத3:**- எல்லாவற்றையும்விடச் சிறந்த மோக்ஷம் என்ற பலத்தை அளிக்கக்கூடியவர். (ஏனென்றால்) **ஹரிமுக2:**- விஷ்ணு முதலிய தேவர்கள், **த்வன்மூலாம்**- தங்கள் மூலமாகவே கிடைத்த, **தி3வ்யபத3வீம்**- வைகுண்டம் முதலிய உயர்ந்த ஸ்தானத்தை, **வஹந்த:**- பெற்றவர்களாக இருந்துகொண்டே, **புநரபி**- மறுபடியும், **ப4ஜந்தே**- தங்களையே சேவிக்கின்றார்கள். **தவ**- தங்களுக்கு, **தா3க்ஷிண்யம்**- பக்தர்களுடைய அபிப்ராயத்தை அநுசரித்து இருக்கும் தன்மைதான், **கியத்**- எவ்வளவு? **மதா3சா ச**- என்னுடைய ஆசைதான், **கியதீ?**- எவ்வளவு? (இரண்டையும் அளவிடவே முடியாது) **கதா3 வா**- எப்பொழுதுதான், **கருணாபூரிதத்3ருசா1**- கருணைததும்பும் கடாக்ஷ வீக்ஷணத்தால், **மத்**- அஹங்காரத்திலிருந்து, **ரக்ஷாம்**- என்னைக்காத்தருளுதலை, **வஹஸி**- செய்யப் போகின்றீர்கள்.

(க-ரை) தர்மம், அர்த்தம், காமம், இவை எல்லாவற்றையும் விட மேலான மோக்ஷம் என்ற பலத்தை அளிக்கக்கூடியவர் தாங்கள் ஒருவரே. ஏனென்றால் வைகுண்டம் முதலிய உயர்ந்த பதவியில் இருக்கும் தேவர்கள்கூட அவற்றில் திருப்தியில்லாமல் அவற்றை விடச் சிறந்த மோக்ஷபலத்தை அடைய தங்களையே சேவிக்கின்றனர். தங்களுக்கோ பக்தர்களிடம் தாக்ஷிண்யம் மிக அதிகம். அதாவது அவர்களுடைய அபிப்ராயப்படி வேண்டியவற்றை எல்லாம் அளிக்கும் சுவபாவம் உடையவர்கள் தாங்கள். என்னுடைய ஆசைக்கும் அளவே இல்லை. ஆதலால் தங்களுடைய கருணைகடாக்ஷத்தால் என்னுடைய அஹங்காரம் முதலிய பந்தங்களை அகற்றி மோக்ஷம் என்ற மிக உயர்ந்த பலத்தையே எனக்கு அளித்தருளவேண்டும். (18)

दुराशाभूयिष्ठे दुरधिपगृहद्वारघटके
दुरन्ते संसारे दुरितनिलये दुःखजनके ।
मदायासं किं न व्यपनयसि कस्योपकृतये
वदेयं प्रीतिश्चेत्तव शिव कृतार्थाः खलु वयम् ॥ (19)

து3ராசாபூ4ரிஷ்டே2 து3ரதி4பக்3ருஹத்3வாரக4டகே
தரந்தே ஸம்ஸாரே து3ரிதநிலயே து3:க2ஜநகே ।
மத3ாயாஸம் கிம் ந வ்யபநயஸி கஸ்யோபக்ருதயே
வதே3யம் ப்ரீதி: சேத்தவ சி1வ க்ருதார்த்தா: க2லு வயம் ॥(19)

து3ராசா1பூ4ரிஷ்டே2– கெட்ட ஆசைகள் நிறம்பியதும், **து3ரதி4பக்3ருஹத்3வாரக4டகே**– துஷ்ட அதிகாரிகளின் வாயிற் படியில் ஏறி இறங்கச் செய்கின்றதும், **து3ரந்தே**– அறிய முடியாத முடிவை உடையதும், அல்லது துக்ககரமான முடிவை உடையதும், **து3ரிதநிலயே**– பாபங்களுக்கெல்லாமிருப்பிடமாயும், **து3:க2ஜநகே**– (ஆதலால்) துக்கங்களை யெல்லாம் உண்டு பண்ணக்கூடிய தாயுமிருக்கின்ற, **ஸம்ஸாரே**– இந்தபிரபஞ்சத்தில் (உண்டாகும்) **மத3ாயாஸம்**– என்னுடைய பலவித துன்பங்களை **கஸ்யஉபக்ருதயே**– பிரும்ஹதேவருக்கு உபகாரம் செய்யவேண்டியதன் பொருட்டு, **கிம் ந வ்யபநயஸி**– போக்கடிக்க வில்லையா என்ன? **வத3**– சொல்லுங்கள். **சி1வ**– ஏ பரமேச்வரா? **தவ**– தங்களுக்கு **இயம்**– இவ்விதம் பக்தர்களுக்கு உபகாரம் செய்யும் விஷயமான, **ப்ரீதி:சேத்**– பிரியம் இருக்கும் பக்ஷத்தில், **வயம்**– நாங்களும், **க்ருதார்த்த2ா:**– **க2லு**– நிச்சியமாக எல்லா பிரயோஜனங்களையும் பெற்றவர்களாக ஆகிவிடுவோம்.

(க–ரை) இப்பிரபஞ்சத்தில் கெட்டவிஷயங்களில் ஆசையே மிக அதிகம். துஷ்டர்களுடைய வீட்டுவாசலில் ஏறி இறங்காமல் பிழைப்பதும் மிக அரிது. இதன் முடிவைக்காண்பதும் துர்லபம் ஒரு சிலர் முடிவைக்கண்டாலும் அது மிகக்கொடியதாகவே இருக்கிறது. பலவித பாபங்களுக்கிருப்பிடமான இப்பிரபஞ்சம் பற்பல துன்பங்களுக்கே ஆஸ்பதமாக இருக்கிறது. இதில் நான் படும் கஷ்டங்களுக்களவே இல்லை. இதை அவசியம் தாங்கள் போக்கடிக்கவேண்டும். "என் பக்தனை பிரும்ஹதேவன் நீ கஷ்டப்படும்படி உன்னைப் படைத்து விட்டார். அதை மாற்றாத போனல் தான் அவருக்கு உபகாரம் செய்ததாக ஆகும். ஆதலால் உன் துன்பத்தை நான் போக்கடிக்கவில்லை" என்றால், ஏ பரமேச்வரா? அப்படியானல் பக்தர்களுக்கு உபகாரம் செய்வதில் தங்களுக்கு பிரீதிஅதிகம் என்று ஏற்படுகிறது. ஆம் என்றால் எனக்கு இனிகவலையில்லை. என் காரியங்கள் எல்லாம் நிச்சியமாக சித்தியாகிவிடும். ஏனென்றால், நானும் ஓர்பக்தன். எனக்கும் உபகாரம் செய்ய தாங்கள் பிரியப்படுவீர்கள் அல்லவா? (19)

सदा मोहाटव्यां चरति युवतीनां कुचगिरौ
नटत्याशाशाखास्वटति झटिति स्वैरमभितः ।
कपालिन् भिक्षो मे हृदयकपिमत्यन्तचपलं
दृढं भक्त्या बद्ध्वा शिव भवदधीनं कुरु विभो ॥ (20)

ஸத3ா மோஹாடவ்யாம் சரதி யுவதீநாம் குசகி3ரௌ
நடத்யாசா1சாகா2ஸ்வடதி ஜடிதி ஸ்வைரமபி4த: ।
கபாலிந் பி4க்ஷோ மே ஹ்ருத3யகபி மத்யந்த சபலம்
த்3ருட4ம் ப4க்த்யா ப3த்3த்4வா சி1வ ப4வத3தீ4நம் குரு
விபோ4 ॥ (20)

(ப-ரை) **விபே4ா**— எல்லா விடங்களிலும் வியாபித்திருப்பவராயும், **கபாலிந்**— கையில் கபாலத்தை (மண்டை ஓட்டை) தரித்துச்கொண்டிருப்பவரும், **பி4க்ஷோ**— பிக்ஷை எடுப்பவருமான, **சி1வ**— மங்களஸ்வரூபியான ஏ பரமேச்வர? (என் மனமாகிற குறங்கு) **ஸத3ா**- எப்பொழுதும், **மோஹாடவ்யாம்**— விஷயங்களில் மயக்கமாகிற காட்டில், **சரதி**— சஞ்சரிக்கிறது. **யுவதீநாம்**— யுவதிகளுடைய, **குசகி3ரௌ**— ஸ்தநங்களாகிற மலையில், **நடதி**— நர்த்தனம் செய்கிறது. **ஆசா1சா1கா2ஸு**— ஆசைகளாகிற கிளைகளில், **ச4டிதி**- சீக்கிரமாக, **ஸ்வைரம்**- தன்னிஷ்டப்படி, **அபி4த:**- நான்கு பக்கங்களிலும், **அடதி**— சுற்றித்திரிகிறது- **அத்யந்தசபலம்**— இவ்விதம் மிகவும் சஞ்சல ஸ்வபாவமுள்ள, **மே**— என்னுடைய, **ஹ்ருதயகபிம்**— மனதாகிற குறங்கை, **ப4க்த்யா**— பக்தி என்கிற கயிற்ருல், **த்3ருட4ம்**— கெட்டியாக, **ப3த்3த்4வா**— கட்டி, **ப4வத3தீ4நம்**— தங்களுக்கு வசமாக, **குரு**— செய்து கொள்ளுங்கள்.

மிகவும் சஞ்சலஸ்வபாவமுள்ள என் மனதை தங்களிடம் ஈடுபடும்படி செய்யுங்கள் என்ற விஷயத்தை மிக அழகாக இந்த சுலோகத்தில் கூறுகிருர்.

ஏபரமேச்வரா? என்மனது ஓர்குரங்கு. அதுமிகவும் சஞ்சலமானது. விஷயங்களில் மயக்கமாகிற காட்டில் அது சுற்றிக்கொண்டிருக்கிறது. மங்கைகளின் மார்புகளாகிற மலைகளில் அது நர்த்தனம் செய்கிறது. கிளைகளில் வாசஞ்செய்யும் பிராணியாதலால் குரங்கிற்கு **சாகாம்ருகாம்**— என்று ஓர் பெயர் உண்டு. என் மனக்குரங்கு ஆசைகளாகிற கிளைகளில் இஷ்டப்படி இங்குமங்கும் சுற்றித்திரிந்து கொண்டே இருக்கிறது. அதை பக்தியாகிற கயிற்ருல் கெட்டியாகக் கட்டித்தங்களிடமே வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது தங்களிடம் பக்தி ஏற்பட்டு விட்டால் விஷ

யங்களிலுள்ள ஆசைகள் ஒழிந்து அது தங்களிடமே ஈடுபட்டு விடும். அதற்குத்தாங்கள் அருள் புரிய வேண்டும்.

இங்கு **விபே4ா**– என்ற சொல்லால் எல்லா விடங்களிலும் வியாபித்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு என் மனக்குரங்கு எந்த இடத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது, என்பதை அறிந்து அதைக் கட்டிப்பிடித்துக் கொண்டுவருவது மிக சுலபம் என்பதைக் குறிப்பிடுகிருர்.

பி4க்ஷோ– என்பதால் பிக்ஷை எடுக்கின்றவர்களுக்கு கையில் ஒரு குரங்கும் இருந்தால் பிக்ஷை அதிகமாகக் கிடைக்கக் கூடும். ஆதலால் பக்தி என்ற கயிற்ருல் என் மனக்குரங்கைகட்டி அதைத் தங்களிடமே வைத்துக்கொண்டால் தங்களுக்கும் ஸௌகரியமுண்டு என்பதை சூசனம் செய்கிருர். (20)

धृतिस्तम्भाधारां दृढगुणनिबद्धां सगमनां
विचित्रां पद्माढ्यां प्रतिदिवससन्मार्गघटिताम् ।
स्मरारे मच्चेतस्फुटपटकुटीं प्राप्य विशदां
जय स्वामिन् शक्त्या सह शिव गणैस्सेवित विभो ॥ 21

த்4ருதிஸ்தம்பா4தா4ராம் த்3ருட4கு3ண நிப3த்3தா4ம் ஸக3மநாம்
விசித்ராம் பத்3மாட்4யாம் ப்ரதித்3வஸ ஸந்மார்கக4டிதாம் ।
ஸ்மராரே மச்சேத: ஸ்புட படகுடீம் ப்ராப்ய விசத3ாம்
ஜயஸ்வாமிந்ச1க்த்யா ஸஹசி1வ க3ணைஸ்ஸேவித விபே4ா ॥ (21)

ஸ்மராரே– மன்மதனை அழித்தவரும், **ஸ்வாமிந்**– எல்லா உலகங்களையும் அடக்கி ஆளுகின்றவரும், **க3ணை:**- பிரமதகணங்களால், **ஸேவித**– சேவிக்கப்பட்டவரும், **விபே4ா**– எல்லா விடங்களிலும் வியாபித்திருப்பவருமான, **சி1வ**- ஏ பரமேச்வரா! **த்4ருதிஸ்தம்பா4தா4ராம்**- "விஷயங்கள் எல்லாம் நித்தியம்" என்ற உறுதியாகிற தூணைத்தாங்கிநிற்பதும், **த்3ருட4கு3ண நிப3த்3தா4ம்**- பலம் பொருந்திய ஸத்வம், ரஜஸ் தமஸ் என்ற குணங்களின் காரியங்களாகிற சரீரம்முதலியவற்ருல் கட்டப்பட்டதும், (கெட்டியான கயிறுகளால் கட்டப்பட்டதும்) **ஸக3மநாம்**– பலவிடங்களுக்குச் செல்லக்கூடியதும், **விசித்ராம்**- பலவித விஷயப்பற்றுதல்களுடன் கூடியதும், (பலவர்ணங்கள் தீட்டப்பட்டதும்) **பத்3மாட்4யாம்**– ஸ்ரீதேவியைப் பிரார்த்தித்துக்கொண்டிருப்பதும், (தாமரைப்புஷ்பம் போன்ற சித்திரங்களுடன் கூடியதும்) **ப்ரதித்3வஸஸந்மார்க்க3க4டிதாம்**– பிரதிதினம் பிரும்மஸ்வரூபத்தைத் தேடுவதில் ஈடுபட்டதும், (நீர், நிழல் பொருந்திய நல்ல சாலைக்கு சமீபத்தில் அடிக்க

ப்பட்டதும்) **விசத3ரம்**– நிர்மலமாயுயிருக்கின்ற– **மச்சேத:ஸ்பு2ட படகுடீம்**– என்மனதாகிற கூடார்ரத்தை **ப்ராப்ய**– அடைந்து, **ச1க்த்யா ஸஹ**– உமாதேவியுடன் கூட, **ஜய** வாசஞ்செய்து விள ங்கிக்கொண்டிருங்கள்.

(க-ரை) முன் சுலோகத்தில் மனதை குரங்காக கற்பித்து அதை ஸ்ரீபரமேச்வரன் அவருக்கு அதீனமாகச்செய்து கொள்ள வேண்டுமென ப்ப்ராத்திக்கப்பட்டது. இங்கு மனதை ஓர் கூடா ரமாகக்கற்பனை செய்து அதில் ஸ்ரீபரமேச்வரன் பார்வதிதேவி யுடன் வாசஞ் செய்யவேண்டுமென வேண்டிக்கொள்ளப்படு கிறது. மனதிற்கும் கூடாரத்திற்கும் பல அம்சங்களில் ஒற்றுமை களை இங்கு கவிகற்பித்திருக்கிறார். கூடாரத்திற்கு மத்தியில்உள்ள ஒரு கோல் கூடாரத்தைத் தாங்கி நிற்கும். "விஷயங்கள் எல்லாம் நித்தியம்" என்ற உறுதியே மனதைத்தாங்கி நிற்கின்றது. "விஷ யங்கள் அநித்யம்" என்ற உறுதியும் அநுபவமும் ஏற்பட்டுவிட் டால் பின்பு மனோநாசமும் ஏற்படக்கூடும். கூடாரம் கயிறுகளா ல் இழுத்து கட்டப்படும். மனதும் ஸத்வம் முதலிய குணங்களால் ஆகிய உடல் முதலியவற்றால் திருடமாகக் கட்டப்பட்டிருக்கிறது. கூடாரத்தை பல விடங்களுக்கு எடுத்துச்செல்லலாம். மனதும் பலவிடங்களுக்குச் செல்லுகிறது கூடாரத்தில் பலவித வர்ணங் கள் காணப்படும். மனதில் பலவித விஷயவாசனைகள் உள. கூடாரம் (பத்மாட்யம்) தாமரைபோன்ற சித்திரத்துடன்கூடியது. மனதும் (பத்மாட்யம்) பணத்தில் பேராசைகொண்டது. கூடாரம் (ஸந்மார்க்கத்தில்) சிறந்த மார்க்கத்திற்கு சமீபத்தில் அமைக்கப் படும். மனதும் (ஸந்மார்க்கத்தில்) பிரும்ஹஸ்வரூபத்தைத் தேடு வதில் ஈடுபட்டிருக்கிறது. இத்தகைய மனதாகிற கூடாரத்தில், ஏ பரமேச்வரா? தாங்கள் தேவியுடன் சுகமாக குடிகொள்ள வேண்டும். (21)

प्रलोभाद्यैरर्थाहरणपरतन्त्रो धनिगृहे
प्रवेशोद्युक्तस्सन् भ्रमति बहुधा तस्करपते ।
इमं चेतः चोरं कथमिह सहे शङ्कर विभो
तवाधीनं कृत्वा मयि निरपराधे कुरु कृपाम् ॥ 22

ப்ரலோப3ாத்3யை ரர்த்த2ா ஹரண பரதந்த்ரோ த4நி3ருஹே
ப்ரவேசோ1த்3யுக்தஸ்ஸந் ப்4ரமதி ப3ஹுதா4 தஸ்கரபதே 1
இமம் சேத: சோரம் கத2மிஹ ஸஹே ச1ங்கரவிபோ4
தவாதீ4நம் க்ருத்வா மயி நிரபராதே4 குரு க்ருபாம் ॥ (22)

(ப-ரை) தஸ்கரபதே- திருடர்களுக்கெல்லாம் தலைவராயும், சங்கர-பக்தர்களுக்குஸுகத்தை அளிப்பவருமான, விபோ-ஸர்வவ்யாபகரான ஏ பரமேச்வர! ப்ரலோப4ரத்3யை:- பிறரை வஞ்சிப்பது முதலிய கெட்ட உபாயங்களால், அர்த்த2ஹரண பரதந்த்ர: பிறருடைய பொருளைக்கொள்ளை யடிப்பதில் ஈடுபட்டவனை (என்மனதாகிறதிருடன்)த4நிக்3ருஹே-பணக்காரர்களுடையவீட்டில்ப்ரவேசோத்3யுக்தஸ்ஸந் நுழைவதற்காக முயற்சியைச்செய்துகொண்டு, பஹுதா4- பலவிதமாக, ப்4ரமதி- சுற்றிக்கொண்டிருக்கிறது. இமம்- இந்த, சேத: சோரம்- மனதாகிற திருடனை (நான்) கத2ம்- எப்படி? ஸஹே- சகிப்பேன். இஹ- இப்பொழுது, தவாதீ:நம் க்ருத்வா- (இவனை) தங்களுக்கு வசமாகச் செய்துகொண்டு நிரபராதே4- குற்றமற்ற, மயி- என்னிடத்தில், க்ருபாம் குரு- கருணைபுரியுங்கள்.

(க-ரை) எல்லாவற்றிற்கும் தலைவரான பரமேச்வரன் திருடர்களுக்கும் தலைவராவார். அவருடைய அருள் இருந்தால் தான் மனதாகிற திருடனுடைய உபத்திரவங்கள் நீங்குமாதலால் "தஸ்கரபதே" என்று இங்குபரமேச்வரனை ஸம்போதனம் செய்கிறார். மனது ஓர் திருடனைப்போல் பலவித வஞ்சனைகளைச் செய்து பிறருடைய பொருளைக்கொள்ளையடிப்பதில் ஈடுபட்டுக்கொண்டேஇருக்கிறது. அதை என்னால் பொறுக்க முடியவே இல்லை. ஆதலால் ஏ பரமேச்வரா? அந்த மனதைத்தங்களுக்கு அதீனமாகச்செய்து கொண்டு எவ்வித குற்றமுமற்ற என்னிடம் கருணை புரியுங்கள்.

இதனால் ஜீவன் மனஸ்ஸம்பந்தமின்றி ஸ்வயம் எவ்வித குற்றங்களையும் செய்வதில்லை யென்றும், மனது அடங்கினால் ஜீவன் முக்திபெறக்கூடும் என்றும் தெரியவருகிறது. 22

करोमि त्वत्पूजां सपदि सुखदो मे भव विभो
विधित्वं विष्णुत्वं दिशसि खलु तस्याः फलमिति ।
पुनश्च त्वां द्रष्टुं दिवि भुवि वहन् पक्षिमृगता
मदृष्ट्वा तद्खेदं कथमिह सहे शङ्कर विभो ॥ 23

கரோமி த்வத்பூஜாம் ஸபதி ஸுக2தே3ா மே ப4வ விபே4ா
விதி4த்வம் விஷ்ணுத்வம் தி3சஸி க2லு தஸ்யா: ப2லமிதி 1
புந:ச த்வாம் த்3ருஷ்டும் தி3வி பு4வி வஹந் பக்ஷிம்ருக3தா
மத்3ருஷ்ட்வா தத்கே3த3ம் கத2மிஹ ஸஹே சங்கர விபே4ா ll(23)

(ப-ரை) விபே4ா சங்கர? எங்கும் நிறைந்த ஏபரமேச்வர! அஹம்- நான், த்வத்பூஜாம்- தங்களது பூஜையை, கரோமி- செய்

கிறேன். **ளபதி3-** தாமத மன்னியில் **மே-** எனக்கு **ஸௌக2த3-** நித்யமான மோக்ஷஸௌக்யத்தை அளிப்பவராக, **ப4வ-** (தாங்கள்) ஆகவேண்டும். **தஸ்யா:-** அந்தபூஜையின் **ப2லமிதி-** பயன் என்று, (சுருதி) **விதி4த்வம்-** பிருஹ்மாவாக இருக்கும் தன்மையையும், **விஷ்ணுத்வம்-** விஷ்ணுவாக இருக்கும் தன்மையையும் **தி3சஸி க2லு-** தாங்கள் கொடுக்கின்றீர்கள் அல்லவா? (அப்பயனையே எனக்கும் அளித்தால்) **பு4ந:ச-** அப்பயனைப்பெற்றபிறகும், **த்வாம்** தங்களை **த்3ரஷ்டும்-** நேரில்காண, **தி3வி-** ஆகாயத்திலும், **பு4வி-** பூமியிலும் **பக்ஷிம்ருக3தாம்-** ஹம்ஸபக்ஷியாகவும், பன்றியாகவும் இருக்குந்தன்மையை, **வஹந்-** வஹித்தும் **அத்3ருஷ்ட்வா-** தங்களை ப்பார்க்காமல், **தத்கே2த3ம்-** பறவையாகவும், மிருகமாகவும் இருப்பதால் உண்டான துக்கத்தையும், தங்களைக்காணுததால் உண்டான துக்கத்தையும், **கத2ம்** எப்படி? **ஸஹே-** சகிப்பேன்.

(க-ரை) ஏபரமேச்வர? தங்களுடைய பூஜைக்கு பலமாக எனக்குநித்யமான மோக்ஷஸௌக்யத்தையே அளிக்கவேண்டுமல்லாமல், நான்முக பிருஹ்மாவாகவோ விஷ்ணுவாகவோ என்னைச் செய்துவிடக்கூடாது.

ஸ்ரீபரமேச்வர பூஜைக்கு பலமாக பிருஹ்மத்வமும், விஷ்ணுத்வமும் சித்திக்குமானுலும், அதைவேண்டாமென்று மறுப்பதற்குக்காரணம் என்ன வென்ருல் அதை அடைந்தும் ஸ்ரீபரமேச்வரஸ்வரூபத்தைப் பார்க்கமுடியவில்லை. முன்னெரு காலத்தில் ஸ்ரீபரமேச்வரரின் சிரஸைப்பார்த்து வருவதற்காக பிருஹ்மா ஹம்ஸபக்ஷி உருவத்தைஎடுத்துக்கொண்டு ஆகாயத்தில் பறந்துசென்ருர் விஷ்ணு அவருடைய பாதங்களைப் பார்ப்பதற்காக பன்றி உருவத்தை எடுத்துக்கொண்டு பூமியைத் தோன்றிச் சென்ருர். இருவருடைய முயற்சியும் பயனற்றதாக ஆகிவிட்டது, என்று புராணம் கூறுகிறது. ஆதலால் அவ்விதபயனை விரும்பாமல் மோக்ஷஸௌக்யத்தையே பயனுக அளிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்ருர். (23)

कदा वा कैलासे कनकमणिसौधे सहगणै
र्वसन् शंभोरग्रे स्फुटघटितमूर्धाञ्जलिपुटः ।
विभो साम्ब स्वामिन् परमशिव पाहीति निगदन्
विधातॄणां कल्पान् क्षणमिव विनेष्यामि सुखतः ॥ 24

கத3ா வா கைலாஸே கநகமணி ஸௌதே4 ஸஹக3ணைர்
வஸந் சம்பே4ா ரக்3ரே ஸ்புடக4டித மூர்த்4தா4ஞ்ஜலி புட: |
விபே4ா ஸாம்ப3 ஸ்வாமிந் பரமசிவ பாஹீதி நிக3த3ந்
விதா4த்ரூணாம் கல்பாந் க்ஷணமிவ விநேஷ்யாமி ஸுக2த: || (24)

(ப-ரை) **கைலாஸே**-கைலாஸமலேயில், **கநகமணிஸௌத4**-பொன்மணிகள் நிறப்பிய மாளிகையில் (உப்பரிகையில்) **ஸம்பே4ா: அக்3ரே.** ஸ்ரீபரமேச்வரனுக்குமுன்னிலேயில்**க3ணை: ஸஹ**- பிரமதகணங்களுடன்கூட, **வஸந்**-வஸித்துக்கொண்டு **ஸ்புடக4டிதமூர்த்3த4ாஞ்ஜலிபுட:**- சிரஸில் கூப்பிய இருகரங்களேயுமுடையவனுக இருந்துகொண்டு, **விபோ! ஸாம்ப4! ஸ்வாமிந்! பரமசிவ! பாஹி**-என்னேக்காப்பாற்றுங்கள் **இதி**- என்று **நிக3த3ந்**-சொல்லிக்கொண்டே **ஸுக2த:**- ஸுகாநுபவத்தின் காரணமாக **வித4ாத்ரூணும்**-பலபிருஹ்மாக்களுடைய, **கல்பாந்** கல்பங்களே, **க்ஷணமிவ**- ஒரு க்ஷண நேரப்போல், **கத3ா வா** எப்பொழுதுதான், **விநேஷ்யாமி**-கழிக்கப்போகின்றேனே?

(க-ரை) முன்சுலோகத்தில்மோக்ஷஸுகத்தைப்பிரார்த்தித்து இங்கு அதற்கு அந்தரங்கஸாதனமாக, பரிஜனங்களுடன் கூடிய ஸாப்பபரமேச்வரஸந்நிதிவாஸம் எப்பொழுதுதான் ஸம்பவிக்கப் போகின்றதோ என்று காலதாமதத்தை கொஞ்சங்கூட, ஸகிக்காதவராய் உருகுகின்ருர்.

கைலாஸத்தில், ஸுவர்ணமணிமயமானமாளிகையில், ஸ்ரீ ஸாப்பபரமேச்வரனுக்கு எதிரில், பலபிரமதகணங்களுக்கு நடுவில் நின்றுகொண்டு, சிரஸில் இருகைகளேயும் கூப்பிக்கொண்டு ஏவிபோ! ஏஸாம்ப! ஏஸ்வாமிந்! ஏபரமசிவ! என்னேக்காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டே இருப்பதால் உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவுண்டோ? அந்தஆனந்தானுபவ காலத்தில் பலபிருஹ்ம கல்பங்கள் சென்றுலும் அவைஓர்க்ஷணம் போல் தோன்றுமாம்.

(24)

स्तवैर्ब्रह्मादीनां जयजयवचोभिर्नियमिनां
गणानां केलीभिर्मदकलमहोक्षस्य ककुदि ।
स्थितं नीलग्रीवं त्रिणयनमुमाश्लिष्टवपुषं
कदा त्वां पश्येयं करधृतमृगं खण्डपरशुम् ॥ 25

ஸ்தவைர்ப்ருஹ்மாதீ3நாம் ஜயஜயவசோ பி4ர்நியமிநாம்
க3ணாநாம் கேளீபி4ர் மத3கல மஹோக்ஷஸ்ய ககுதி3 ।
ஸ்தி2தம் நீலக்3ரீவம் த்ரிணயநமுமாச்லிஷ்டவபுஷம்
கத3ா த்வாம் பச்யேயம் கரத்4ருதம்ருகம் க2ண்ட பரசும் ॥

ப்ருஹ்மாதீ3நாம்-பிருப்மா முதலிய தேவர்களுடைய **ஸ்தவை:**- ஸ்தோத்திரங்களாலும், **நியமிநாம்**-வேதங்களில் கூறப்பட்டநியமங்களே பரிபாலனம் செய்கின்ற ரிஷிகளுடைய, **ஜயஜயவசோபி4:** ஜய ஜய என்ற கோஷங்களாலும், **க3ணாநாம்**

நந்தீ3பிருங்கீ முதலிய பிரமதகணங்களுடைய, **கேளீபி4:**- நர்த்தனம் முதலிய கேளிகளாலும் (மிகுந்த சந்தோஷத்தைப்பெற்றவரும்) **மத3கலமஹோக்ஷஸ்ய**-மதோன்மத்தமான விருஷபத்தினுடைய, **ககுதி**- கொண்டைக்கருகில், **ஸ்தி2தம்**- வீற்றிருப்பவரும், **நீலக்3ரீவம்**- கருத்தகழுத்தையுடையவரும், **த்ரிணயநம்** மூன்று கண்களைப்பெற்றவரும், **உமாச்லிஷ்டவபுஷம்**- பார்வதியால் ஆலிங்கனம் செய்யப்பட்டசரீரத்தை உடையவரும், **கரத்4ருதம்ருக3ம்**-கையில்மானைதரித்துக் கொண்டிரும்பவரும், **க2ண்ட3 பரசும்**- முறிந்தகோடாரியை தரித்துக்கொண்டிருப்பவருமான, **த்வாம்**- தங்களை **கத3ா**- எப்பொழுது, **பச்யேயம்**, பார்ப்பேன்.

பிரும்மாதிதேவர்கள் ஒருபுறம் தோத்திரம்செய்ய, ரிஷிகள் எல்லோரும் ஜயகோஷம்பண்ண, கணங்கள் நர்த்தனம்செய்ய, மிகுந்தசந்தோஷத்துடன் விருஷபாரூடரான முக்கண்ணனைக் கண்டுகளிக்கும் காலம் எப்பொழுதோ, என ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறுர் கவி. (25)

कदा वा त्वां दृष्ट्वा गिरिश तव भव्यांघ्रियुगलं
गृहीत्वा हस्ताभ्यां शिरसि नयने वक्षसि वहन् ।
समाश्लिष्याघ्राय स्फुटजलजगन्धान् परिमलान् 26
अलभ्यां ब्रह्माद्यैर्मुदमनुभविष्यामि हृदये ॥

கத3ா வா த்வாம் த்3ருஷ்ட்வா கி3ரிச தவ ப4வ்யாங்க்4ரி யுக3லம்
க்3ருஹீத்வா ஹஸ்தாப்4யாம் சிரஸி நயநே வக்ஷஸி வஹந் ।
ஸமாச்லிஷ்யாக்4ராய ஸ்பு2ட ஜலஜக3ந்த4ாந் பரிமளாந்
அலப்4யாம் ப்3ருஹ்மாத3்யைர்முத3மநுப4விஷ்யாமி ஹ்ருத3யே ।

(க-ரை) **கி3ரிச**- ஏபரமேச்வர!, **த்வாம்**- தங்களை, **த்3ருஷ்ட்வா**-பார்த்து, **தவ**- தங்களுடைய, **ப4வ்யாங்க்4ரியுக3லம்**- க்ஷேமத்தை அளிக்கக்கூடிய இரு பாதங்களையும், **ஹஸ்தாப்4யாம்**- என் இரு கரங்களாலும், **க3ருஹீத்வா**- பிடித்துக்கொண்டு, **சிரஸி** தலையிலும், **நயநே**- நேத்திரத்திலும், **வக்ஷஸி**- மார்பிலும், **வஹந்**- ஏத்திக்கொண்டும், **ஸமாச்லிஷ்ய**- ஆலிங்கனம் செய்துகொண்டும், **ஸ்பு2டஜலஜகந்த4ாந்**- மலர்ந்த தாமரைபுஷ்பத்தின் வாசனைபோன்ற, **பரிமளாந்**-சிறந்தவாசனைகளை, **ஆக்4ராய** முகர்ந்துபார்த்து, **ப்3ருஹ்மாத்3யை:**- பிருஹ்மாமுதலிய தேவர்களால் கூட, **அலப்4யாம்**- அடையமுடியாத **முத3ம்**-சந்தோஷத்தை **ஹ்ருதி3**-என்னுடைய மனதில் **கத3ா**- எப்பொழுது, **அநுப4விஷ்யாமி**-அநுபவிக்கப்போகிறேன்.(25)

करस्थे हेमाद्रौ गिरिश निकटस्थे धनपतौ
गृहस्थे स्वर्भूजामरसुरभिचिन्तामणिगणे ।
शिरस्थे शीतांशौ चरणयुगलस्थेऽखिलशुभे
कमर्थं दास्येऽहं भवतु भवदर्थं मम मनः ॥ (27)

கரஸ்தே2 ஹேமாத்3ரௌ கி3ரிச1 நிகடஸ்தே2 த4னபதௌ
க3்ருஹஸ்தே2 ஸ்வர்பூ4ஜாமரஸுரபி4சிந்தாமணிக3ணே 1
சி1ரஸ்தே2 சீ1தாம்செ1ள சரணயுகலஸ்தே2கி2லசு1பே4
கமர்த்த2ம் த3ாஸ்யேஹம் ப4வது ப4வத3ர்த்தம் மம மந: ll (27)

(ப-ரை) **கி3ரிச1!**- ஏ பரமேச்வரா!, **ஹேமாத்3ரௌ** பொன் மயமான மேருமலை, **கரஸ்தே2**- கையிலிருக்கையில் **த4நபதௌ**- குபேரன், **நிகடஸ்தே2**- சமீபத்திலேயே இருக்கையில், **ஸ்வர்பூ4ஜாமரஸுரபி4சிந்தாமணிக3ணே**- தேவலோகத்தில் உண்டான கல்பக விருக்ஷம், காமதேனு, சிந்தாமணி இவையெல்லாம், **க்3ருஹஸ்தே2**- கிருஹத்திலேயே இருக்கையில், **சீ1தாம்செ1ள**- சந்திரன், **சி1ரஸ்தே2**- தலையில் இருக்கையில், **அகி2லசு1பே4**- எல்லா மங்களங்களும், **சரணயுக3லஸ்தே2**- இருசரணங்களிலுமிருக்கையில், **கம் அர்த்த2ம்**- எந்தப்பொருளை, **அஹம்**- நான், **த3ாஸ்யே**- (தங்களுக்குக்)கொடுப்பேன். (ஆதலால்) **மம**- என்னுடைய, **மந:**- மனம், **ப4வதர்த்த2ம்**- தங்களுக்காக (தங்களிடமீடுபட்டதாக) **ப4வது**- இருக்கட்டும்.

(க-ரை) ஒருவரிடம் இல்லாத பொருளை அளித்தால் அவருக்கு திருப்தி உண்டாகக்கூடும். ஸ்ரீ பரமேச்வரனிடம் எல்லாவித பொருளும் இருக்கின்றபடியால் அவரிடமில்லாத தன் மனதை அவருக்கு அர்ப்பணம் செய்வதாகக் கவி இங்கு கூறுகிறார். திருபுரஸம்ஹார காலத்தில் மேரு மலையை வில்லாகக் கையில் தரித்தார். அம்மலை முழுவதும் ஒரே பொன் மயம் எனக் கூறப்படுகிறது. ஆதலால் அவருக்கு பவுன் தேவையில்லை. எல்லாவித தனங்களுக்கும் அதிபதியான குபேரன் ஈச்வரனிடம் மிகவும் ப்ரீதியுள்ள பக்தனானதால் அவர் சமீபத்திலேயே எப்பொழுதும் வசிக்கிறான். ஆதலால் மற்ற எவ்வித பொருள்களிலும் அவருக்கு விருப்பமிராது. கல்பவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி என்ற ரத்தினம் இவையெல்லாம் ஒருவன் கோரியதெல்லாம் அளிக்கக்கூடியவை. இவையெல்லாம் ஸ்ரீ பரமேச்வரனுக்கு வசமாகவே இருக்கின்றன. சிரஸில் சந்திரகலையிருப்பதால் சுகத்தை அனுபவித்துக்கொண்டே இருக்கும் அவருக்கு நாம் செய்யும்

எவ்வித உபசாரங்களாலும் பயனில்லை. மேலும் ஸ்ரீ பரமேச்வர னுடைய சரணங்களை பூஜித்தால் ஒருவனுக்கு ஸமஸ்த மங்களங் களும் சித்திக்கின்றன. ஆதலால் அவ்விஷயத்திலும் நாம் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. ஆதலால் அவரிடமில்லாத தன் மன தையே அர்ப்பணம் செய்வதாகக் கூறுகிறார். அதாவது தன் மனது எப்பொழுதும் அவருடைய ஸ்வரூபத்திலேயே ஈடுபட் டிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறார். (27)

सारूप्यं तव पूजने शिव महादेवेति संकीर्तने
सामीप्यं शिवभक्तिधुर्यजनतासांगत्यसंभाषणे ।
सालोक्यं च चराचरात्मकतनुध्याने भवानीपते
सायुज्यं मम सिद्धमत्र भवति स्वामिन् कृतार्थोऽस्म्यहम् ॥
(28)

ஸாரூப்யம் தவ பூஜநே சிவ மஹாதே3வேதி ஸங்கீர்த்தநே
ஸாமீப்யம் சி1வப4க்திது4ர்யஜநதாஸாங்கத்ய ஸம்ப4ாஷணே ।
ஸாலோக்யம்ச சராசராத்மகதநுத்4யாநே ப4வாநீபதே
ஸாயுஜ்யம் மம ஸித்3த4மத்ர ப4வதி ஸ்வாம் க்ருதார்த்
தோ2ஸ்ம்யஹம் ॥ (28)

(ப-ரை) **ஸ்வாமிந்**- ஏ பரமேச்வர!, **தவ பூஜநே**- தங்களை பூஜித்தால், **ஸாரூப்யம்**- தங்களுடைய உருவம்போன்ற உருவம் என்ற ஸாரூப்யசித்தி- **பவதி**- ஏற்படுகிறது. **சிவ, மஹாதே3 வேதி**- ஏ சிவ! ஏ மஹாதேவ! என்று **ஸங்கீர்த்தநே**- கூறும் பக்ஷத்தில், **ஸாமீப்யம்**- தங்கள் சமீபத்தில் இருத்தல் (என்ற சித்தி ஏற்படுகிறது) **சி1வப4க்திது4ர்ய ஜநதா ஸாங்க3த்ய ஸம்ப4ாஷணே**- சிவ பக்தியில் விசேஷமாக ஈடுபட்ட பக்த ஜனங்களுடன் கூட இருத்தல், பேசுதல் இவற்றைச் செய்து வந் தால், **ஸாலோக்யம்**- தங்கள் லோகத்தில் வசித்தல் (என்ற சித்தி) உண்டாகிறது. **ப4வாநீபதே**- ஏ பரமேச்வர! **சராசராத்மகத நுத்4யாநே**- ஸமஸ்த்த ஜங்கம, ஸ்தாவர வஸ்துஸ்வரூபமாயிருக் கின்ற தங்கள் சரீரத்தை த்யானம் செய்தால், **அத்ர**- இதே ஜன் மத்தில், **ஸாயுஜ்யம்**- தங்கள் ஸ்வரூபத்துடன் ஒன்றுகச்சேருதல், (என்ற சித்தியும் ஏற்படுகிறது.) **அத:** ஆகையால், **அஹம்**- நான், **க்ருதார்த்த2:**- அடையவேண்டியதெல்லாம் அடைந்தவனாக **அஸ்மி**- ஆகிறேன்.

(க-ரை) ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸாலோக்யம், ஸாயுஜ்யம் என்று முக்தி நான்கு விதம். ஸ்ரீ பரமேச்வர பூஜையால் ஸாரூப்ய

முக்தியும், நாம ஸங்கீர்த்தனத்தால் ஸாமீப்ய முக்தியும், சிவ பக்தர்களுடன் ஸஹவாஸத்தாலும் ஸம்பாஷணத்தாலும் ஸாலோக்ய முக்தியும், ஸ்ரீ பரமேச்வர த்யானத்தால் ஸாயுஜ்ய முக்தியும் சித்திக்கின்றனவாம் (28)

त्वत्पादाम्बुजमर्चयामि परमं त्वां चिन्तयाम्यन्वहं
त्वामीशं शरणं व्रजामि वचसा त्वामेव याचे विभो ।
वीक्षां मे दिश चाक्षुषीं सकरुणां दिव्यैश्चिरं प्रार्थितां
शंभो लोकगुरो मदीयमनसस्सौख्योपदेशं कुरु ॥ (29)

த்வத்பாத3ாம்பு3ஜமர்ச்சயாமி பரமம் த்வாம் சிந்தயாம்யந்வஹம்
த்வாமீச1ம் ச1ரணம் வ்ரஜாமி வசஸா த்வாமேவ யாசே விபே4ா ।
வீக்ஷாம் மே தி3ச1சாக்ஷுஷீம் ஸகருணாம் தி3வ்யை:சிரம் ப்ரார்த்தி2தாம்
ச1ம்பே4ா லோககுரோ மதீ3யமநஸ: ஸௌக்2யோப
தே3ச1ம் குரு ॥ (29)

(ப-ரை) **விபே4ா**- ஸர்வலோகவியாபியான ஏ பரமேச்வர!, **பரமம்**- ஸர்வோத்க்ருஷ்டமான, **த்வத்பாத3ாம்பு3ஜம்**- தங்களது தாமரை போன்ற சரணங்களை, **அர்ச்சயாமி**- பூஜை செய்கிறேன். **அந்வஹம்**- பிரதிதினம், **த்வாம்**- தங்களை, **சிந்தயாமி**- தியானம் செய்கின்றேன். **ஈசம்**- உலகையாளும், **த்வாம்**- தங்களை, **ச1ரணம்**- சரணமாக (ஜனன மரண பயத்தை நீக்கி இரக்ஷிக்கக்கூடியவராக) **வ்ரஜாமி**- அடைகின்றேன். **த்வாமேவ**- தங்களையே, **வசஸா**- வாக்கினாலும், **யாசே**- வேண்டிக்கொள்ளுகிறேன். **ஹேச1ம்பே4ா**- ஸகல சுகத்தையும் அளிக்கக்கூடியவரே! **லோககு3ரோ**- பக்த ஜனங்களுக்கு ரஹஸியார்த்தங்களை உபதேசிக்கும் ஆசாரியரே! **தி3வ்யை:**- தேவர்களால், **சிரம்**- வெகுகாலமாக, **ப்ராத்தி2தாம்**- வேண்டப்படும், **ஸகருணம்**- கருணை ததும்பும் **சாக்ஷுஷீம் வீக்ஷாம்**- கடைக்கண் பார்வையை, **மே**- எனக்கு, **தி3ச1**- அளியுங்கள். **மதீ3யமநஸ:**- என்மனதிற்கு, **ஸௌக்2யோபதேச1ம்**- இதுதான் சுகம் என்ற உபதேசத்தை, **குரு**- செய்யுங்கள்.

(க-ரை) ஏ! எங்கும் நிறைந்த பரமேச்வர? தங்களையே தியானம் செய்து, தங்களையே சரணமாக அடைந்து, தங்களிடமே வேண்டிக்கொள்ளுகிறேன். தங்கள் கருணை ததும்பும் கடாக்ஷ வீக்ஷணத்திற்கு தேவர்கள் வெகுகாலமாகக் காத்துக்கொண்டிருக்கின்றனர். அதை எனக்கு அளித்து அருளவேண்டும். "இதுதான் சுகம்" என்ற விஷயத்தை கிருபை புரிந்து உபதேசிக்க வேண்டும்.

விஷய சுகமெல்லாம் அநித்யம். துக்கங்களுடன் கூடியது. ஆதலால் நித்யமான பிரும்ம சுகத்தை அடையும் வழிகளை எடுத்து உபதேசிக்க வேண்டுமென்பது கருத்து.

"தீ3க்ஷாம் மே தி3ச சாக்ஷுஷீம்"

என்ற பாடம் இருந்தால் சாக்ஷுஷீதீக்ஷையை எனக்கு அளிக்கவேண்டுமென்பது பொருள். அதாவது கடைக்கண் பார்வை மாத்திரத்தினல் சிஷ்யர்களுக்கு அறிவும் சித்தியும் உண்டாகும்படி சிலர் அனுக்கிரஹிப்பார்கள். அதற்கு "சாக்ஷுஷீ தீக்ஷை" என்றுபெயர். அதை இங்கு இக்கவி வேண்டுகிருர். (29)

वस्त्रोद्धूतविधौ सहस्रकरता पुष्पार्चने विष्णुता
गन्धे गन्धवहात्मताऽन्नपचने बर्हिर्मुखाध्यक्षता ।
पात्रे काञ्चनगर्भतास्ति मयि चेद् बालेन्दुचूडामणे
शुश्रूषां करवाणि ते पशुपते स्वामिन् त्रिलोकीगुरो ॥ (30)

வஸ்த்ரோத்3தூ4தவிதௌ4 ஸஹஸ்ரகரதா புஷ்பார்ச்சநே விஷ்ணுதா
க3ந்தே4 க3ந்த4வஹாத்மதாந்நபசநே பர்ஹிர்முக2ாத்4யக்ஷதா ।
பாத்ரே காஞ்சநக3ர்ப4தாஸ்தி மயி சேத்பா3லேந்து3சூடா3மணே
சு1ச்ருஷாம் கரவாணி தே பசுபதே ஸ்வாமிந் த்ரிலோகீ
கு3ரோ ॥ (30)

(ப-ரை) **ஹே பாலேந்து3சூடாமணே**- இளம்பிறை சந்திரனைத்தலையில் அணிந்தவரே! **பசுபதே**- ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டவர்களை விடுவிக்கின்றவரே! **த்ரிலோகீகு3ரோ**- மூவுலகங்களுக்கும் ரஹஸ்யார்த்தத்தை உபதேசிக்கும் குருவான, **ஸ்வாமிந்**- எ பரமேச்வர!, **வஸ்ரோத்தூ4தவிதெ4ள**- தங்களுக்கு வஸ்திரங்களை அளித்து உபசாரம் செய்யும் விஷயத்தில், **ஸகஸ்ரகரதா**- சூர்யனுக இருக்கும் தன்மையும், **புஷ்பார்ச்சநே**- புஷ்பங்களை எடுத்து அர்ச்சனை செய்யும் விஷயத்தில், **விஷ்ணுதா**- விஷ்ணுவின் தன்மையும், **க3ந்தே**- சந்தனம் முதலிய வாசனை திரவியங்களை அளிப்பதில், **கந்த4வஹாத்மதா**- காற்றின் தன்மையும் **அந்நபசநே**- அன்னத்தை அளித்து உபசரிக்கும் விஷயத்தில், **ப3ர்ஹிர்முக2ாத்4யக்ஷதா**- தேவேந்திரனுக இருக்கும் தன்மையும், **பாத்ரே**- தீர்த்தபாத்திரம் அளிக்கும் விஷயத்தில், **காஞ்சநக3ர்ப்ப4தா**- பிருஹ்மதேவனுக இருக்கும் தன்மையும், ஏராளதனம் உடையவனுக இருத்தலும், **அஸ்திசேத்**- இருக்கும் பக்ஷத்தில், **தே**- தங்களுக்கு, **சுச்1ருஷாம்**- பணிவிடையை, **கரவாணி**- செய்வேன்.

(க-ரை) ஏ பரமேச்வரா? தங்களை முறைப்படி பூஜிக்கவேண்டுமானல், சூர்யனுகவும், விஷ்ணுவாகவும், வாயுவாகவும், தேவேந்திரனுகவும், பிருஹ்மதேவனுகவும் இருக்கவேண்டும். அற்ப மனிதனான நான் தங்களுக்கு பணிவிடைகளை செய்து தங்களுடைய அருளைப் பெறுவது சாத்தியமல்ல. (30)

नालं वा परमोपकारकमिदं त्वेकं पशूनां पते
पश्यन् कुक्षिगतान् चराचरगणान् बाह्यस्थितान् रक्षितुम् ।
सर्वामर्त्यपलायनौषधमतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गलितं नोद्गीर्णमेव त्वया ॥ 31

நாலம் வா பாமோபகாரகமித3ந்த்வேகம் பசூநாம் பதே
பச்1யந் குக்ஷிக3தாந் சராசரக3ணாந் பா3ஹ்யஸ்தி2தாந் ரக்ஷிதும் 1
ஸர்வாமர்த்யபலாயநௌஷத4மதிஜ்வாலாகரம் பீ4கரம்
நிக்ஷிப்தம் க3ரலம் க3லே நக3லிதம் நோத்3கீ3ர்ணவே த்வயா ॥31

(ப-ரை) **பசூநாம் பதே!:**— ஜிவராசிகளுக்கெல்லாம் பதியான ஏ பரமேச்வரா! (சமுத்திரத்தை கடையுங் காலத்தில்) **குக்ஷிக3தாந்**-தங்கள் வயிற்றில் இருக்கும், **சராசரக3ணாந்**-ஸ்தாவர ஜங்கம ஸமுதாயங்களையும், **பா3ஹ்யஸ்தி2தாந்**-வெளியிலிருக்கும் (ஸ்தாவர ஜங்கம ஸமுதாயங்களையும்) **ரக்ஷிதும்**-இரக்ஷிப்பதற்கு, **பச்1யந்**-ஆலோசனை செய்துகொண்டிருந்தீர்கள். (ஆதலால்தான்) **த்வயா**-தங்களால், **அதிஜ்வாலாகரம்**-மிகக் கொடிய தாபத்தை உண்டுபண்ணியதும், **பீ4கரம்**-பயங்கரமுமான, **க3ரலம்**-காலகூட விஷம், **ஸர்வாமர்த்யபலாயநௌஷத4ம்**-தேவர்களுடைய ஓட்டமாகிற வியாதியை நிவிருத்தி செய்யக்கூடிய மருந்தாகஇருக்கும்படி, **க3லே**-சமுத்திலேயே **நிக்ஷிப்தம்**-ஸ்தாபிக்கப் பட்டது. **நக3லிதம்**-விழுங்கப்படவுமில்லை. **நோத்3கீ3ர்ணமேவ**- வெளியில் கக்கப்படவுமில்லை. **பரமோபகாரகம்**- உலகம் முழுவதற்கும் உபகாரமான. **இத3மேகம்**-இந்த அதிசயமானச்செயல் ஒன்றே, **நாலம் வா** ஒப்பற்ற தங்கள் மஹிமையை அறிந்துகொள்ளப் போதாதா?

(க-ரை) தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து அமிர்தத்தைப் பெற சமுத்திரத்தைக் கடைந்த காலத்தில் அதிலிருந்து காலகூட விஷமுண்டாயிற்று. அதைக்கண்டு அனைவரும் பயந்து ஓடினர். அப்பொழுதே அவர்களுடைய பயத்தை நிவிருத்தி செய்ய அந்த விஷத்தை ஸ்ரீபரமேச்வரன் உட்கொண்டார். ஆனல் அந்த விஷம் வயிற்றுக்குள்போகும்படிவிழுங்கிவிடவில்லை. அப்படிச்செய்தால் அங்கிருக்கும் சராசரங்கள் எல்லாம் துன்பத்தை அடையும்.

அதை வெளியிலேயே விட்டுவைத்தால் வெளியிலிருக்கும் பிராணிகள் நசித்துவிடும். ஆதலால் அதை கழுத்திலேயே ஸ்தாபனம் செய்துவிட்டார். இதிலிருந்து ஸ்ரீபரமேச்வரனுடைய ஒப்பற்ற தயையும், மஹிமையும் வெளியாகிறது. (31)

ज्वालोग्रस्सकलामरातिभयदः क्ष्वेलः कथं वा त्वया
दृष्टः किंच करे धृतः करतले किं पक्वजम्बूफलम् ।
जिह्वायां निहितश्च सिद्धघुटिका वा कण्ठदेशे भृतः
किं ते नीलमणिर्विभूषणमयं शम्भो महात्मन् वद ॥ 32

ஜ்வாலோக்3ரஸ்ஸகலாமராதிப4யத3: க்ஷ்வேல: கத2ம்வா த்வயா
த்3ருஷ்ட: கிம்ச கரே த்4ருத: கரதலே கிம் பக்வஜம்பூ3ப2லம் ।
ஜிஹ்வாயாம் நிஹித: ச ஸித்3த4கு4டிகா வாகண்ட2தே3சே ப்4ருத:
கிம் தே நிலமணிர்விபூ4ஷணமயம் சம்போ4 மஹாத்மந் வத3 ॥ 32

(ப-ரை) **மஹாத்மந்**-அளவுகடந்த மஹிமையுடைய **சம்போ!** ஏ பரமேச்வர!, **ஜ்வாலோக்3ர:**— (நெருப்புபோல்) எங்கும்பரவும் ஜ்வாலைகளால் மிக்கொடியதாயும், **ஸகலாமராதிப4யத3:**— எல்லாதேவர்களுக்கும் மிகுந்த பயத்தை உண்டு பண்ணியதாயுமுள்ள, **க்ஷ்வேள:**— விஷம், **த்வயா**-தங்களால், **கத2ம்வா**-எப்படித்தான், **த்3ருஷ்ட:**— பார்க்கப்பட்டதோ? **கிம்ச**-மேலும், **கரேத்4ருத:** கையில் எடுக்கப்பட்டது **கரதலேச** உள்ளங்கையிலும், வைக்கப்பட்டது. ஆதலால் அது **பக்வஜம்பூ3 பலம் கிம்?**-பழுத்த நாகைப் பழமாஎன்ன? **ஜிஹ்வாயாம் நிஹித:ச** (பிறகு அந்தவிஷம்) நாக்கிலும் வைக்கப்பட்டது. (ஆதலால்) **ஸித்3த4கு4டிகா வா**-எல்லா சித்திகளையும்தரும் மாத்திரையா?,**கண்ட2தே3சே**-(பிறகு) கழுத்திலேயே,**ப்4ருத:** ஸ்தாபிக்கப் பட்டது. (ஆதலால்) **அயம்**-இந்த விஷம், **தே**-தங்களுக்கு, **நிலமணி: விபூஷணம் கிம்?**—நில இரத்தினங்களால் செய்யப்பட்ட ஆபரணமா? **வத3?** சொல்லுங்கள்.

(க-ரை) ஸ்ரீபரமேச்வரனுடைய விஷபானத்தைக் கண்டு மிகவும் வியப்படைந்து அதைப் பலவாராகக் கற்பனை செய்து கேட்கிறார் இங்கு இக்கவி. (32)

नालं वा सकृदेव देव भवतः सेवा नतिर्वा नुतिः
पूजा वा स्मरणं कथाश्रवणमप्यालोकनं मादृशाम् ।
स्वामिन्नस्थिरदेवतानुसरणायासेन किं लभ्यते
कावामुक्तिरितः कुतो भवतिचेत् किं प्रार्थनीयं तदा ॥ 33

நாலம் வா ஸக்ருதே3வ தே3வ ப4வத: ஸேவா நதிர்வா நுதி:
பூஜா வா ஸ்மரணம் கதா2ச்ரவணமப்யாலோகநம் மாத்3ருசாம்।

ஸ்வாமிந் நஸ்தி2ரதே3வதா நுஸரணாயாஸேந கிம் லப்4யதே
கா வா முக்திரித: குதோ ப4வதி சேத் கிம் ப்ரார்த்த2நீயம் தத3ா ll

(ப-ரை) **ஸ்வாமிந் தே3வ,** எஸ்வாமிந் பரமேச்வரா **ஸக்ருதே3வ-** ஒரேதடவை, **ப4வத:-** தங்களுடைய, **ஸேவா-** சேவை. (அதாவது) **நதிர்வா** நமஸ்காரமோ, **நுதிர்வா-** ஸ்தோத்திரமோ, **பூஜாவா-** பூஜையோ, **ஸ்மரணம்வா-** தங்களை ஸ்மரித்தலோ, **கத2ாச்ரவணமபி-** தங்கள் கதையைக் கேட்பதோ, **ஆலோகநம்-** தங்கள் திவ்யவிக்ரகத்தை தரிசித்தலோ, இவற்றுள் ஏதாவது ஒன்று, **மாத்3ருசாம்-** எங்களைப் போன்றவர்களுக்கு, **நாலம்வா-** போதாதா? (இவற்றுள் ஏதாவது ஒன்றைக்கொண்டே நாங்கள் முக்தியடைய முடியாதா? அப்படி இருக்க) **அஸ்தி2ரதே3வதாநுஸரணாயாஸேந-** நிலையற்றமற்ற தேவதைகளை பஜனம் செய்வதால் ஏற்படும் கிலேசத்தால் **கிம்லப்4யதே?-** என்ன கிடைக்கும்? (முக்தி கிடைக்குமா?) **இத:-** இதிலிருந்து, **குத:-** எப்படி! **காவாமுக்தி:-** எவ்விதமான முக்திதான், **ப4வதி-** உண்டாகும், **சேத்-** என்றால் (அதாவது எவ்வித முக்தியும் சித்திக்காது என்றால், **தத3ா** அப்பொழுது **ப்ரார்த்த2நீயம்கிம்?-** வேறு வேண்டிக்கொள்ளத் தகுந்தது என்ன இருக்கிறது?

(க-ரை) "மற்ற தேவதைகளை உபாஸிப்பதால் முக்தியை பெறமுடியாது என்றால் அப்பொழுது அவர்களிடம் வேண்டிக் கொள்ளவேண்டியது ஒன்றுமில்லை. ஆதலால் எபரமேச்வரா! தங்களை வணங்குதல் என்ற "காயிகஸேவை" தங்களைப்பற்றி பாடுதல் என்ற 'வாசிகஸேவை' தங்களை தியானம்செய்தல் என்ற "மானஸிகஸேவை" முதலியவற்றுள் ஏதாவதொன்றை ஒருதடவை செய்த மாத்திரத்தில் முக்தி சுலபமாகக் கிட்டிவிடுமாதலால் அது ஒன்றே போதுமே, மற்றவை எதற்காக? (33)

किं ब्रूमस्तव साहसं पशुपते कस्यास्ति शम्भो भव-
दुर्धैर्यं चेदृशमात्मनः स्थितिरियं चान्यैः कथं लभ्यते ।
भ्रश्यद्देवगणं त्रसन्मुनिगणं नश्यत्प्रपञ्चं लयं
पश्यन्निर्भय एक एव विहरत्यानन्दसान्द्रो भवान् ॥ 34

கிம் ப்3ரூமஸ்தவ ஸாஹஸம் பசுபதே கஸ்யாஸ்தி சம்போ4 ப4வ,
த்3தை4ர்யம் சேத்3ருசமாத்மந: ஸ்தி2திரியம் சாந்யை: கத2ம்
[லப்4யதே।
ப்4ரச்யத்3தே3வக3ணம் த்ரஸந்முநிக3ணம் நச்யத்ப்ரபஞ்சம் லயம்
பச்யந்நிர்ப்ப4ய ஏக ஏவ விஹரத்யாநந்த3 ஸாந்த்3ரோ ப4வாந்ll 34

(ப-ரை) **பசு1பதே ச1ம்பே4ா-** *ஏபரமேச்வர!* **தவ-** *தங்களுடைய,* **ஸாஹஸம்-** *மற்றவர்களால் செய்யமுடியாத மிகத் துணிவுடன் கூடிய காரியத்தை,* **கிம் ப்3ரூம:** *என்னவென்று உரைப்போம்.* **ஈத்3ருச1ம்-** *இப்படிப்பட்ட* **ப4வத்3தை4ர்யம்** *தங்களுக்குள்ள உறுதி,* **கஸ்யாஸ்தி?** *வேறு யாருக்குத்தான் இருக்கிறது? (ஒருவருக்கும் இல்லை)* **ப்4ரச்1யத்3தேவக3ணம்-** *தேவக்கூட்டங்கள் எல்லாம் தன்விடங்களை விட்டு நடுங்கி ஓட,* **த்ரஸந்முநிக3ணம்-** *முனிகணங்கள் எல்லாம் நடுங்க,* **நச்1யத்ப்ரபஞ்சம்** *பிரபஞ்சம் முழுதும் அழிய,* **ஆனந்த3 ஸாந்த்3ர:** *ஒரே ஆனந்தவடிவமான* **ப4வாந் ஏகஏவ-** *தாங்கள் ஒருவர் மட்டும்,* **லயம்-** *பிரளயகாலத்தை,* **பச்1யந்-** *பார்த்துக்கொண்டு* **விஹரதி-** *கிரீடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.* **ஆத்மந:** *தங்களுடைய,* **இயம் ஸ்தி2தி:-** *எல்லாம் அழிந்தபின் தனிமையில் இருத்தல் என்ற நிலை,* **அந்யை:-** *மற்றவர்களால்* **கத2ம்-** *எப்படி?* **லப்4யதே-** *அடையமுடியும்?*

(க-ரை) ஸ்ரீபரமேச்வரனுடைய தனிப்பெருமையை இங்கு கவியெடுத்துரைக்கிறார். பிரளயகாலத்தில் தேவர்கள் முனிவர்கள் முதலிய அனைவரும் அழிந்துவிடுகின்றனர். ஸ்ரீ பரமேச்வரன் ஒருவரே நிர்ப்பயமாக ஆனந்த தாண்டவ மாடிக்கொண்டிருக்கிறார். இது வேறுயாராலும் செய்யமுடியாத ஓர் ஆச்சரியமான கார்யமாகும். சுலோகத்தில் "தேவர்கள் நடுங்கி ஓடுகின்றனர்" என்றும் "முனிவர்கள்பயந்துக்கொண்டிருக்கின்றனர்" என்றும், கூறப்பட்டதன் கருத்து பிரளயம் ஏற்படுவதற்கு சற்று முன் அவர்கள் அம்மாதிரி இருக்கின்றனர் என்பதாம். பிரளயத்தில் அவர்களுடைய ஸ்வரூபமே அழிந்துவிடுகின்றபடியால் அவர்கள் ஓடுகின்றார்கள் என்பதும், பயந்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதும் பொருத்தமற்றதாகும். (34)

योगक्षेमधुरंधरस्य सकलश्रेयः प्रदोद्योगिनो
दृष्टादृष्टमतोपदेशकृतिनो बाह्यान्तरव्यापिनः ।
सर्वज्ञस्य दयाकरस्य भवतः किं वेदितव्यं मया
शम्भो त्वं परमान्तरङ्ग इति मे चित्ते स्मराम्यन्वहम् ॥ 35

யோக3க்ஷேமது4ரந்த4ரஸ்ய ஸகலச்1ரேய: ப்ரதே3ாத்யோகி3நோ
த்ருஷ்டாத்ருஷ்ட மதோபதே3ச க்ருதிநோ ப3ாஹ்யாந்தரவ்யாபிந:।
ஸர்வஜ்ஞஸ்ய த3யாகரஸ்ய ப4வத: கிம் வேதி3 தவ்யம் மயா
ச1ம்பே4ா த்வம் பரமாந்தரங்க இதிமே சித்தே ஸ்மராம்யந்வஹம் ॥

(ப-ரை) ச1ம்பே4ா- ஏபரமேச்வர!, யோ3க்ஷேமது4ரந்த4ரஸ்ய- எனது யோகக்ஷேமங்களை வஹிக்கின்றவரும், ஸகலச்ரேய: ப்ரதே3ாத்3யோகி3ந:- எல்லா நன்மைகளையும் அளிக்க வேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டிருப்பவரும், த்3ருஷ்டாத்3ருஷ்ட மதோபதே3சக்ருதிந:- ஐஹிக- ஆமுஷ்மிகபயனை அளிக்கும் உபாயத்தை உபதேசிப்பதில் ஸமர்த்தராயும், ப3ாஹ்யாந்தரவ்யாபிந:- உள்ளும் புறமும் வியாபித்து இருக்கின்றவராயும், ஸர்வஜ்ஞஸ்ய- எல்லாமறிந்தவராயும், த3யாகரஸ்ய- தயாளுவுமான ப4வத:- தங்களைப்பற்றி, மயா- என்னால் கிம் வேதி3தவ்யம்- அறிந்துகொள்ளப்படவேண்டியது என்ன இருக்கிறது? த்வம்- தாங்கள், மே- எனக்கு, பரமாந்தரங்க3:- மிகவும் ஆப்தர் (சிறந்தநண்பர்) இதி- என்று, அந்வஹம்- எப்பொழுதும், சித்தே- மனதில் ஸ்மராமி- ஸ்மரித்துக் கொண்டிருக்கின்றேன். (35)

(க-ரை) ஏபரமேச்வர! தங்களுடைய கல்யாண குணங்கள் எல்லாம் மிகப்பிரசித்தமானதால் நான் அவற்றை நன்கு அறிவேன். ஆதலால் அப்படிப்பட்ட தாங்களே எனக்கு மிகச் சிறந்த நண்பர்என்று நான்நினைத்துக்கொண்டே இருக்கின்றேன் அவ்விதநினைவேஎனக்கு ஸமஸ்தாபீஷ்டங்களையும் அளிக்கும்.(35)

भक्तो भक्तिगुणावृते मुदमृतापूर्णे प्रसन्ने मनः=
कुम्भे साम्ब तवाङ्घ्रिपल्लवयुगं संस्थाप्य संवित्फलम् ।
सत्वं मन्त्रमुदीरयन्निजशरीरागारशुद्धिं वहन्
पुण्याहं प्रकटीकरोमि रुचिरं कल्याणमापादयन् ॥ 36

ப4க்தோ ப4க்திகு3ணாவ்ருதே முத3ம்ருதாபூர்ணே ப்ரஸந்நே மந:-
கும்பே4 ஸாம்ப3 தவாங்க்4ரிபல்லவயுக3ம் ஸம்ஸ்த2ாப்ய ஸம்வித்ப2லம் ।
ஸத்வம் மந்த்ரமுதீ3ரயந்நிஜச1ரீராக3ார சு1த்3தி4ம் வஹந்
புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம் கல்யாணமாபாத3யந் ॥ (36)

(ப-ரை) ஸாம்ப3- ஏபரமேச்வர! ப4க்த:- பக்தனான நான் நிஜச1ரீராக3ார சு1த்3தி4ம் வஹந்- என்உடலாகிற வீட்டை சுத்தி செய்துகொண்டு, ப4க்திகு3ணாவ்ருதே- பக்தியாகிற நூலால் சுற்றப்பட்டதும், முத3ம்ருதாபூர்ணே- ஸந்தோஷமாகிற ஜலம் நிறம்பியதும், ப்ரஸந்நே- மிகவும் சுத்தமாயுமிருக்கின்ற, மந:கும்பே4- மனதாகிற கலசத்தில், தவ- தங்களுடைய, அங்க்4ரிபல்லவயுக3- சரணங்களாகிற இரு துளிர்களையும், ஸம்வித்ப2லம்- (அதன்மேல்) சிவஞானமாகிற தேங்காயையும், ஸம்ஸ்த2ாப்ய- வைத்து, ஸத்வம்-ஸத்வகுணப்பிரதானமான மந்த்ரம்- தாரகமந்திரத்தை உதீ3ரயந்- உச்சரித்துக்

கொண்டு, **ருசிரம்**- மனதிற்கிசைந்த-**கல்யாணம்**-**ஆபாத3யந்**-மங்களங்களை சம்பாதிப்பதற்காக, **புண்யாஹம்**- புண்யாஹவாசனத்தை, **ப்ரகடீகரோமி**- முறைப்படி செய்கின்றேன்.

(க-ரை) ஸ்ரீ பரமேச்வரனுடைய சரணாரவிந்தத்யானமும், அவருடைய நாமோச்சாரணமுமே ஸமஸ்த மங்களங்களையும் அளிக்கக்கூடியது என்ற விஷயத்தை இங்கு கவி அழகாக உருவகப்படுத்தி பேசுகிறார்:- விவாஹம் முதலிய மங்களகரமான காரியங்களைச் செய்வதற்கு முன், ஸ்நானம் முதலியவற்றால் உடலை சுத்திசெய்துகொண்டு, ஓர் சுத்தமான கலசத்தின்மேல் நூலைச்சுற்றி, அதற்குள் ஜலத்தைஊற்றி அதன்மேல் மா இலை, அதற்குமேல் தேங்காய் இவற்றை வைத்து வேதமந்திரங்களைக் கூறி புண்யாஹம் என்ற கர்மாவைச் செய்வார்கள். அதைப் போல் ஸமஸ்த மங்களங்களும் உண்டாவதன் பொருட்டு பக்தனும் ஒரு புண்யாஹ கர்மாவைச் செய்கின்றான். இதில் பக்தனுடைய உடலே வீடு. அவனுடைய பரிசுத்தமான மனமே கலசமாம். ஸ்ரீபரமேச்வர பக்தியே அதில் சுற்றப்படும் நூலாம். ஸந்தோஷமே அதில் நிரப்பப்படும் ஜலமாம். ஸ்ரீபரமேச்வரனுடைய சரணங்களே இரு மாவிலைகளாம். ஸ்ரீ சிவஞானமே தேங்காயாம். ஸத்வகுணத்தை விருத்திசெய்யும் சிவநாமாக்களே மந்திரமாம். (36)

आम्नायांबुधिमादरेण सुमनस्संघास्समुद्यन्मनो
मन्थानं दृढभक्तिरज्जुसहितं कृत्वा मथित्वा ततः ।
सोमं कल्पतरुं सुपर्णसुरभिं चिन्तामणिं धीमतां
नित्यानन्दसुधां निरन्तररमासौभाग्यमातन्वते ॥ 37

ஆம்நாயாம்பு3தி4 மாத3ரேண ஸுமந: ஸங்க4ாஸ்ஸமுத்3யந்மநோ
மந்த2ாநம் த்3ருட4ப4க்தி ரஜ்ஜுஸஹிதம் க்ருத்வா மதி2த்வா தத: ।
ஸோமம்கல்பதரும் ஸுபர்ணஸுரபி4ம் சிந்தாமணிம் தீ4மதாம்
நித்யாநந்த3ஸுத4ாம் நிரந்தரரமாஸௌபா4க்3யமாதந்வதே ॥

(பரை) **ஸுமந: ஸங்க4ா:**- வித்வான்களுடைய கூட்டம் (தேவர்களுடைய கூட்டம்) **ஸமுத்3யந்மநோ மந்த2ாநம்**- நற்குணங்கள் நிறம்பிவிளங்கும் மனதாகிறமத்தை, **த்3ருட4ப4க்திரஜ்ஜுஸஹிதம்**- உறுதியான பக்தியாகிற கயிற்றுடன் கூடியதாக, **க்ருத்வா**- செய்து, **ஆம்நாயாம்பு3தி4ம்**- வேதங்களாகிற கடலை, **ஆத3ரேண**- ஆதரவுடன், **மதி2த்வா**- கடைந்து, **தத:**- அந்த ஸமுத்திரத்திலிருந்து, **தீ4மதாம்**- புத்திமான்களுக்கு, **நித்யாநந்த3ஸுத4ாம்**- அழிவற்ற ஆனந்தமாகிற அமிருதமாயும் **கல்பதரும்**- கல்பகவிருக்ஷம் போன்றவரும், **ஸுபர்வஸுரபி4ம்**

காமதேனுவிற்கு ஒப்பானவரும், **சிந்தாமணிம்**- சிந்தாமணி என்றஇரத்தினத்திற்குச் சமமானவரும், **நிரந்தரரமாஸௌபா4க்3யம்**- சாச்வதமான முக்திலக்ஷ்மீ ஸம்ருத்திரூபமாகவும் இருக்கின்ற, **ஸோமம்**- பார்வதியுடன்கூடிய ஸ்ரீபரமேச்வரனை, **ஆதந்வதே**- அடைகின்றனர்.

(வ-ரை) முன்னொருகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து மந்தரமாலையைமத்தாகவும், வாஸுகியைக் கயிறுகவும் வைத்துக்கொண்டு பாற்கடலைக்கடைந்து, அதிலிருந்து, சந்திரன் கல்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி, லக்ஷ்மி, அமிருதம் இவற்றையெல்லாம்பெற்றனர். அதுபோல்வித்வான்கள் வேதங்களாகிற சமுத்திரத்தை, மனமாகிறமத்தில் பக்தியாகிற கயிற்றைக் கட்டி கடைந்து மேற்கூறிய எல்லா பொருள்களையும்விட பன்மடங்க அதிகப்பெருமைகொண்ட ஸ்ரீபரமேச்வரனைப்பெற்றனர். அதாவது ஸர்வவேதங்களாலும் விளக்கப்படும்பொருள் ஸ்ரீபரமேச்வரன் ஒருவரே. பாற்கடலில் பலபொருள்கள் தோன்றின. வேதசமுத்திரத்தில் ஸ்ரீபரமேச்வரன் ஒருவரே தோன்றினர். அங்கு **ஸோம:** என்பதற்கு சந்திரன் என்றும், இங்கு பார்வதியுடன்கூடிய பரமேச்வரன் என்றும் பொருள். காமதேனு, கல்பவிருக்ஷம், சிந்தாமணி இவற்றைப்போல் விரும்பியவற்றையெல்லாம் அளிக்கக்கூடியவர் இங்கு ஸ்ரீபரமேச்வரனே. பாற்கடலில் உண்டான அமிருதம் அறிஞர்களுக்கு அழிவற்ற ஆனந்தத்தை அளிக்கக்கூடியதல்ல. அவ்விதமே அங்குண்டான லக்ஷ்மியும் ஓரிடத்தில் நிலைத்து நிற்கக்கூடியவளல்ல. ஆனால் ஸ்ரீபரமேச்வரன், அறிஞர்கள் அநுபவிக்கும் அழிவற்ற ஆனந்தவடிவமாயும் நிலைத்துநிற்கும் முக்திலக்ஷ்மீ ரூபமாயும் இருக்கின்றார் என்பது விசேஷம். (37)

प्राक्पुण्याचलमार्गदर्शितसुधामूर्तिः प्रसन्नः शिवः
सोमः सद्गणसेवितो मृगधरः पूर्णस्तमोमोचकः ।
चेतःपुष्करलक्षितो भवति चेदानन्दपाथोनिधिः
प्रागल्भ्येन विजृम्भते सुमनसां वृत्तिस्तदा जायते ॥ 38

ப்ராக்புண்யாசல மார்க்கத3ர்சி1தஸுதா மூர்த்தி: ப்ரஸந்ந: சி1வ:
ஸோம: ஸத்3க3ணஸேவிதோ ம்ருக3த4ர: பூர்ணஸ்தமோமோசக: ।
சேத:புஷ்கரலக்ஷிதோ ப4வதி சேதா3நந்த3பாதோ2நிதி4:
ப்ராக3ல்ப்4யேந விஜ்ரும்ப4தே ஸுமநஸாம் வ்ருத்திஸ்தத3ா ஜாயதே ॥

(ப ரை) **ப்ராக்புண்யாசல மார்க்கத3ர்சி1தஸுத4ா மூர்த்தி:**- முன் ஜன்மாக்களில் செய்யப்பட்ட மலைபோன்ற புண்ணியங்களாகிற உதயபர்வதத்தின் வழியாக காணப்படும்

அமிருதமயமான உடலைப்பெற்றதும் **ப்ரஸந்ந:**- மாசு அற்றதும் **சிவ:**- ஆனந்தத்தை அளிக்கின்றதும் (சுகஸ்வரூபமாயும்) **ஸத்3க3ணஸேவித:**- நக்ஷத்திரகணங்களால் சூழப்பட்டதும், (ஸாது ஜனங்களால் சூழப்பட்டவரும்) **ம்ருக3த4ர:**- மானை தரிக்கின்றதும், **பூர்ண:**- பதினாறுகலைகளுடன் நிரம்பிஇருப்பதும், (எங்கும் வியாபித்திருப்பவரும்) **தமோமோசக:** இருளைப்போக்கடிப்பதுமான (அஜ்ஞானத்தை அழிப்பவருமான) **ஸோம:**- ஸ்ரீபரமேச்வரனாகிற சந்திரன், **சேத:புஷ்கரலக்ஷிதோ ப4வதிசேத்**- மனதாகிற ஆகாயத்தில் பார்க்கப்படும் பக்ஷத்தில், **ஆனந்தபாதே2ாநிதி4:**- ஆனந்தமாகிற சமுத்திரம், **ப்ராகல்ப்4யேந**- கம்பீரமாக **விஜ்ரும்ப4தே**- விருத்தியடைகிறது. **தத3ா**- அப்பொழுது, **ஸுமநஸாம்**- நன்குசீர்திருத்தப்பட்ட மனதைஉடையவர்களுக்கு **வ்ருத்தி:**- அதில் மூழ்கிகளிக்கவேண்டும் என்ற எண்ணம், **ஜாயதே**- உண்டாகிறது.

(க-ரை) மஹான்கள் ஸ்ரீபரமேச்வர தரிசனத்தால் ஆனந்தமடைகின்றனர் என்பதை உருவகப்படுத்தி பேசுகிறார். பூர்ண சந்திரன் கிழக்குதிக்கில் உதயகிரிமார்க்கத்தில்தோன்றி ஆகாயத்தில் காக்ஷியளிக்கையில் சமுத்திரம் பொங்குகிறது. சந்திரனுடைய உடல் அமிருதமயம் எனக்கூறப்பட்டிருக்கிறது. சந்திரன் மாசற்றவன். ஆனந்தமளிப்பவன். நக்ஷத்திரங்களால் சூழப்பட்டவன். மானைதரிப்பவன். (சந்திரனுடையஉடலில் கருப்பாகத் தோன்றுவதை மான் என்று கவிகள் வர்ணிக்கின்றனர்.) இருளை அகற்றக்கூடியவன். சந்திரனைகக்கற்பிக்கப்பட்ட ஸ்ரீபரமேச்வரனோ முன்ஜன்மாக்களில் செய்யப்பட்ட மலைபோன்ற புண்ணிய வசத்தால் தோன்றக்கூடியவர். களங்கமற்றவர். சுகவடிவமானவர். மானை கையில் தரித்துக்கொண்டிருப்பவர். எங்கும் வியாபித்தவர். அஜ்ஞானத்தை அழிக்கவல்லவர். மனதாகிற ஆகாயத்தில் அவர்பார்க்கப்பட்டுவிட்டால் ஆனந்தக்கடல் பொங்கும். அதில்மாசற்ற மனதைஉடையவர்கள் மூழ்கிக்களிப்பர்.(38)

धर्मो मे चतुरङ्घ्रिकः सुचरितः पापं विनाशं गतं
कामक्रोधमदादयो विगलिताः कालास्सुखाविष्कृतः ।
ज्ञानानन्दमहौषधिः सुफलिता कैवल्यनाथे सदा
मान्ये मानसपुण्डरीकनगरे राजावतंसे स्थिते ॥ 39

த4ர்மோ மே சதுரங்க்4ரிக: ஸுசரித: பாபம் விநாசம் கதம்
காமக்ரோத4 மத3ாதயோ விக3லிதா: காலா: ஸுக2ாவிஷ்க்ருத: ।
ஞாநாநந்த மஹௌஷதி4: ஸுப2லிதா கைவல்ய நாதே2 ஸத3ா
மான்யே மானஸபுண்டரீக நக3ரே ராஜாவதம்ஸே ஸ்தி2தே ॥ (39)

(ப-ரை) ராஜாவதம்ஸே- சந்திரனை சிரோ பூஷணமாக அணிந்தவரும், மாந்யே- அனைவராலும் பூஜிக்கத்தகுந்தவரும் கைவல்ய நாதே2-மோக்ஷத்தை அளிப்பவருமான ஸ்ரீபரமேச்வரன், மாநஸ புண்ட3ரீக நக3ரே- தாமரை புஷ்பம் போன்ற என் ஹிருதயமாகிற நகரத்தில், ஸ்தி2தே-இருக்குங்கால், சதுரங்க4ரிக:- நான்கு பாதங்களுடன் கூடிய, த4ர்ம:- தர்மம் மே ஸாசரித:- என்னால் நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாக ஆகிறது. பாபம்- பாபங்கள் எல்லாம், விநாசம்1ம் க3தம்- அழிந்து விட்டன, காமக்ரோத4மத3ர த3ய:- காமம் க்ரோதம், மதம் முதலியஎனது ஆறுவிரோதிகளும்; விக3லிதா:- நகரத்தை விட்டு ஓடி விட்டார்கள். காலா:- மாஸம் பக்ஷம் முதலிய காலங்கள். ஸுக2ர விஷ்க்ருத:- இன்பத்தை அளிப்பவைகளாக இருக்கின்றன. ஞானநந்த3மஹௌஷதி4:- ஞானம் ஆனந்தம்என்கிற சிறந்த ஓஷதி, ஞானநந்த்ய மஹௌஷதி4:-என்றும் ஒரு பாடமுண்டு. அதற்கு ஞானத்தைப்புகட்டும் பல கிரந்தங்களாகிற சிறந்த பச்சிலை, என்று பொருள்) ஸத3ா- எக்காலத்திலும், ஸுப2லிதா- நல்லபழங்களுடன்கூடியதாக (ஆகிவிட்டது)

(க-ரை) ஒரு ராஜ்யத்தை சிறந்த அரசன் ஒருவனே அதிபதியாக இருந்து ஆண்டுவருங்காலத்தில் அங்குதர்மங்கள் ஒழுங்காக அனுஷ்டிக்கப்படும். பிரஜைகளுக்குள்ள துன்பங்கள் எல்லாம் அழிந்துவிடும். விரோதிகள் விலகிச் சென்றுவிடுவார்கள். கொடி செடிகள் பயிற்கள் எல்லாம் நல்ல பயன்களைத் தரும். அதுபோல் ஸ்ரீபரமேச்வரன் ஹ்ருதய புண்டரீகமாகிற நகரத்தில் வீற்றிருக்கையில், ஸமஸ்த தோஷங்களும் நிவிருத்தியடைந்து ஸர்வகுண ஸமிருத்தியும் ஏற்பட்டு விட்டது.

இங்கு அடியிற்கண்ட சொற்கள் சிலேடையாக ஸ்ரீபரமேச்வரனையும் சிறந்த அரசனையும் குறிப்பிடுகின்றன. ராஜாவதம்ஸ:- சந்திரனைத்தலையில் அணிந்த பரமேச்வரன்:- அரசர்களுள் சிறந்தவன். கைவல்யநாத2:- மோக்ஷத்தை அளிக்கும்பிரபு-ஏகாதிபதி. மாந்ய:- அனைவராலும் பூஜிக்கப்பட்ட பரமேச்வரன்- அனைவருக்கும் சம்மதமான அரசன்.

धीयन्त्रेण वचोघटेन कविताकुल्सोपकुल्याक्रमै-
रानीतैश्च सदाशिवस्य चरितांभोराशिदिव्यामृतैः ।

हृत्केदारयुताश्च भक्तिकलमास्साफल्यमातन्वते
दुर्भिक्षान्मम सेवकस्य भगवन् विश्वेश भीतिः कुतः॥ 40

தீ4யந்த்ரேண வசோக4டேந கவிதாகுல்யோபகுல்யாக்ரமை-
ராநீதை:ச ஸத3ாசிவஸ்ய சரிதாம்பே4ாராசி1தி3வ்யாம்ருதை: ।
ஹ்ருத்கேத3ாரயுதா:ச பக்4திகலமாஸ்ஸாபஉ2ல்யமாதந்வதே
து3ர்பி4க்ஷாந் மம ஸேவகஸ்ய ப4 க3 வந்விச்வேச1 பீ4தி: குத: ॥

(ப-ரை) **ப4க3வந்,-** ஆறுவித ஐச்வர்யங்களும் நிறம்பிய, **விச்1வேச1-** எல்லா உலகங்களுக்கும் அதிபதியான ஏ பரமேச்வரா! **தீ4யந்த்ரேண-** புத்தியாகிற நீர் இறைக்கும் இயந்திரத்தால் **வசோக4டேந-** வாக்காகிற குடத்தால், **கவிதாகுல்யோபகுல்யாக்ர மை:** ஸாஹித்யமாகிற வாய்க்கால் கண்ணி இவற்றின் வழியாக, **ஆநீதை:-** பாய்ச்சப்பட்ட, **ஸத4ாசி1வஸ்ய-** ஸ்ரீபரமேச்வருடைய **சரிதாம்பே4ாராசிதி3வ்யாம்ருதை:** சரித்திரமாகிற சமுத்திரத்தின் சுத்த ஜலங்களால் **ஹ்ருத்கேத3ாரயுதா:-** ஹ்ருதயமாகிற வயலில் பயிரிடப்பட்ட, **ப4க்திகலமா:-** பக்தி என்ற சம்பா பயிர்கள், **ஸாபஉ2ல்யம்- ஆதந்வதே-** பூர்ண பயன்களை அளிக்கக்கூடியவை களாக இருக்கின்றன. (நன்ருக விளைந்திருக்கின்றன) (ஆதலால்) **ஸேவகஸ்ய** தங்கள் ஊழியனுன **மம-** எனக்கு, **து3ர்பி4க்ஷாத் பீ4தி:-** பஞ்சத்தால் பயம், **குத:-** எப்படி உண்டாகும்?

(க-ரை) விவசாயிக்கு பயிர்கள் நன்ருக விளைந்திருந்தால் பஞ்சமில்லை. அதுபோல் பக்தர்களுக்கும் பக்தியாகிற பயிர் நன்ருக விளைந்திருந்தால் பஞ்சமுண்டாகாது என்பதை அடியிற் கண்டவாறுகவிகற்பித்திருக்கின்ருர். பக்தனுடையஹ்ருதயமாகிற வயலில் பக்தி என்ற பயிர்கள் நடப்பட்டிருக்கின்றன. அவை பூர்ண பயன்களை அளிப்பதற்காக பரமேச்வரனுடைய சரித்திர மாகிற சமுத்திரத்திலுள்ள ஜலத்தை புத்தியாகிற நீர் இறைக்கும் இயந்திரத்தால் இறைத்து வாக்காகிற குடத்தால், ஸாஹித்ய மாகிற வாய்க்கால் கண்ணி இவற்றின் வழியாக, ஹ்ருதயமாகிற வயலுக்கு இடைவிடாமல் பாய்ச்சிக்கொண்டே இருந்தபடியால் அவை நன்ருக விளைந்திருக்கின்றனவாம்.

அதாவது ஸ்ரீ பரமேச்வரனுடைய சரித்திரங்களை விளக்கும்

சாஹித்யங்களை மனதால் அநுசந்தானம் செய்துகொண்டும், வாக்கால் உச்சரித்துக்கொண்டுமிருந்தால் பக்தி அபிவிருத்தி யடையும். பக்தியபிவிருத்தியடைந்துவிட்டால் பிறகு எவ்வித பயத்திற்குமிடமில்லை- (40)

पापोत्पातविमोचनाय रुचिरैश्वर्याय मृत्युञ्जय–
स्तोत्रध्याननतिप्रदक्षिणसपर्यालोकनाकर्णने ।
जिह्वाचित्तशिरोऽङ्घ्रिहस्तनयनश्रोत्रैरहं प्रार्थितः
मामाज्ञापय तन्निरूपय मुहुर्मामेव मामेऽवचः ॥ (41)

பாபோத்பாதவிமோசநாய ருசிரைச்1வர்யாய ம்ருத்யுஞ்ஜய
ஸ்தோத்ரத்4யாநநதிப்ரத3க்ஷிணஸபர்யாலோகநாகர்ணநே l
ஜிஹ்வாசித்தசி1ரோங்க்4ரிஹஸ்தநயநச்1ரோத்ரைரஹம் ப்ரார்த்தி2த:
மாமாஜ்ஞாபய தந்நிரூபய முஹுர்மாமேவ மாமே வசஸ: ll (41)

(ப-ரை) **ம்ருத்யும்ஜய**-யமனை ஜயித்த ஏ பரமேச்வர, **பாபோத்பாதவிமோசநாய**- பாபங்களாகிற உத்பாதத்தை (சமீபத்தில் நேரக்கூடிய ஆபத்துக்களை சூசனம்செய்யும் துர்நிமித்தத்தை) ஒழிப்பதின் பொருட்டும், **ருசிரைச்வர்யாய**- மனதிற்கிசைந்த சுதந்திரத்தின் பொருட்டும், **ஜிஹ்வா-சித்த-சிரோ-ங்க்4ரி-ஹஸ்த-நயந-ச்1ரோத்ரை:**- நாக்கு-மனது-தலை-கால்-கை-கண்-காது இவைகளால், **ஸ்தோத்ர-த்4யாந-நதி-ப்ரத3 க்ஷிண ஸபர்யா,-லோகநா -கர்ணநே**— ஸ்தோத்ரம், த்யானம், நமஸ்காரம், பிரதட்சிணம், பூஜை, தர்சனம், சிரவணம், இவ்விஷயங்களில் (தங்களைஈடுபடும்படி செய்ய) **அஹம்:** நான் **பிரார்தி2த:**வேண்டிகொள்ளப்பட்டவனாக இருக்கிறேன். **அத:** ஆகையால் **மாம்**- என்னை, **ஆஜ்ஞாபய**-அவற்றின் பிரார்த்தனையை நிறைவேற்றும்படி உத்திரவிடுங்கள். **முஹு:**- அடுக்கடி, **மாம்**-என்னை **தத்**- ஸ்தோத்ரம், தியானம் முதலியவற்றின் ஸ்வரூபத்தை **நிரூபய** உணரும்படி செய்யுங்கள் **மே**- எனக்கு, **அவச:**- தங்களை துதிக்காமலிருத்தல் மற்ற குற்றங்களுக்கும் உபலக்ஷணமானதால், தியானம் நமஸ்காரம் பிரதட்சிணம், பூஜை, தர்சனம், சிரவணம் முதலியவற்றைச் செய்யாமலிருத்தல், இவையெல்லாம் **மே**- எனக்கு **மைவ**- ஒருபொழுதும் உண்டாகவே வேண்டாம்.

மாமேவ மாமேऽவச: என்பதை, **மாம்-ஏவ-மா-மே-அவச:**- பிரித்துக்கொள்ளவேண்டும்.

(க-ரை) ஏபரமேச்வரா! என்நாக்கு எப்பொழுதும் தங்களைப் பற்றி பாடுவதற்கும், மனது தியானம் செய்வதற்கும், தலை தங்கள் பாதம் பணிவதற்கும், பாதங்கள். பிரதட்சிணம் செய்வதற்கும், கரங்கள் தங்களை அர்ச்சிப்பதற்கும், கண்கள் தங்களுடைய அற்புதமான உருவத்தை பார்ப்பதற்கும், காதுகள் தங்கள் சரித்திரத்தை சிரவணம் செய்வதற்கும் விருப்புகின்றன. அப்படி செய்வதால் பாபங்கள் விலகும், முக்தி சித்திக்கும் பின்பு சுதந்தரமாக இருக்கலாம். ஆதலால் எவ்வித இடையூறுகளுமன்னியில் அந்தந்த அவயவங்களை அந்தந்த காரியங்களில் ஈடுபடும்படி செய்ய தாங்களே அனுமதிக்க வேண்டும். ஒருபொழுதும், மேற்கூறிய காரியங்களைச் செய்யாமல் என்னுடைய அவயவங்கள் இருத்தல் ஆகா. அதற்கும் தாங்கள் அருள் புரிய வேண்டும்.(41)

गाम्भीर्यं परिखापदं घनधृतिः प्राकार उद्यद्गुण-
स्तोमश्चाप्तबलं घनेन्द्रियचयो द्वाराणि देहे स्थितः ।
विद्यावस्तुसमृद्धिरित्यखिलसामग्रीसमेते सदा
दुर्गातिप्रियदेव मामकमनोदुर्गे निवासं कुरु ॥ 42

க3ாம்பீ4ர்யம் பரிக2ாபத3ம் க4நத்4ருதி: ப்ராகார உத்3யத்3கு3ண
ஸ்தோம: சாப்தப3லம் க4நேந்த்3ரியசயோ த்3வாராணிதே3ஹே ஸ்தி2த:
வித்3யாவஸ்துஸம்ருத்3தி4ரித்யகி2லஸாமக்3ரீஸமேதே ஸதா3
து3ர்க3ாதிப்ரியதே2வ மாமக மநோ து3ர்கே2 நிவாஸம் குரு ॥ (42)

(ப-ரை) **து3ர்க3ாதிப்ரிய**- சுலபமாக கடக்கமுடியாத மலைக் கோட்டை வாசத்தில் அதிகப்பிரீதியுள்ள, **தே3வ**- ஏபரமேச்வர, **க3ாம்பீ4ர்யம்**- என்மனதின் காம்பீர்யமே- **பரிக2ாபத3ம்**- கோட்டைக்கு சுற்றிலுமுள்ள அழகின் லக்ஷணத்தைக் கொண்டதாக இருக்கிறது. அகிழும் மிக ஆழமானது, மனதும் மிகஆழமானது அதாவது மனதில்உள்ளவற்றை யாரும் எளிதில்அறிந்துகொள்ள முடியாது. **க4நத்4ருதி:**- உறுதியானதைர்யமே, **ப்ராகார:**- கோட்டைக்குநான்குபுறங்களிலுமுள்ளமதில்**உத்3யத்3கு3ணஸ்தோம:**- அவ்வப்போது தோன்றும் சிறந்த குணங்களின் கூட்டமே,

ஆப்தப3லம்- நம்பிக்கைக்கு பாத்திரமான சேனை. தே3ஹே ஸ்தி2த:- உடலில் இருக்கும், இந்த்3ரியசய:- கண், காது, முதலிய இந்திரியங்களின் சமுதாயமே, த்3வாராணி- கோட்டையின் வாயிற்படிகள். வித்3யா- ஈச்வரனைப்பற்றிய அறிவே, வஸ்து ஸம்ருத்3தி4:- ரஹஸியமாக இரக்ஷிக்கவேண்டிய நிறம்பியசொத்து. இதி- இவ்வாறு, அகி2லஸாமக்3ரீஸமேதே- எல்லாபொருள்களுடன் நிறம்பியிருக்குப், மாமகமநோது3ர்கே3- எனது மனதாகிற கோட்டையில், ஸத3ா- எப்பொழுதும், நிவாஸம்குரு- (தாங்கள்) வாஸம்செய்யுங்கள்,

(க-ரை) ஏ பரமேச்வர! தங்களுக்கு கோட்டையில் வாசம் செய்வதில் பிரியமல்லவா? என்மனதும் ஓர் சிறந்த கோட்டையாகவே இருக்கிறது. கோட்டைக்கு இருக்கவேண்டியவை எல்லாம் என்மனதிலும் இருக்கின்றன. ஆதலால் அங்கேயே தாங்கள் எப்பொழுதும் வாசம் செய்யவேண்டும். (42)

मागच्छ त्वमितस्ततो गिरिश भो मय्येव वासं कुरु
स्वामिन्नादिकिरात मामकमनः कान्तारसीमान्तरे ।
वर्तन्ते बहुशो मृगा मदजुषो मात्सर्यमोहादय-
स्तान् हत्वा मृगयाविनोदरुचितालाभं च संप्राप्स्यसि ॥ 43

மாக3ச்ச2 த்வமிதஸ்ததோ கி3ரிச பே4ா மய்யேவ வாஸம் குரு
ஸ்வாமிந்நாதி3கிராத் மாமகமந: காந்தாரஸீமாந்தரே।
வர்தந்தே ப3ஹுசோ ம்ருக3ா மத3ஜுஷோ மாத்ஸர்யமோஹாத3ய:
தாந்ஹத்வா ம்ருக3யாவிநோத3ருசிதாலாப4ம் ச ஸம்ப்ராப்ஸ்யஸி॥

ஆதி3கிராத- உலகில் முதல்முதலில் வேடனுகத் தோன்றியவரும், கி3ரிச, (ஆனதுபற்றியே) மலையில் வாசம் செய்கின்றவருமான, பே4ாஸ்வாமிந்- ஏ பரமேச்வர! த்வம்- தாங்கள், இதஸ்தத:- இங்குமங்கும், மாக3ச்ச2- செல்லவேண்டாம்: மய்யேவ- என்னிடத்திலேயே, வாஸம்குரு- வாஸம் செய்யுங்கள். மாமகமந: காந்தாரஸீமாந்தரே- என்னுடைய மனதாகிறகாட்டின் எல்லைக்குள், மத3ஜுஷ: திமிர்கொண்ட, மாத்ஸர்யமோஹாத3ய:- த்வேஷம், (வெறுப்பு) மோஹம் முதலிய, ம்ருக3ா:- மிருகங்கள், ப3ஹுச:- ஏராளமாக, வர்தந்தே- இருக்கின்றன. தாங்-

அவற்றை, **ஹத்வா-** கொன்று, **ம்ருக3யாவிநோத3ருசிதாலாப4ம் ச-** வேட்டையாடி காலத்தைப்போக்குவதில் உள்ள விருப்பத்தின்பயனையும், **ஸம்ப்ராப்ஸ்யஸி-** வேண்டியவரைப் பெறுவீர்கள்.

(க-ரை) ஏ பரமேச்வர! தாங்கள் உலகில் முதல்முதலில் வேடனாகத்தோன்றி பல மிருகங்களை வேட்டையாடுவதற்காக காட்டில் இங்குமங்கும் சுற்றிக்கொண்டிருக்கிறீர்கள். என்னிடத்திலேயே தாங்கள் வசிக்கும் பக்ஷத்தில் தங்களுக்கு அந்தசிரமம் இராது. மேலும், என்னுடைய மனதாகிற காட்டில் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் முதலிய பல கொழுத்த மிருகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் கொன்று வேட்டையில் விசேஷ லாபத்தையும் பெறலாம். அதாவது ஸ்ரீ பரமேச்வரனை இடைவிடாமல் தியானம் செய்தால் காமம், குரோதம் முதலிய துர்குணங்கள் நசித்துவிடும் என்பதாம். (43)

करलग्नमृगः करीन्द्रभङ्गो घनशार्दूलविखण्डनोऽस्तजन्तुः ॥
गिरिशो विशदाकृतिश्च चेतःकुहरे पञ्चमुखोऽस्ति मे कुतो भीः ॥

கரலக்3நம்ருக3:கரீந்த்3ரப4ங்கோ3க4நசார்தூ3லவிக2ண்டநோஸ்தஜந்து:॥
கி3ரிசோ விசத3ாக்ருதி:ச சேத: குஹரேபஞ்சமுகோ2ஸ்திமேகுதோபீ4:॥

(ப-ரை) **மே-** என்னுடைய, **சேத: குஹரே-** மனதாகிற குகையில், **கரலக்நம்ருக3:-** கையில் மானை தரிப்பவரும், (மானை அடித்துகையில் வைத்துக்கொண்டிருப்பதும்) **கரீந்த்3ரப4ங்க3:** கஜாசுரனைக் கொன்றவரும், (சிறந்த யானையைக் கொன்றதும்) **க4நசார்தூ3லவிக2ண்ட3ந:-** மிக்க பலமுள்ள வ்யாக்ராசுரனை அழித்தவரும், (பலம் பொருந்திய புலிகளை பிளப்பதும்) **அஸ்தஜந்து:-** தன்னிடம் லயத்தை அடைந்த பிராணிகளை உடையவரும், (தூரத்தில்துறத்தப்பட்ட பிராணிகளை உடையதும் **விசத3ாக்ருதி:-** வெளுத்த உருவத்தை உடையவரும், **கி3ரிச:-** மலையில் வசிப்பவருமான, **பஞ்சமுக2:-** ஐந்து முகங்களைக் கொண்ட ஸ்ரீபரமேச்வரனாகிற சிங்கம், **சேத: குஹரே-** என்

மனதாகிற குகையில், **அஸ்தி-** இருக்கின்றது (ஆதலால்) **மே-** எனக்கு, **பீ4:-** பயம், **குத:?** யாரிடமிருந்து உண்டாகும்.

(க-ரை) ஸ்ரீபரமேச்வரனை சிங்கமாகக் கற்பித்து அச்சிங்கம் என் மனதில் வசிக்கையில் எனக்கு எது பயம்? என்று கேட்கின்றார் கவி. இந்த சுலோகத்தில் உள்ள சொற்கள் எல்லாம் ஸ்ரீபரமேச்வரனையும் சிங்கத்தையும் குறிப்பிடுகின்றன. (44)

छन्दश्शाखिशिखान्वितैर्द्विजवरैस्संसेविते शाश्वते
सौख्यापादिनि खेदभेदिनि सुधासारैः फलैर्दीपिते ।
चेतः पक्षिशिखामणे त्यज वृथासंचारमन्यैरलं
नित्यं शङ्करपादपद्मयुगलीनीडे विहारं कुरु ॥ 45

சந்த3ச்சாகி2சிக2ாந் விதைர்த்3விஜவரைஸ்ஸம்ஸேவிதே சாச்வதே
ஸௌக்2யாபாதி3நி கே2த3பே4தி3நி ஸுதா4ஸாரை: ப2லைர் தீ3பிதே।
சேத: பக்ஷிசி2ாமணே த்யஜ வ்ருத2ாஸஞ்சாரமந்யைரலம்
நித்யம் சங்கரபாத3பத்3மயுக3லீநீடே3 விஹாரம் குரு॥

(ப-ரை) **சேத: பக்ஷிசி1க2ாமணே!** ஏ மனதாகிற சிறந்த பறவையே! **ச2ந்த3: ச1ாகி2சி1க2ாந்விதை:-** வேதங்களாகிற மரங்களின் கிளைகளாகிற உபநிஷத்துக்களை கற்றுணர்ந்த, **த்3விஜவரை:-** பிராம்பணர்களாகிற சிறந்த பக்ஷிகளால், **ஸம்ஸேவிதே-** சேவிக்கப்படுகின்றதும், **சாச்வதே-** அழிவற்றதும், **ஸௌக்2யாபாதி3நி-** சுகத்தை அளிக்கக்கூடியதும், **கே2த3பே4தி3நி-** ஸம்ஸார துக்கத்தை அழிக்கக்கூடியதும், **ஸுதா4ஸாரை:-** அமிருத ரஸம் போன்ற ரஸத்தை யுடைய **ப2லை:-** பழங்களுடன் **தீ3பிதே-** பிரகாசிக்கின்றதுயான, **சங்கரபாத3பத்3மயுக3லீநீடே3-** ஸ்ரீபரமேச்வரனுடைய இரு சரணாரவிந்தங்களாகிற கூண்டில, **நித்யம்-** எப்பொழுதும், **விஹாரம் குரு-** சஞ்சரித்துக் கொண்டு இரு. **அந்யை: அலம்-** மற்ற விடங்களில் ஓடித்திரிந்த தெல்லாம் போதும். **வ்ருதா2 ஸஞ்சாரம்-** வீணாக இங்குமங்கும் சுற்றுவதை எல்லாம், **த்யஜ-** விட்டுவிடு.

(க-ரை) ஸ்ரீ பரமசிவனுடைய சரணாரவிந்தங்களிலேயே என் மனது ஈடுபட்டிருக்க வேண்டுமென்ற விஷயத்தை, மனதை பக்ஷியாகவும், ஸ்ரீபரமேச்வரபாதங்களை கூடாகவும் கற்பித்துக்

கூறுகிறார். (45)

आकीर्णे नखराजिकान्तिविभवैरुद्यत्सुधावैभवै
राधौतेपि च पद्मरागललिते हंसव्रजैराश्रिते ।
नित्यं भक्तिवधूगणैश्च रहसि स्वेच्छाविहारं कुरु
स्थित्वामानसराजहंस गिरिजानाथाङ्घ्रिसौधान्तरे ॥ 46

ஆகீர்ணே நக2ராஜிகாந்திவிப4வைருத்3யத்ஸுதா4 வைப4வை
ராதௌ4தேபிச பத்3மராக3லலிதே ஹம்ஸவ்ரஜைராச்ரிதே I
நித்யம் ப4க்திவதூ4க3ணைச ரஹஸி ஸ்வேச்ச2ா விஹாரம் குரு
ஸ்தி2த்வா மாநஸ ராஜஹம்ஸகி3ரிஜா நாத2ாங்க்4ரி ஸௌத4ாந்தரே II

(ப-ரை) மாநஸராஜஹம்ஸ- ஏ மனதாகிற ஹம்ஸபக்ஷியே? நக2ராஜிகாந்திவிப4வை:- நகங்களின் காந்திப்பெருக்கால், ஆகீர்ணே- சூழப்பட்டதும், உத்3யத்ஸுதா வைப4வை:- எப்பொழுதும் சிரஸில் விளங்கிக்கொண்டிருக்கும் சந்திரனுடைய அமிருதமயமான கிரணங்களாகிற முத்து வெள்ளையின் பூச்சுக்களால், ஆதௌ3தே- எங்கும் வெளுப்பாகச் செய்யப்பட்டதாயும், பத்3மராகலலிதே- தாமரை புஷ்பத்தின் சிவந்த வர்ணம் போன்ற வர்ணமாகிற பத்மராகரத்தினத்தால் இழைக்கப்பட்டதும், ஹம்ஸவ்ரஜை:. ஹம்ஸ மந்திரத்தை தியானம் செய்யும் முனிவர்களாகிற ஹம்ஸபக்ஷிகளின் கூட்டங்களால், ஆச்1ரிதே- உபாஸிக்கப்பட்டதும் அல்லது சூழப்பட்டதுமான, கி3ரிஜாநாத2ாங்க்4ரி ஸௌத4ாந்தரே- பார்வதீ நாதனை ஸ்ரீ பரமேச்வரனுடைய சரணமாகிற மாளிகைக்குள், ரஹஸி- ஒருவருமறியாத ஓர் இடத்தில், ஸ்தி2த்வா, இருந்து கொண்டு, ப4க்திவதூ4க3ணை:- பக்தியாகிற சிறந்த பெண் ஹம்ஸங்களுடன் கூட, நித்யம்- எப்பொழுதும், ஸ்வேச்ச3ாவிஹாரம் குரு- உன்னிஷ்டப்படி விளையாடிக் கொண்டே இரு.

(க-ரை) மனதை ஹம்ஸபக்ஷியாகவும், ஸ்ரீ பரமேச்வரனுடைய சரணங்களை சிறந்த மாளிகையாகவும் கற்பனை செய்து அம்மாளிகையில் மனதாகிற ஹம்ஸபக்ஷி பக்தியாகிற பெண் பக்ஷிகளுடன் எப்பொழுதும் உல்லாசமாக க்ரீடித்துக்கொண்டே இருக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறார்.

ஸ்ரீமஹாதேவனுடைய மலரடிகளைச் சேவிப்பது, ஓர் சிறந்த மாளிகையில் மனதிற்கிசைந்த மங்கைகளுடன் உல்லாசமாக க்ரீடித்துக் கொண்டிருப்பதற்குச் சமமாம். (46)

शम्भुध्यान वसन्तसंगिनि हृदारामेऽघजीर्णच्छदाः
स्रस्ता भक्तिलताच्छटा विलसिता पुण्यप्रवलाश्रिताः ।
दीप्यन्ते गुणकोरका जपवचः पुष्पाणि सद्वासनाः
ज्ञानानन्दसुधामरन्दलहरी संवित् फलाभ्युन्नतिः ॥ 47

ச1ம்பு4யாநவஸந்தஸங்கி3நி ஹ்ருத3ா ராமே க4ஜீர்ணச்ச2த3ா:
ஸ்ரஸ்தா ப4க்திலதாச்2டா விலஸிதா புண்யப்ரவாலாச்ரிதா: ।
தீ3ப்யந்தே கு3ணகோரகா ஜபவச: புஷ்பாணி ஸத்வாஸநா:
ஞாநாநந்த3 ஸுதா4 மரந்த3லஹரீ ஸம்வித்ப2லாப்4யுந்நதி: ॥

(ப-ரை) **ச1ம்புத்4யாந வஸந்தஸங்கி3நி-** ஸ்ரீபரமேச்வரத்யாநமாகிற வஸந்தகாலத்துடன் கூடிய, **ஹ்ருத3ாராமே-** ஹ்ருதயமாகிற உத்யானத்தில், **ஸ்ரஸ்தா:-** கீழே உதிர்ந்து கிடக்கின்ற **அக4ஜீர்ணச்சத3ா:-** பாபங்களாகிற உலர்ந்த இலைகள், **விலஸிதா:-** மிகவும் பிரகாசிக்கின்றவைகளாகவும், **புண்யப்ரவாளாச்ரிதா:-** புண்ணியங்களாகிற தளிர்களைப் பெற்றவைகளாயும், **கு3ணகோரகா:-** நற்குணங்களாகிற மொட்டுகளை உடையவைகளாயும், **ஸத்3வாஸநா:-** ஸத்கர்மாக்களின் ஸம்ஸ்காரங்களாகிற வாஸனையைப் பெற்றவைகளாயு முள்ள **ப4க்திலதாச்ச2டா:-** பக்தியாகிற கொடிகளின் கூட்டங்கள், **ஜபவச:- புஷ்பாணி:-** மந்திரோச்சாரணங்களாகிற அக்கொடிகளின் புஷ்பங்கள், **ஞாநாநந்தஸுதா4 மரந்த2லஹரீ,-** ஞானமாகிற அமிருதம், ஆனந்தமென்ற தேன் இவற்றின் பிரவாஹம், **ஸம்வித்ப2லாப்4யுந்நதி:-** பிருஹ்மஞானமென்ற பழங்களின் ஸமிருத்தி இவையெல்லாம் **தீ3ப்யந்தே-** விளங்கிக்கொண்டிருக்கின்றன.

(க-ரை) மனதை உத்யானமாகவும் ஸ்ரீபரமேச்வரத்யானத்தை வஸந்தகாலமாகவும் இங்கு கவி கற்பித்திருக்கின்றார். உத்யானங்களின் கொடி செடிகள் வஸந்தகாலத்தில், பழைய இலைகளை இழந்து புதிய துளிர்கள், மொட்டுகள், புஷ்பங்கள் அவற்றின் வாசனைகள், பழங்கள் முதலியவற்றுடன் விளங்குமல்லவா? அது

போலவே மனதாகிற உத்யானத்திலும், ஸ்ரீ பரமேச்வரத்யான மாகிற வஸந்தகாலம் சம்பவித்ததும் பாபங்கள் என்ற பழைய இலைகள் உதிர்ந்து விடுகின்றனவாம். புண்ணிய மென்ற துளிர் கள் நற்குணங்களாகிற மொட்டுகள், மந்திரங்கள் என்னும் புஷ்பங்கள், நல்ல கார்யங்களில் ஈடுபடுதல் என்ற வாஸனை, இவை எல்லாவற்றுடன் கூடிய பலவித பக்திகளாகிற கொடிகள் தோன்றுகின்றன. மேலும் ஞானம் என்ற அமிருதம் ஆனந்தம் என்ற தேன் இவை பெருகுகின்றன. பிருஹ்மஞானம் என்ற சிறந்த பழமும் தோன்றி அதனாலும் அத்த உத்யானம் மிகச்சிறப் புடன் விளங்குகின்றதாம்.

ஸ்ரீபரமேச்வரத்யானத்தால் பிருஹ்மஞானப்வரை ஸமஸ்த பயன்களையும் மிக எளிதில் பெற்றுவிடலாம் என்பது இதன் கருத்து. (47)

नित्यानन्दरसालयं सुरमुनिस्वान्ताम्बुजाता श्रयं
स्वच्छं सद्द्विजसेवितं कलुषहृत्सद्वासनाविष्कृतम् ।
शम्भुध्यानसरोवरं व्रज मनोहंसावतंस स्थिरं
किं क्षुद्राश्रयपल्वलभ्रमणसञ्जातश्रमं प्राप्स्यसि ॥ 48

நித்யாநந்த2 ரஸாலயம் ஸுரமுநிஸ்வாநந்தாம்பு3ஜாதாச்1ரயம்
ஸ்வச்ச2ம் ஸத்3விஜஸேவிதம் கலுஷஹ்ருத்ஸத்வாஸநாவிஷ்க்ருதம் ।
ச1ம்பு4த்4யாந ஸரோவரம் வ்ரஜ மநோ ஹம்ஸா வதம்ஸ ஸ்தி2ரம்
கிம்க்ஷுத்3ராச்ரய பல்வலப்4ரமணஸஞ்ஜாதச்1ரமம் ப்ராப்ஸ்யஸி ॥

(ப-ரை) **மநோஹம்ஸாவதம்ஸ**- மனமாகிற ஏ ராஜஹம் ஸமே! **நித்யாநந்த3ரஸாலயம்**- அழிவற்ற ஆனந்தமாகிற ஜலம் நிறம்பியதும், **ஸுரமுநிஸ்வாந்தாம்பு3ஜாதாச்1ரயம்**- தேவர் கள், முனிவர்கள், இவர்களுடைய மனங்களாகிற தாமரைகளு டன் கூடியதும், **ஸ்வச்ச2ம்**- (நிர்மலமாயும்) வேறு விஷயங் களின் ஞாபகமற்றதும், **ஸத்3விஜஸேவிதம்**- சாதுக்களான அந்தணர் முதலியவர்களால் ஸேவிக்கப்பட்டதும், (சிறந்தஹம்ஸ பக்ஷிகளால் ஸேவிக்கப்பட்டதும்) **கலுஷஹ்ருத்**- பாபங்களை அழிக்கின்றதும், **ஸத்3வாஸநாவிஷ்க்ருதம்** ஸத்கர்மாக்களின் ஸம்ஸ்காரவசத்தால் உண்டானதும், (நல்ல வாசனையுடன்கூடிய

தும்) ஸ்**தி2ரம்**- அழிவற்றதுமான, **ச1ம்பு4த்4யாநஸ்ரோவரம்**- ஸ்ரீபரமேச்வர த்யானமாகிற சிறந்தநீரோடைக்கு, **வ்ரஜ**- செல். **க்ஷுத்3ராச்ரயபல்வலப்4ரமணஸஞ்ஜாதச்ரமம்**- விஷயமறியாதவர்களுக்கு ஆச்ரயமான குட்டைகளில் சுற்றித்திரிவதால் உண்டாகும் சிரமத்தை, **கிம்**- எதற்காக, **ப்ராப்ஸ்யஸி**- அடையப்போகிறாய்.

(க-ரை) மனதை ராஜஹம்ஸமாகவும், ஸ்ரீபரமேச்வரத்யானத்தை சிறந்த ஓடையாகவும் கற்பிக்கின்றார். ஹம்ஸங்கள் எப்பொழுதும் நீர் நிலையங்களிலேயேவசிக்கும் அதுபோல் மனமாகிற ராஜஹம்ஸமும் ஸ்ரீ பரமேச்வரத்யான மாகிற ஓடையிலே வசிக்கவேண்டும். பரமேச்வர த்யானத்தை வற்றாத ஓடையென்றும், மற்றதேவதைகளின் த்யானத்தை சிறிய குட்டையென்றும், கற்பித்து இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தையும், நீர் நிலயத்திற்கும் பரமேச்வர த்யானத்திற்கும் உள்ள ஒற்றுமையையும் இங்கு வர்ணிக்கிறார்.

பரமேச்வர த்யானமாகிற ஓடைக்கு, அழிவற்றஆனந்தமே ஜலம். தேவர்களுடையவும், முனிவர்களுடையவும், மனதுகளே தாமரைகள். சாதுக்களான அந்தணர் முதலியவர்களே ராஜஹம்ஸங்கள். ஸத்கர்மாக்களின் வாஸனைகளே (ஸம்ஸ்காரங்களே) வாஸனை. இத்தகைய சிறந்த வெற்றாத ஓடையை விட்டுவிட்டு மற்றதேவதைகளின் தியானமாகிற அற்பஓடைகளை என் அடையவேண்டும். அவைபாபங்களைப் போக்கடித்தாலும் முக்தியை அளிக்கக்கூடியவை அல்ல. ஆதலால் அவற்றை அண்டி வீண் சிரமத்தை அடையவேண்டாம் என்று மனதாகிற ஹம்ஸத்திற்கு உபதேசம் செய்கின்றார். (48)

आनन्दामृतपूरिता हरपदांभोजालवालोद्यता
स्थैर्योपघ्नमुपेत्य भक्तिलतिका शाखोपशाखान्विता ।
उच्चैर्मानसकायमानपटलीमाक्रम्य निष्कल्मषा
नित्याभीष्टफलप्रदा भवतु मे सत्कर्मसंवर्धिता ॥ 49

ஆநந்த3ாம்ருதபூரிதா ஹரிபத3ாம்பே4ா ஜாலவாலோத்3யதா
ஸ்தை2ர்யோபக்4ந்முபேத்ய ப4க்திலதிகா ச1ாகே2ாபச1ாக2ாந் விதா ।

உச்சைர்மாநஸகாயமாநபடலீமாக்ரம்ய நிஷ்கல்மஷா
நித்யாபீ4ஷ்_ப2லப்ரத3ா ப4வது மே ஸத்கர்மஸம்வர்தி4தா 11

(ப-ரை) **ஆநந்த3ாம்ருதபூரிதா**- சிவபக்தியில் பிரீதியாகிற ஜலம் நிறம்பியதாயும், **ஹரபத4ாம்பே4ாஜால வாலோத்3யதா**- ஸ்ரீபரமேச்வரனுடைய சரணாரவிந்தங்களாகிற பாத்தியிலிருந்து உயரக்கிளம்பியதும், **ஸ்தை2ர்யோபக்4நம்**- தைர்யமாகிற, சமீபத்தில் நடப்படும் தாங்குகோலை, **உபேத்ய**- தழுவி, **உச்சைர்மாநஸகாயமாந படலீம்**- உத்கிருஷ்டமான எண்ணங்களாகிற பந்தலின் மீது, **ஆக்ரம்ய**- படர்ந்து, **சா1கே2ாபச1ாக2ாந்விதா**- பெரியகிளைகள் சிறிய கிளைகள் முதலியவற்றுடன் கூடியதாகவும் **நிஷ்கல்மஷா**- எவ்வித குற்றம் குறைகள் அற்றதும், **ஸத்கர்மஸம்வர்தி4தா**- புண்யகர்மாக்களால் நன்கு வளர்க்கப் பட்டதுமான, **ப4க்திலதிகா**- பக்தியாகிறகொடி, **மே**- எனக்கு **நித்யாபீ4ஷ்டப2லப்ரத3ா**- அழிவற்ற அபீஷ்டங்களை (நான் விரும்பும் பயன்களை) அளிப்பதாக, **ப4வது**- ஆகட்டும்.

(க-ரை) ஒரு பாத்தியில் ஒரு கொடியை நட்டு ஜலத்தை ஊற்றி, அதற்கு சமீபத்தில் ஒரு தாங்குகோலையும் நட்டால், அக்கொடி அக்கோலின் வழியாகச் சென்று பந்தலில் படர்ந்து, கப்பும் கிளையுமாக தழைத்துவளரும். அப்படிப்பட்ட கொடி புழு, பூச்சி முதலியவற்றால் வெட்டப்படாமலும் நல்ல எருக்களால் நன்கு வளர்க்கப்பட்டதாகவுமானல் ஏராள பழங்களைப்பயக்கும். அதுபோல் பக்தியாகிற கொடி அழிவற்ற பயன்களை பயக்க வேண்டுமென்று இங்கு வேண்டிக்கொள்ளுகிறார். ஸ்ரீபரமேச்வரனுடைய சரணாரவிந்தங்களே இக்கொடிக்கு பாத்தியாம். பக்தியில்விருப்பமே ஜலம். தைர்யமே தாங்குகோல். விருப்பமும் மனஉறுதியுமிருந்தால் பக்திவளர்ந்துவிடும் என்பது கருத்து. நல்லஎண்ணங்களே பக்திக்கொடி படரும் பந்தல். முன்செய்த ஸத்கர்மாக்களே இதற்கு எரு. இவையெல்லாமிருந்தால் நித்யமான மோக்ஷத்தைக்கூட இக்கொடி அளிக்கக்கூடும். (49)

सन्ध्यारम्भविजृम्भितं श्रुतिशिरस्थानान्तराधिष्ठितं
सप्रेमभ्रमराभिराममसकृत्सद्वासनाशोभितम् ।
भोगीन्द्राभरणं समस्तसुमनःपूज्यं गुणाविष्कृतं
सेवे श्रीगिरिमल्लिकार्जुनमहालिङ्गं शिवालिङ्गितम् ॥ 50

ஸந்த்4யாரம்ப4விஜ்ரும்பி4தம் ச்1ருதிசி1ரஸ்த2ாநாந்தராதி4ஷ்டி2தம்
ஸப்ரேமப்4ரமராபி4ராமமஸக்ருத்ஸத்3வாஸநாசே1ாபி4தம் ।
போ4கீ3ந்த்3ராப4ரணம் ஸமஸ்தஸுமந: பூஜ்யம் கு3ணாவிஷ்க்ருதம்
ஸேவே ஸ்ரீகி3ரிமல்லிகார்ஜுநமஹாலிங்க3ம் சி1வாலிங்கி3தம்

(ப-ரை) **ஸந்த்4யாரம்ப4விஜ்ரும்பி4தம்-** சந்தியாகால ஆரம்பத்தில் ஆனந்தநர்த்தனம் செய்து பக்தர்களுக்கு அருள்புரிகின்றவரும், (சாயங்காலவேளையில் மலர்ந்த புஷ்பங்களால் அழகிய காட்சியை அளிக்கின்றதும்) **ச்1ருதிசி1ரஸ்த2ாநாந்தராதி4ஷ்டிதம்-** மலையைக்காட்டிலும் வேறான வேதாந்தங்களில் பிரதிபாத்யமாக இருப்பவரும், (காது, தலை முதலிய இடங்களில் அணியப்படும் புஷ்பங்களையுடையதும்) **ஸப்ரேமப்4ரமராபிராமம்-** பிரேமையுடன் கூடியப்ரமராம்பிகையால் மிகவும் அழகு வாய்ந்தவராயும், (ஆசைகொண்ட வண்டுகளால் ரமணீயமாயும்) **அஸக்ருத்-** எப்பொழுதும், **ஸத்3வாஸநாசே1ாபி4தம்-** ஸாதுக்களுடைய மனோபாவனைகளால் வியாப்தராயும், (நறுமணத்தால் சோபிக்கின்றதும்) **போ4கீ3ந்த்3ராப4ரணம்-** ஸர்ப்பத்தை ஆபரணமாக அணிந்தவரும். (விஷயாநுபவங்களில் சிறந்தவர்களுக்கு ஆபரணம் போன்றதும்) **ஸமஸ்தஸுமந: பூஜ்யம்-** எல்லா தேவர்களாலும் வித்வான்களாலும் பூஜிக்கப்பட்டவரும், (மற்ற எல்லா புஷ்பங்களைக் காட்டிலும் மிகச்சிறந்த புஷ்பங்களையுடையதும்) **கு3ணாவிஷ்க்ருதம்-** ஸத்வகுணம் மேலிட்டு பிரகாசிப்பவரும், (நறுமணம் முதலிய குணங்களுடன் விளங்குகின்றதும்) **சி1வாலிங்கி3தம்-** (பீடிகாரூபமான) பார்வதியால் ஆலிங்கனம் செய்யப்பட்டவருமான, **ஸ்ரீகி3ரிமல்லிகார்ஜுநமஹாலிங்க3ம்-** ஸ்ரீசைலத்தில் விளங்கும், மல்லிகைக்கொடியால் சுற்றப்பட்ட அர்ஜுனம் என்ற விருக்ஷம் (மருதமரம்) போன்ற மஹாலிங்கஸ்வரூபியான ஸ்ரீபரமேச்வரனை, **ஸேவே-** போற்றுகின்றேன்.

(க-ரை) இதில் ஸ்ரீசைல க்ஷேத்திரவாஸியான ஸ்ரீபரமேச்வரனை கவி போற்றுகின்றார்:—

அந்த க்ஷேத்திரத்தில் மல்லிகைக்கொடியால் சுற்றப்பட்ட அர்ஜுன விருக்ஷம் (மருதமரம்) ஸ்தலவிருக்ஷம்.

ஸ்வாமியின் பெயர் மல்லிகார்ஜுனேச்வரர். அம்பிகையின் பெயர் ப்ரமராம்பிகை. "மல்லிகார்ஜுனர்" என்ற பெயருக்கு ஏற்றபடி அர்ஜுன விருக்ஷத்திற்கும் ஸ்ரீ பரமேச்வரனுக்கும் உள்ள ஒற்றுமைகளை சிலேடையான பல சொற்களால் கவி வர்ணிக்கிறார். (50)

भृङ्गीच्छानटनोत्कटः करिमदग्राही स्फुरन्माधवा-
ह्लादो नादयुतो महासितवपुः पञ्चेषुणा चादृतः ।
सत्पक्षः सुमनोवनेषु सपुनस्साक्षान्मदीये मनो -
राजीवे भ्रमराधिपो विहरतां श्रीशैलवासी विभुः ॥ 51

ப்4ருங்கீ3ச்ச2ா நடனோத்கட: கரிமத3க்3ராஹீ ஸ்பு1ரந்மாத4வா-
ஹ்லாதே3ா நாத3யுதோ மஹாஸிதவபு: பஞ்சேஷுணா சாத்3ருத: ।
ஸத்பக்ஷ: ஸுமனோவனேஷு ஸபுன: ஸாக்ஷாந்மதீ3யே மனோ-
ராஜீவே ப்4ரமராதி4போ விஹரதாம் ஸ்ரீசை1லவாஸீ விபு4: ॥

(ப-ரை) **ப்4ருங்கீ3ச்ச2ாநடனோத்கட:**- பிருங்கீ என்ற பிரிய பக்தனுடைய கோரிக்கைப்படி நர்த்தனம் செய்வதில் அதிக விருப்பம் உடையவரும் (பெண்வண்டின் விருப்பப்படி ஆடுவதில் அதிக ஆசைகொண்டதும்) **கரிமத3க்3ராஹீ**- கஜாசுரனின் கொட்டத்தை அடக்கியவரும், (யானையின் மதஜலத்தை கிரஹிக்கும் திறமையுள்ளதும்) **ஸ்பு2ரன் மாத4வாஹ்லாத3:** மோஹினி அவதாரம் எடுத்த ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடம் உண்டான ஆனந்தத்தால் பிரகாசிக்கின்றவரும் (வஸந்தருதுவில் ஆனந்தத்துடன் விளங்குகின்றதும்) **நாத3யுத:**- நாதரூபமான பிரணவத்தால் பிரதிபாதனம் செய்யப்படுகின்றவரும் (ஜங்காரத்வனியுடன் கூடியதும்) **மஹாஸிதவபு:**- மிகவும் வெளுத்த சரீரத்தையுடையவரும் (மிகவும் கருத்த உடலை உடையதும்) **பஞ்சேஷுணா** மன்மதனாலும், **ஆத்3ருத:**- தன் பாணத்திற்கு லக்ஷ்யமாகத் தீர்மானம் செய்யப்பட்டவரும் (தனக்குதவியாக தீர்மானம் செய்ய

ப்பட்டதும்) **ஸுமனோவனேஷு- ஸத்பக்ஷ:-** தேவர்களை ரக்ஷிப்பதில் பிரிய முடையவரும் (பூந்தோட்டங்களில் விருப்பம் உள்ளதும்) **விபு4:-** பிரபுவான, **ஸ்ரீசைலவாஸீ-** ஸ்ரீசைல க்ஷேத்ரத்தில் வசிக்கும், **ஸாக்ஷாத்-** நமதுகண்முன்தோன்றும், **ப்4ரமராதி4ப:-** ப்ரமாரம்பிகைக்குஅதிபரானபரமேச்வரன் (வண்டுகளின் தலைவன்) **மனோராஜீவே-** மனதாகிற தாமரை புஷ்பத்தில், **விஹரதாம்-** சஞ்சரித்துக்கொண்டு இருக்கட்டும்.

(க-ரை) இதில் ஸ்ரீசைல க்ஷேத்ர வாசியான ப்ரமராம்பிகைக்குபதியான ஸ்ரீபரமேச்வரனை ப்ரமராதிபனாக, அதாவது வண்டுகளுக்குத் தலைவனாக கற்பித்து, வண்டுகள் தாமரைபுஷ்பத்தில் வசிக்கும் சுபாவமுள்ளதால், தனது மனதையும் தாமரை புஷ்பமாக கற்பித்து ஸ்ரீபரமேச்வரனாகிற வண்டு, மனதாகிற தாமரையில் சஞ்சரித்துக்கொண்டு இருக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார். ஸ்ரீபரமேச்வரனையும் வண்டையும் இதில் உள்ள சொற்கள் எல்லாம் சிலேடையாக குறிப்பிடுகின்றன. (51)

कारुण्यामृतवर्षिणं घनविपद्ग्रीष्मच्छिदाकर्मठं
विद्यासस्यफलोदयाय सुमनस्संसेव्यमिच्छाकृतिम् ।
नृत्यद्भक्तमयूरमद्रिनिलयं चञ्चज्जटामण्डलं
शंभो वाञ्छति नीलकन्धर सदा त्वां मे मनश्चातकः ॥ 52

காருண்யாம்ருதவர்ஷிணம் க4நவிபத்3க்3ரீஷ்மச்சி2த3ாகர்மட2ம்
வித்3யாஸஸ்யப2லோத3யாய ஸுமநஸ்ஸம்ஸேவ்ய மிச்ச2ாக்ருதிம் ।
ந்ருத்யத்ப4க்தமயூரமத்3ரிநிலயம் சஞ்சஜ்ஜடாமண்டலம்
சம்பே4ா வாஞ்ச2தி நீலகந்த4ர ஸத3ா த்வாம் மே மந:சாதக: ॥

(ப-ரை) **நீலகந்த4ர-** கருத்தகழுத்தையுடைய **ஹேசம்போ4-** ஏ! பரமேச்வரா (உலகங்களுக்கு சுகத்தை அளிக்கும், கருநிறமான ஏ நீருண்டமேகமே!, **காருண்யாம்ருதவர்ஷிணம்-** கருணையாகிற அமிருதத்தை பொழிகின்றவரும் (கருணையால் ஜலத்தை வர்ஷிக்கின்றதும்) **க4நவிபத்3க்3ரீஷ்மச்சி2த3ாகர்மட2ம்-** பெரிய ஆபத்துகளாகிற கொடிய தாபங்களை அழிப்பதில் திறமையுள்ளவரும் (குளம் குட்டை இவற்றை வற்றவைத்து துன்பங்களை தரக்கூடிய கடுங்கோடையை சமனம் செய்வதில் திறமை

வாய்ந்ததும். **வித்3யாஸஸ்யப2லோத3யாய-** வித்யை யாகிற பயிரின் பயனுகிற பிரும்மானந்த அனுபவத்தின் உற்பத்தி யின் பொருட்டு. **ஸுமநஸ்ஸம்ஸேவ்யம்-** தேவர்களாலும், வித் வான்களாலும் ஸேவிக்கத்தகுந்தவரும், (பயிர்கள் நன்ருய் வளர் வதின்பொருட்டு குடியானவர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப் படுகிறதும்) **இச்ச2ாக்ருதிம்-** தன் விருப்பப்படி உருவத்தை எடுத்துக்கொள்ளுகின்றவரும், **ந்ருத்யத்ப4க்த மயூரம்-** தன்னை க்கண்டதும் ஆநந்தத்தால் நர்த்தனம் செய்கின்ற பக்தர்களாகிற மயில்களையுடையவரும் (தனக்கெதிரில் களித்து ஆடிக்கொண்டி ருக்கும் பயில்களையுடையதும்) **அத்3ரிநிலயம்-** கைலாஸமலையில் வசிப்பவரும் (பெரும்பாலும் மலைப்ராந்தியங்களில்தங்ககூடியதும்) **சஞ்சத்ஜடாமண்டலம்-** அசைந்தாடும் ஜடைகளையுடையவரு மான (அடிக்கடி தோன்றி மறையும் மின்னல்களையுடையதும்) **த்வாம்-** தங்களை, **மே** என்னுடைய, **மந: சாதக:-** மனதாகிற சாதக பக்ஷி, **வாஞ்ச2தி-** விரும்பிக்கொண்டே இருக்கிறது.

(க-ரை) இதில் ஸ்ரீபரமேச்வரனை நீருண்டமேகத்திற்கு சமமாகவும், மனதை சாதகப்பறவைக்கு சமமாகவும் கற்பித்திரு க்கின்ருர். சாதகப்பறவை மேகத்திலிருந்து விழும் ஜலத்துளிகளை த்தான் குடிக்கும். வேறு எங்குள்ள ஜலத்தையும் குடிக்காது. அதுபோல் என் மனது தங்களையே நாடி நிற்கின்றது என வர்ணிக்கின்ருர். இதில் அடங்கியுள்ள சொற்கள் எல்லாம் சிலே டையாக ஸ்ரீ பரமேச்வனையும் நீருண்ட மேகத்தையும் குறிப்பிடு கின்றன.

(52)

आकाशेन शिखी समस्तफणिनां नेत्रा कलापी नता—
नुग्राहिप्रणवोपदेशनिनदैः केकीति यो गीयते ।
श्यामां शैलसमुद्भवां घनरुचिं दृष्ट्वा नटन्तं मुदा
वेदान्तोपवने विहाररसिकं तं नीलकण्ठं भजे ॥ 53

ஆகாசேந சிகீ2 ஸமஸ்தப2ணிநாம் நேத்ரா கலாபீநதா-
நுக்3ராஹிப்ரணவோபதே3ச நிநதை3: கேகீதி யோ கீ3யதே 1
ச்1யாமாம் சை1லஸமுத்ப4வாம் க4நருசிம் த்3ருஷ்ட்வா நடந்தம்முதா
வேதா3ந்தோபவநே விஹாரரஸிகம் தம் நீலகண்ட2ம் ப4ஜே ll

(ப-ரை) ஆகாசேன- ஆகாயத்தால், சிகீ2- சிகையுடன்கூடிய வராகவும், ("சிகி" என்று பெயருள்ளவராகவும்) ஸமஸ்தப2ணி நாம்- எல்லாஸர்பங்களுக்கும், நேத்ரா- தலைவனான ஆதிசேஷனால் கலாபி- ஆபரணங்களை அணிந்தவராகவும், (கலாபி என்று பெயருள்ளவராகவும்) நதானுக்3ராஹிப்ரணவோபதே3சநிநதை3:- வணங்குகின்றவர்களுக்கு அருள்புரியும் பிரணவத்தை உபதேசம் செய்யும் சப்தங்களால், கேகீதி- கேகீ என்றும், ய:- எவர், கீ3யதே- புகழப்படுகின்றாரோ. தம்- அப்படிப்பட்ட, ச்யாமாம்- கருத்தநிறமுடையவளும், சைலஸமுத்ப3வாம்-மலைக்கு பெண்ணாக தோன்றியவளும், க4னருசிம்- மேகத்தின் காந்தி போன்ற காந்தியுடையவளுமான பார்வதியை, த்ருஷ்ட்வா- பார்த்து, நடந்தம்- நர்த்தனம் செய்கின்றவரும், வேதா3ந்தோபவனே- உபனிஷத்துகளாகிற உத்யான வனத்தில், விஹாரரஸிகம்- விளையாடுவதில் விருப்பங்கொண்டவருமான, நீலகண்டம்- ஸ்ரீபரமேச்வரனாகிற மயிலை, ப3ஜே- போற்றுகின்றேன்.

(க-ரை) இந்தச்லோகத்திலும் ஸ்ரீபரமேச்வரனை மயிலாக கற்பித்து வேறு விதமாக வர்ணிக்கின்றார்.

மயிலுக்கு ஸம்ஸ்கிருதத்தில் "சிகீ," "கலாபீ," "கேகீ" என்ற பெயர்களுண்டு. மேலும் அது மலைப்பிராந்தியத்திலுள்ள நீருண்ட மேகங்களைகண்டு நர்த்தனம் செய்யும். உத்யானங்களில் விளையாடுவதில் அதற்கு ஆசை அதிகம். அதன்கழுத்து கருப்பாக இருப்பதால் அதற்கு நீலகண்டம் என்றும் பெயருண்டு. அவையெல்லாம் ஸ்ரீபரமேச்வரனிடத்திலும் அமைந்திருப்பதால் அவரும் இங்கு மயிலாக கற்பிக்கப்பட்டிருக்கிறார். பரமேச்வரனின் கழுத்தும் கருப்பாக இருப்பதால் அவருக்கும் நீலகண்டர் எனப்பெயர். "சிகீ" "கலாபீ" "கேகீ" என்றபெயர்களும் அவருக்கு சம்பவிக்கலாம். மேகம்போன்ற காந்தியையுடைய பார்வதியைக்கண்டு அவரும் ஆனந்தமடைகிறார். உபனிஷத்துக்களாகிற உத்யானவனத்தில் அவரும் கிரீடித்துக்கொண்டிருக்கிறார். (53)

सन्ध्या घर्मदिनात्ययो हरिकराघातप्रभूतानक—
ध्वानो वारिदगर्जितं दिविषदां दृष्टिच्छटा चञ्चला।
भक्तानां परितोषबाष्पविततिर्वृष्टिर्मयूरी शिवा
यस्मिन्नुज्वलताण्डवं विजयते तं नीलकण्ठं भजे॥ 54

ஸந்த்4யா க4ர்மதி3நாத்யயோ ஹரிகராக4ாதப்ரபூ4தாநக-
த்4வாநோ வாரித3கர்ஜிதம் தி3விஷத3ாம் த்ருஷ்டிச்சடாசஞ்சலா ।
ப4க்தாநாம் பரிதோஷப3ாஷ்பவிததிர்வ்ருஷ்டிர்மயூரீ சிவா
யஸ்மிந்நுஜ்வலதாண்டவம் விஜயதே தம் நீலகண்ட2ம் ப4ஜே ॥

(ப-ரை) **ஸந்த்4யா**- ஸாயங்காலவேளையே, **க4ர்மதி3நாத்யய:**- கிரீஷ்மருது முடிந்து வர்ஷருதுவின் ஆரம்பகாலம். **ஹரிகராக4ாதப்ரபூ4தாநகத்4வாந:**- ஸ்ரீவிஷ்ணுவின் கரதாடனத்தால் மிக அதிகமாக ஒலிக்கின்ற ஆனகம் என்ற ஒருவகை வாத்தியத்தின் த்வனியே, **வாரித3கர்ஜிதம்**-மேககர்ஜனம். **தி3விஷத3ாம்**-தேவர்களுடைய, **த்ருஷ்டிச்சடா**- பார்வைகளுடைய ஸமூஹமே. **சஞ்சலா**- மின்னல். **ப4க்தாநாம்**- பக்தர்களுடைய, **ப3ாஷ்பவிததி:**- ஆனந்தபாஷ்பங்களின் பெருக்கே, **வ்ருஷ்டி:**- மழை. **சிவா**- பார்வதியே, **மயூரீ**- பெண்மயில். **யஸ்மிந்**- எந்த பரமேச்வரனிடத்தில் **உஜ்வலதாண்டவம்**- மிக அழகான நடனம், **விஜயதே**- விளங்குகிறதோ, **தம்நீலகண்ட2ம்**- அப்படிப்பட்ட பரமேச்வரனுகிற மயிலை, **ப4ஜே**- போற்றுகிறேன்.

(க-ரை) ஸந்தியாகாலத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு ஆனகம் முதலிய வாத்தியங்களை முழங்க, வேர்கள் தரிசிக்க, பக்தர்கள் ஆனந்தபாஷ்பத்தைச் சொறிய ஸ்ரீபரமேச்வரன் பிரதிதினம் அழகாக நர்த்தனம் செய்கிறுர் என்பது பிரஸித்தம். இவ்விஷயத்தை வர்ஷாகால ஆரம்பத்தில், மேகங்கள் கர்ஜிக்க, மின்னல்கள் மின்ன, மழைபொழிந்து கொண்டிருக்கையில் ஓர் மயில் நர்த்தனம் செய்வதற்குச் சமமாக கவி ஒப்பிட்டு வர்ணித்திருக்கிறுர். **நீலகண்ட:** என்ற சொல் ஸ்ரீபரமேச்வரனையும், மயிலையும் குறிப்பிடும். (54)

आद्यायामिततेजसे श्रुतिपदैर्वेद्याय साध्याय ते
विद्यानन्दमयात्मने त्रिजगतस्संरक्षणोद्योगिने ।

ध्येयायाखिलयोगिभिस्सुरगणैर्गेयाय मायाविने
संयक्ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शम्भवे ॥ 55

ஆத்3யாயாமிததேஜஸே ச்1ருதிபதை3ர்வேத்3யாய ஸாத்4யாய தே
வித்3யாநந்த3மயாத்மநே த்ரிஜக3த: ஸம்ரக்ஷணோத்3யோகி3நே ।
த்4யேயாயாகி2லயோகி3பி4: ஸுரக3ணைர்கே3யாய மாயாவிநே
ஸம்யக்தாண்ட3வ ஸம்ப்4ரமாய ஜடிநே ஸேயம் நதி: ச1ம்ப4வே ॥

(ப-ரை) ஸா- பெரியோர்களைக்குறித்து செய்யப்படும், இயம் நதி:- இந்த என் நமஸ்காரம் முழுவதும் ஆத்3யாய- சிருஷ்டிக்கு முன்புகூட இருக்கின்றவரும், அமிததேஜஸே- அழிவற்ற ஒரே தேஜஸ்வரூபியாயும், ச்ருதிபதை3:- வேத வாக்கியங்களால், வேத்3யாய- அறியத்தகுந்தவரும், ஸாத்4யாய- பக்தர்களால் பல விதமாக போற்றத்தகுந்தவரும், வித்3யாநந்த3மயாத்மநே- சிதாநந்தஸ்வரூபியாயும், த்ரிஜக3த: ஸம்ரக்ஷணோத்3யோகி3நே- மூவுலகங்களையும் இரக்ஷிப்பதில் முயற்சி எடுத்துக்கொண்டவரும் அகி2லயோகி3பி4:- எல்லா யோகிகளாலும், த்4யேயாய- த்யானம் செய்யத்தகுந்தவரும், ஸுரகணை:- தேவர்களின் கூட்டங்களால், கே3யாய- புகழத் தகுந்தவரும், மாயாவிநே- சிச்சக்தியான மாயையுடன் கூடியவரும், ஸம்யக்தாண்ட3வஸம்ப்4ரமாய அழகிய நர்த்தனம் செய்வதில் விசேஷமாக ஈடுபட்டவரும், ஜடிநே- ஜடாதாரியாயுமிருக்கின்ற, ச1ம்ப4வே. ஸுகத்திற்கு காரணபூதரான ஸ்ரீபரமேச்வரரின் பொருட்டே (ஆகட்டும்)

(க-ரை) ஸ்ரீபரமேச்வரனைப் பலவாராகப்புகழ்ந்து, யாரை உத்தேசித்து நான் நமஸ்கரித்தபோதிலும் அது ஸர்வோத்கிருஷ்டரான ஸ்ரீபரமேச்வரனையே சேரவேண்டும் என வேண்டிக் கொள்ளுகிறார். (55)

नित्याय त्रिगुणात्मने पुरजिते कात्यायनीश्रेयसे
सत्यायादिकुटुम्बिने मुनिमनः प्रत्यक्षचिन्मूर्तये ।
मायासृष्टजगत्त्रयाय सकलाम्नायान्तसञ्चारिणे
सायं ताण्डवसम्भ्रमाय जटिने सेयं नतिश्शम्भवे ॥ 56

நித்யாய த்ரிகு3ணாத்மநே புரஜிதே காத்யாயநீச்ரேயஸே
ஸத்யாயாதி3குடும்பி3நே முநிமந: ப்ரத்யக்ஷசின்மூர்த்தயே ।

மாயாஸ்ருஷ்ட ஜக3த்ரயாய ஸகலாம்நாயாந்தஸஞ்சாரிணே
ஸாயம் தாண்ட3வஸம்ப்4ரமாய ஜடிநே ஸேயம் நதி: ச1ம்ப4வே ll

(ப-ரை) நித்யாய- நித்யராயும், த்ரிகு3ணாத்மநே- ஸத்வம், ரஜஸ் தமஸ் என்ற குணமயமான பிருஹ்ம, விஷ்ணு, ருத்ரஸ்வரூபியாயும், புரஜிதே- த்ரிபுரஸம்ஹாரம் செய்தவரும், காத்யாயநீச்ரேயஸே- பரமேச்வரியின் தவப்பயனும், ஸத்யாய- காலத்ரயத்திலும் அழிவற்றவரயும், ஆதி3குடும்பி3நே- முதல்குடும்பியாயும், முநிமந:ப்ரத்யக்ஷசிந்மூர்த்தயே- முனிவர்களுடைய மனதிற்கு விஷயமான சித்ஸ்வரூபத்தையுடையவரும், மாயாஸ்ருஷ்டஜக3த்ரயாய- மாயையால் மூவுலகங்களையும் சிருஷ்டித்தவரும், ஸகலாம்நாயாந்தஸஞ்சாரிணே- ஸகல உபனிஷத்துக்களாலும், போற்றப்படுகின்றவராயும், ஸாயம்தாண்ட3வஸம்ப்4ரமாய ஸாயங்காலத்தில் நர்த்தனம் செய்வதில் விசேஷமாக ஈடுபடுகின்றவரும்,ஜடிநே- ஜடாதாரியாயுமுள்ள,ச1ம்ப4வே-ஸ்ரீபரமேச்வரரின் பொருட்டு, ஸா- இயம்- நதி:- என்னுடைய இந்த நமஸ்காரம் ஆகட்டும்.

नित्यं स्वोदरपोषणाय सकलानुद्दिश्य वित्ताशया
व्यर्थं पर्यटनं करोमि भवतः सेवां न जाने विभो ।
मज्जन्मान्तरपुण्यपाकबलतस्त्वम् शर्व सर्वान्तर—
स्तिष्ठस्येव हि तेन वा पशुपते ते रक्षणीयोऽस्म्यहम् ॥ 57

நித்யம் ஸ்வோத3ரபோஷணாய ஸகலாநுத்தி3ச்ய வித்தாச1யா
வ்யர்த்த2ம் பர்யடநம் கரோமி ப4வத: ஸேவாம் ந ஜாநே விபே4ா l
மஜ்ஜந்மாந்தரபுண்யபாகப3லதஸ்த்வம் ச1ர்வ ஸர்வாந்தர-
ஸ்திஷ்ட2ஸ்யேவஹி தேந வா பசுபதே தே ரக்ஷணீயோஸ்ம்யஹம் ll

(ப-ரை) நித்யம்- எப்பொழுதும், ஸ்வோத3ரபோஷணாய- என்வயிற்றை வளர்ப்பதற்காக, வித்தாச1யா- பணத்தில் ஆசையால், ஸகலாந்- உத்தி3ச்ய- எல்லா பணக்காரர்களையும் குறித்து, வ்யர்த்த2ம்- வீணாக, பர்யடநம் கரோமி- சுற்றித்திரிகிறேன். விபே4ா- எங்கும் நிறைந்த ஏபரமேச்வர! ப4வத:- ஸேவாம்- தங்களுடைய சேவையை நஜாநே- நான்அறியேன். ஹேபசுபதே ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் பதியாயிருப்பவரே! ஹேச1ர்வ- பக்தர்

களுடைய பாபத்தை அழிக்கக்கூடியவரே! ஹி-யாதொரு காண த்தால், த்வம்- தங்கள், மஜ்ஜந்மாந்தரபுண்யபாகப3லத:- நான் ஜன்மாந்தரத்தில் அநுஷ்டித்த புண்ணியங்கள் பயனை அளிக்கும் தருணத்தில் இருக்கின்ற பலத்தால், ஸர்வாந்தர:- எல்லோரிடமும் அந்தர்யாமியாக, திஷ்ட2ஸி- இருக்கின்றிர்களோ, தேநவா- அக்காரணம்பற்றியாவது, தே-தங்களால் அஹம்-நான், ரக்ஷணிய:- இரக்ஷிக்கத்தகுந்தவனாக, அஸ்மி- இருக்கின்றேன்.

(க-ரை) எப்பொழுதும் "பணம் பணம்" என்று பறந்து கொண்டு ஸ்ரீபரமேச்வரனை பஜனம் செய்யாதவர்கள் கூட ஸ்ரீபரமேச்வரனால் அவசியம் இரக்ஷிக்கப்படவேண்டியவர்கள் தான் என்பதை காரணத்துடன் கவி இங்கு எடுத்துரைக் கின்றார். (57)

एको वारिजबान्धवः क्षितिनभो व्याप्तं तमोमण्डलं
भित्वा लोचनगोचरोऽपि भवति त्वं कोटिसूर्यप्रभः ।
वेद्यः किन्नभवस्यहो घनतरं कीदृक्भवेन्मत्तमः
तत्सर्वं व्यपनीय मे पशुपते साक्षात्प्रसन्नो भव ॥ 58

ஏகோ வாரிஜப3ாந்த4வ: க்ஷிதிநபே4ாவ்யாப்தம் தமோமண்ட3லம்
பி4த்வா லோசநகே3ாசரோபி ப4வதி த்வம் கோடிஸூர்யப்ரப4: ।
வேத்3ய: கிம் நப2வஸ்யஹோ க4நதரம் கீத்3ருக் ப4வேந் மத்தம:
தத்ஸர்வம் வ்யபநீய மே பசு1பதே ஸாக்ஷாத் ப்ரஸந்நோ ப4வ ॥

(ப-ரை) பசு1பதே-ஏபரமேச்வர! வாரிஜப4ாந்த4வ:- தாமரைக்கு பந்துவான சூரியன், ஏக:- ஒருவனாக இருந்துகொண்டே க்ஷிதிநபே4ாவ்யாப்தம்- பூமியையும் ஆகாசத்தையும் வியாபித்திருக்கும், தமோமண்ட3லம்- இருளின் ஸமூகத்தை, பி4த்வா- பிளந்துதள்ளி, லோசநகே3ாசரோபி- கண்களுக்கு புலப்படக் கூடியவனாகவும், ப4வதி- ஆகின்றான். த்வம்- தாங்களோ, கோடிஸூர்யப்ரப4:- கோடி சூரியன்களுடைய காந்திபோன்ற காந்தியையுடையவர். (அப்படிப்பட்டதாங்கள்) வேத்3ய: கிம் நப4வஸி- எங்களால் அறியக்கூடியவராக ஏன் ஆவதில்லை. அஹோ! ஆச்சரியம்! மத்தம:- அறியாமையாகிற என்னுடைய இருள் க4நதமமபி- மிக்க அதிகமாக இருந்தபோதிலும், கீத்3ருக் ப4வேத்

(ஒளிமயமான தங்கள் முன்னிலையில்) எத்தகையதாக இருக்கும்! தத்- ஆகையால், ஸர்வம்- அரியாமையாகிற என் இருள் எல்ல, வற்றையும், வ்யபநீய- போக்கடித்து, மே- எனக்கு, ஸாக்ஷாத்-ப்ரத்யக்ஷமாகவும், ப்ரஸந்ந:- அருள் புரிகின்றவராகவும், ப4வ- (தாங்கள் ஆகவேண்டும்.)

(க-ரை) கோடி சூரியபிரகாசரான தாங்கள் என்னுடைய அஜ்ஞானத்தை அகற்றி தங்களுடையஸாக்ஷாத்காரத்தை அளிக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறார். (58)

हंसः पद्मवनं समिच्छति यथानीलांबुदं चातकः
कोकः कोकनदप्रियं प्रतिदिनं चन्द्रं चकोरं यथा ।
चेतो वाञ्छति मामकं पशुपते चिन्मार्गमृग्यं विभा
गौरीनाथ भवत्पदाब्जयुगलं कैवल्यसौख्यप्रदम् ॥ 59

ஹம்ஸ: பத்3மவநம் ஸமிச்ச2தி யதா2 நீலாம்பு3த3ம் சாதக:
கோக: கோகநத3ப்ரியம் ப்ரதிதினம் சந்த்3ரம் சகோரம் யதா2 ।
சேதோ வாஞ்ச2தி மாமகம் பசுபதே சிந்மார்க3ம்ருக்3யம் விபே4ா
கௌ3ரீநாத2 ப4வத்பத3ாப்ஜ யுக3லம் கைவல்யஸௌக்யப்ரத3ம் ॥

(ப-ரை) ஹேபசு1பதே! ஹேவிபே4ா! ஹேகௌ3ரீநாத2! பசுபதியாயும் எங்கும் நிறைந்தவராயும் உமாகாந்தராயுமுள்ள ஏ பரமேச்வர! ஹம்ஸ:- அன்னப்பறவை, பத்3மவநம்- தாமரை வனத்தை (தாமரைகள் நிறைந்த குளத்தை) யதா2- எப்படி ஸமிச்ச2தி- விரும்புகின்றதோ, சாதக:- சாதகம் என்ற பக்ஷி (இது மேகத்திலிருந்து ஜலம் பூமியில் விழுவதற்கு முன்பே அந்த ஜலத்தை உட்கொள்ளும் சுவபாவமுள்ளது) நீலாம்பு3த3ம்- நீருண்ட மேகத்தை (எவ்விதம் விரும்புகின்றதோ) கோக:- சக்ரவாகம் என்ற பக்ஷி, ப்ரதிதி3னம்- ஒவ்வொருநாளும் கோகநத3ப்ரியம்- சூரியனை (எவ்விதம் விரும்புகின்றதோ) சகோர:- சகோரம் என்றபக்ஷி (இது சந்திரகிரணங்களை புசிக்கும் ஸ்வபாவமுள்ளது சந்த்3ரம்- சந்திரனை (எவ்விதம் விரும்புகின்றதோ) ததா2- அவ்விதமே, மாமகம், சேத:- எனது மனம், சிந்மார்க்க3ம்ருக்3யம்- உபனிஷத்துக்களால் மட்டும் அறியத்தகுந்ததும், கைவல்ய ஸௌக்2யப்ரத3ம்- மோக்ஷ சுகத்தை அளிக்கக்கூடியதுமான,

ப4வத்பாத3ா ப்ஜயுகளம், தங்களுடைய, தாமரைபோன்ற இருசரணங்களையும், **வாஞ்ச2தி-** விரும்புகின்றது.

(ப-ரை) அன்னப்பரவை முதலியவைகள் தாமரைவனம் முதலியவற்றை அடையாதபோனல் எவ்விதம் சுகத்தைப் பெற முடியாதோ அவ்விதமே பரமேச்வரனுடைய சரணரவிந்தத்தை பஜிக்காதவரை மனதிற்கு சாச்வத சுகமிராது என்பது கருத்து. (59)

रोधस्तोयहृतः श्रमेण पथिकश्छायां तरोर्वृष्टितः
भीतः स्वस्थगृह गृहस्थमतिथिर्दीनः प्रभुं धार्मिकम् ।
दीपं सन्तमसाकुलश्च शिखिनं शीतावृतस्त्वं तथा
चेतस्सर्वभयापहं व्रजसुखं शंभोः पदांभोरुहम् ॥ 60

ரோத4ஸ்தோயஹ்ருத: ச்1ரமேண பதி2க: ச2ாயாம் தரோர்வ்ருஷ்டித:
பீ4த: ஸ்வஸ்த2க்3ருஹம் க்3ருஹஸ்த2மதிதி2ர்தீ3ந: ப்ரபு4ம் த4ார்
[மிகம்]

தீ3பம் ஸந்தமஸாகுல:ச சி1கி2நம் சீ1தாவ்ருதஸ்த்வம்தத2ா
சேதஸ்ஸர்வ ப4யாபஹம் வ்ரஜ ஸுக2ம் ச1ம்பே4ா: பத3ாம் பே4ா
[ருஹம் ll

(ப-ரை) **சேத:-** ஏமனமே! **தோயஹ்ருத:-** பிரவரஹத்தால் அடித்துச் செல்லப்பட்ட மனிதன், **ரோத4:-** கரையை (எவ்விதம் அடைகின்ருனே) **பதி2க:-** வழிப்போக்கன், **ச்ரமேண-** களைப்புற்ற காரணத்தால், **தரோ: ச2ாயாம்** மரத்தின் நிழலை (எப்படி நாடுகின்ருனே) **வ்ருஷ்டித:** மழையினின்றும், **பீ4த:-** பீதியடைந்தவன், **ஸ்வஸ்த2க்3ருஹம்-** சுகவாஸத்திற்கு யோக்யமான வீட்டை (எப்படி அடைகின்ருனே) **அதிதி2:-** அதிதியானவன் **க்3ருஹஸ் த2ம்-** கிருஹஸ்ததர்மத்துடன் கூடியவனை (எப்படி நாடிச் செல்லுகின்ருனே) **தீ3ந:-** ஏழை, **த4ார்மிகம் ப்ரபு4ம்-** தர்மசிந்தனையுள்ள பிரபுவை, (எப்படி அடைகிருனே) **ஸந்தமஸாகுல:-** நள்ளிருளால் பீடிக்கப்பட்டவன், **தீ4பம்-**தீபத்தை(எப்படி தேடுகின்ருனே) **சீதாவ்ருத:-** பனியால் சூழப்பட்டவன், **சி1கி2நம்-** நெருப்பை எப்படி நாடுகின்ருனே **தத2ா-** அவ்விதமே **த்வம்-** நீயும், **ஸர்வப4யாபஹம்-** எல்லாவித பயத்தை

போக்கடிக்கக்கூடியதும், ஸுக2ம்- சுகத்தைத்தரக்கூடியதுமான ச1ம்பே4ா:- பரமேச்வரனுடைய, பத3ாம்பே4ாருஹம்- சரணாரவிந்தத்தை- வ்ரஜ- தேடி அடை.

(க-ரை) பிரவாஹத்தில் இழுத்துச்செல்லப்படுகின்றவன் போலவும், மற்றும் திருஷ்டாந்தமாகக் குறிப்பிட்டவர்கள் போலவும்,பலவித துன்பங்களால் தவித்துக்கொண்டிருக்கும் நம் மனது பரமேச்வரனுடைய சரணங்களை பஜித்தால்தான் அதனுடைய கஷ்டங்கள் தீரும்- உதாரணமாகக்கூறப்பட்ட கரை முதலியவை பிரவாஹத்தில் செல்லுகின்றவன் முதலியவர்களின் அக்காலத்தில் உள்ள துன்பங்களை மட்டும் நீக்கக்கூடுமல்லாமல் அவர்களுக்கு வேறு சுகத்தை அளிக்கமாட்டா. ஆனால்ஸ்ரீபரமேச்வரசரணமோ மனதின் துன்பங்களை எல்லாம் விலக்கி சாச்வதமான சுகத்தையும் அளிக்கின்றது என்பது விசேஷம்.

अङ्कोलं निजवीजसन्ततिरयस्कान्तोपलं सूचिका
साध्वी नैजविभुं लताक्षितिरुहं सिन्धुःसरिद्वल्लभम् ।
प्राप्नोतीह यथा तथा पशुपतेः पादारविन्दद्वयं
चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा सा भक्तिरित्युच्यते ॥ 61

அங்கோலம் நிஜபீ3ஜஸந்ததிரயஸ் காந்தோபலம் ஸூசிகா
ஸாத்4வீ நைஜவீபு4ம் லதாக்ஷிதிருஹம் ஸிந்து4: ஸரித்வல்லப4ம் l
ப்ராப்னோதீஹ யத2ா தத2ா பசு1பதே: பாத3ாரவிந்த3த்3வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்ட2தி ஸத3ா ஸா ப4க்திரித்யுச்யதே ll

(ப-ரை) நிஜபீ3ஜஸந்ததி:- தன்விதைகளின் ஸமூகஹம், அங்கோலம்- எரியழிஞ்சல் மரத்தையும், ஸூசிகா- எரும்பூஊசி அயஸ்காந்தோபலம்- அயஸ்காந்தக்கல்லையும், ஸாத்4வீ- பதிவிருதை, நைஜவிபு4ம்- தன்கணவனையும், லதா- கொடி, க்ஷிதிருஹம்- மரத்தையும், ஸிந்து4:- நதி, ஸரித்3வல்லப4ம்- சமுத்திரத்தையும், இஹ- இவ்வுலகில், யத2ா- எவ்விதம், ப்ராப்னோதி தானகவே வந்தடைகின்றதோ, தத2ா- அவ்விதமே, பசு1பதே:- பரமேச்வரனுடைய, பாத3ாரவிந்த3த்3வயம்- இருசரணாரவிந்தங்களையும், சேதோவ்ருத்தி:- மனோவிருத்தி, உபேத்ய- நாடிச்சென்று, ஸத3ா- எப்பொழுதும், திஷ்ட2தி- அவைகளிலேயே

நிலைபெற்று விடுகின்றது என்பது யாதொன்று உண்டோ, ஸா- அதுவே, ப4க்தி:- இதி- பக்தி என்று, உச்யதே சொல்லப்படுகிறது.

(க-ரை) அழிஞ்சல் மரத்தின் விதைகள் பூமியில் எந்த இடத்தில் விழுந்தாலும், வேறு ஒருவருடைய உதவியின்றியே மரத்தடிக்கே வந்து சேர்ந்துவிடுகின்றன என்பது பிரசித்தம். அதுபோலும், ஊசி அயஸ்காந்தத்தினிடம் செல்லுவதுபோலும், மற்றுமுள்ள உதாஹரணங்களைப்போலும் மனோவிருத்தி இயற்கையாகவே ஸ்ரீ பரமேச்வரசரணாரவிந்தங்களை நாடிச்சென்று அவ்விடத்திலேயே நிலைபெற்று விட்டால் அதுதான் பக்தி எனப்படும். இதுதான் பக்தியின் லக்ஷணம். (61

आनन्दाश्रुभिरातनोति पुलकं नैर्मल्यतश्छादनं
वाचाशङ्खमुखस्थितैश्च जठरापूर्तिं चरित्रामृतैः ।
रुद्राक्षैर्भसितेन देव वपुषो रक्षां भवद्भावना—
पर्यङ्के विनिवेश्य भक्तिजननी भक्तार्भकं रक्षति ॥ 62)

ஆநந்த3ாச்1ருபி4ராதநோதி புலகம் நைர்மல்யத: ச2ாத3நம்
வாசாச1ங்க2முக2ஸ்தி2தை: ச ஜட2ராபூர்த்திம் சரித்ராம்ருதை: ।
ருத்3ராக்ஷைர்ப4ஸிதேந தே3வ வபுஷோ ரக்ஷாம் ப4வத்3பா4வநா-
பர்யங்கே விநிவேச்1ய ப4க்திஜநநீ ப4க்தார்ப4கம் ரக்ஷதி ॥

(ப-ரை) **தே3வ-** ஸ்வப்ரகாசஸ்வரூபியான ஏ பரமேச்வர! **ப4க்திஜநநீ-** (தங்களிடமுள்ள) பக்திஎன்ற தாய், **ப4க்தார்ப4கம்-** பக்தனாகிற குழந்தையை, **ப4வத்ப4ாவநாபர்யங்கே-** தங்களுடைய தியானமாகிற மஞ்சத்தில், **விநிவேச்1ய-** படுக்கவைத்து, **ரக்ஷதி-** இரக்ஷிக்கின்றாள். (எப்படி என்றால்) **ஆனந்த3ாச்1ருபி4:-** ஆனந்தக்கண்ணீர்களால், **புலகம்-** ரோமாஞ்சத்தையும், **நைர்மல்யத:-** சிசுவின் களங்கமற்ற எண்ணமாகிற வஸ்திரத்தால், **ச2ாதநம்-** போர்த்துதலையும், **வாசாச1ங்க2முக2ஸ்தி2தை:-** வேதவாக்குகளாகிற சங்கத்திலிருக்கும், **சரித்ராம்ருதை:-** சரித்ரங்களாகிற பாலால், **ஜட2ராபூர்த்திம்-** வயிற்றை நிறப்புதலையும் (உணவூட்டுதலையும்) **ருத்3ராக்ஷை:-** ருத்ராக்ஷங்களாலும், **ப4ஸிதை:-** விபூதிகளாலும், **வபுஷோ ரக்ஷாம்-**

உடலுக்கு ரக்ஷையையும், **ஆதநோதி-** செய்கின்றுள்.

(ச-ரை) பிரியமுள்ள தாய் தன் குழந்தையை வளர்ப்பது போல் பக்தியாகிற தாய் பக்தனுகிற குழந்தையை இரக்ஷிக்கிருள். ஈச்வரத்யானமாகிற தொட்டிலில் பக்தனுகிற குழந்தையை தூங்கப் பண்ணுகிருள். குழந்தையிட முள்ள அன்பால் தாயாருக்கு ஆனந்தக்கண்ணீர் பெருகி, அது குழந்தையின் உடலில் பட்டுஅதனுல்பயிர்கூச்சல் உண்டாகும். அதுபோல் பக்தனுக்கு ஆனந்தக்கண்ணீர் பெருகி அது அவன் உடலில் விழுந்து அதனுல் அவனுடைய மயிர்கள் சிலிர்கின்றன. பக்தியையும்,பக்தனையும்,ஒன்ருகக்கற்பித்து இங்குகவிபேசுகிருர்.பக்தனுடையநல்ல எண்ணங்களாகிற சுத்தமான வஸ்திரத்தால் பக்தனைப் போத்துகின்ருள். அதனுல் ஈ,எறும்பு,குளிர் இவற்றைப்போல்துன்பத்தை விளைவிக்கக்கூடிய கெட்டஎண்ணங்கள் அவனைஅணுகாமலிருக்கின்றன. வேதங்களாகிற சங்கத்தில் உள்ள பரமேச்வர சரித்திரங்களாகிறபாலை பக்தனுக்கு ஊட்டுகின்ருள். ருத்ராக்ஷங்களாலும், விபூதியாலும் உடலுக்கு ரக்ஷாபந்தனம் செய்கின்ருள். (62)

मार्गावर्तितपादुका पशुपतेरङ्गस्य कूर्चायते
गण्डूषांबुनिषेचनं पुररिपोर्दिव्याभिषेकायते ।
किञ्चिद्भक्षितमांसशेषकवलं नव्योपहारायते
भक्तिः किं नकरोत्यहो वनचरो भक्तावतंसायते ॥ 63

மார்கா3வர்த்திதபாது3கா பசுபதேரங்க3ஸ்ய கூர்சாயதே
க3ண்டூ3ஷாம்பு3நிஷேசநம் புரரிபோர்தி3வ்யாபி4ஷேகாயதே ।
கிஞ்சித்ப4க்ஷிதமாம்ஸசேஷகப3லம் நவ்யோபஹாராயதே
பக்தி:கிம் நகரோத்யஹோ வநசரோ ப4க்தாவதம்ஸாயதே ॥

(ப-ரை) **பசுபதே:-** பரமேச்வரனுடைய, **அங்க3ஸ்ய** உடலுக்கு, **மார்க3ாவர்திதபாது3கா-** வழிநடந்து தேய்ந்த பாதுகை, **கூர்சாயதே-** புருவங்களின் நடுபிரதேசம் போல் ஆகின்றது. **புரரிபோ:-** த்ரிபுரஸம்ஹாரம் செய்த ஸ்ரீபரமேச்வரனுக்கு, **க3ண்டு3ஷாம்பு3நிஷேசநம்-** வாயில் ஏந்திய ஜலத்தால் செய்யப்படும் அபிஷேகம், **தி3வ்யாபி4ஷேகாயதே-** கங்கா ஜலத்தால் செய்யப்படும் அபிஷேகம்போல் ஆகின்றது. **கிஞ்சித்**

ப4க்ஷிதமாம்ஸசேஷகப3லம்- கொஞ்சம் கடிக்கப்பட்டு மீதி இருக்கும் மாம்ஸத்தின் துண்டு, **நவ்யோபஹாராயதே**-புதிதான நிவேதனத்திற்கு உரிய பொருள்போல் ஆகின்றது. **வநசரः**- வேடன், **பக்தாவதம்ஸாயதே**- பக்தர்களுள் மிகச்சிறந்தவனாக ஆகின்றான். **அஹோ**- என்ன ஆச்சரியம்! **ப4க்திः**- பரமேச்வரனிடமுள்ள பக்தி, **கிம் நகரோதி**- எதைத்தான் செய்யாது? **கூர்1சாயதே** என்பதற்கு தர்ப்பமுஷ்டிபோல் மிக பரிசுத்த வஸ்துவாக ஆகின்றது என்ற பொருளும் பொருந்தும்.

(க-ரை) ஸ்ரீபரமேச்வர பக்தியின் பெருமையை கண்ணப்ப நாயனார் என்ற சிறந்த பக்தனுடைய வரலாற்றைக் கூறி விளக்குகிறார். கண்ணப்பநாயனார் வேட ஜாதியில் பிறந்தவர். பாதுகையை இரு கண்களுக்கும் மத்தியில் அடையாளத்திற்காக வைத்துக்கொண்டு அவரது கண்களைப்பிடுங்கிஸ்ரீபரமேச்வரனுக்கு அர்ப்பணம் செய்தார். வாய் ஜலத்தால் அபிஷேகம் செய்தார். அவர் தின்று ருசி பார்த்த மாம்ஸத்தை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்தார். இருந்தாலும் இவை எல்லாவற்றையும் பரமேச்வரன் மிகப்புனித வஸ்துக்களாக பாவித்தார். ஏன்? அவனிடமுள்ள அளவு கடந்த பரமேச்வர பக்திதான் காரணம். பக்தி எதைத் தான் செய்யாது?

वक्षस्ताडनमन्तकस्य कठिनापस्मारसंमर्दनं
भूभृत्पर्यटनं नमत्सुरशिरःकोटीरसंघर्षणम् ।
कर्मेदं मृदुलस्य तावकपदद्वन्द्वस्य किंवोचितं
मच्चेतोमणिपादुकाविहरणं शम्भो सदाङ्गीकुरु ॥ 64

வக்ஷஸ்தாட3நமந்தகஸ்ய கடி2நாபஸ்மாரஸம்மர்த3நம்
பூ4ப்4ருத்பர்யடநம் நமத்ஸுரசிர:கோடீரஸங்க4ர்ஷணம் ।
கர்மேத3ம் ம்ருதுலஸ்ய தாவகபத3த்3வந்த3வஸ்ய கிம் வோசிதம்
மச்சேதோமணிபாது3கா விஹரணம் ச1ம்பே4ா ஸதா3ங்கீ3குரு ॥

(ப-ரை) **அந்தகஸ்ய**- யமனுடைய, **வக்ஷஸ்தாட3நம்** மார்பில் உதைத்தல், **கடி2நாபஸ்மாரஸம்மர்த3நம்**- மிகக் கடினமான அபஸ்மாரம் என்ற பூதத்தை காலால் துகைத்தல் **பூ4ப்4ருத்பர்யடநம்**- மலைகளில் சஞ்சரித்தல், **நமத்ஸுரசிர:**

கோடீரஸங்க4ர்ஷணம்- வணங்குகின்ற தேவர்களுடைய தலைகளில் உள்ள கிரீடங்களில் உறைதல், **இத3ம் கர்ம**- இம்மாதிரி கார்யமெல்லாம், **கௌரீபதே**- ஏபார்வதீபதே, **ம்ருத3லஸ்ய**- மிசவும் மிருதுவான, **தாவகபத3த்3வந்த்3வஸ்ய**- தங்களுடைய இருசரணத்திற்கும், **கிம் வா உசிதம்?** உசிதமாக ஆகுமா? (ஆதலால்) **ச1ம்பே4ா**- ஏபரமேச்வரா! **மச்சேதோ மணிபாதுகாவிஹரணம்**- என் மனதாகிற மணிமயமான பாதுகைகளை அணிந்துகொண்டு இங்குமங்கும் சுற்றுதலை, **ஸத3ா**- எப்பொழுதும், **அங்கீ3குரு**- ஏற்றுக்கொள்ளுங்கள்.

(க-ரை) என்மனதிலேயே எப்பொழுதும் வாசஞ்செய்ய வேண்டுமென்பதை கவி இவ்வாறு வர்ணித்திருக்கிறுர். (64)

वक्षस्ताडनशङ्कया विचलितो वैवस्वतो निर्जराः
कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते।
दृष्ट्वा मुक्तिवधूस्तनोति निभृताश्लेषं भवानीपते
यच्चेतस्तव पादपद्मभजनं तस्येह किं दुर्लभम्॥ 65

வக்ஷஸ்தாட3நச1ங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ்வலரத்நதீ3பகலிகாநீராஜநம் குர்வதே 1
த்3ருஷ்ட்வா முக்திவதூ4ஸ்தநோதி நிப்4ருதாச்1லேஷம் ப4வாநீபதே
யச்சேதஸ்தவ பாத3பத்3மப4ஜநம் தஸ்யேஹ கிம் து3ர்லப4ம் ll

(ப-ரை) **ப4வாநீபதே**- ஏபரமேச்வா! **யச்சேத:**- எவனுடைய மனது, **தவ**- தங்களுடைய, **பாத3பத்3மப4ஜநம்**- சரணாரவிந்தங்களில் ஈடுபடுகின்றதோ, **த்3ருஷ்ட்வா**- அவனைக்கண்டு, **வைவஸ்வத:**- யமன், **வக்ஷஸ்தாட3நச1ங்கயா**- முன்போல் ஸ்ரீபரமேச்வான் நமது மார்பில் உதைக்கக்கூடுமோ என்ற சந்தேஹத்தால், (மார்க்கண்டேயனிடம் யமன் சென்றகாலத்தில் பரமேச்வரன் அவனை காலால் உதைத்தார் என்பது புராண பிரசித்தம்) **விசலித:**- வெகுதூரம் விலகிச்செல்லுகிறுன். **நிர்ஜரா:** தேவர்கள், **கோடீரோஜ்வலரத்நதீ3பகலிகாநீராஜநம்**- கிரீடங்களில் ஜ்வலிக்கும் தீபங்கள்போன்ற இரத்தினங்களின் ஒளிகளால் ஹாரத்தியை, **குர்வதே**- (செய்கின்றனர்) எடுக்கின்றனர். **முக்திவதூ4:**- முத்தியாகிற வனிதை- **நிப்4ருதாச்1லேஷம்**

இறுக ஆலிங்கனத்தை, **தநோதி**- செய்கின்ருள். **தஸ்ய**- அந்த பரமேச்வரபக்தனுக்கு, **இஹ**- இவ்வுலகில், **கிம்**- எதுதான்? **து3ர்லப4ம்** கிடைக்கக்கூடாதது?

(க-ரை) பரமேச்வர பக்தனைக்கண்டு யமன் நடுங்குகின்ருன் தேவர்கள் வணங்குகின்றனர். முக்தி என்ற மாது அவனிடம் விருப்பங்கொண்டு வருகின்ருள். இவ்வுலகில் அவனுக்குக் கிடைக்கக்கூடாததே ஒன்றுமில்லை என்பதாம். (65)

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जनाः
यत्कर्माचरितं मया च भवतः प्रीत्यै भवत्येव तत् ।
शम्भो स्वस्य कुतूहलस्य करणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ॥ 66

க்ரீட3ார்த்த2ம் ஸ்ருஜஸி ப்ரபஞ்சமகி2லம் க்ரீட3ாம்ருக3ாஸ்தே ஜநா:
யத்கர்மாசரிதம் மயா ச ப4வத: ப்ரீத்யை ப4வத்யேவ தத் ।
ச1ம்பே4ா ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம் மச்சேஷ்டிதம் நி:சிதம்
தஸ்மாந் மாமக ரக்ஷணம் பசு1பதே கர்த்தவ்யமேவ த்வயா ॥

(ப-ரை) **ச1ம்பே4ா**- ஏ பரமேச்வரா!, **அகி2லம்**- எல்லா, **ப்ரபஞ்சம்**- பிரபஞ்சத்தையும், **க்ரீட3ார்த்த2ம்**- விளையாட்டிற்காக, **ஸ்ருஜஸி**- சிரிஷ்டிக்கின்றீர்கள். **ஜநா:**- ஜனங்கள் எல்லோரும், **தே**- தங்களுக்கு, **க்ரீட3ாம்ருக3ா:**- விளையாடுவதற்காக நிர்மாணம் செய்யப்பட்ட மிருகங்களாக இருக்கின்ருர்கள். (ஆகலால்) **மயா**- என்னுல், **யத்கர்ம**- எந்த எந்த காரியம் **ஆசரிதம்**- செய்யப்படுகின்றதோ, **தத்**- அவையெல்லாம், **ப4வத:**- தங்களுடைய, **ப்ரீத்யை ஏவ**- பிரீதியின் பொருட்டே, **ப4வதி**- ஆகின்றது. **மச்சேஷ்டிதம்**- என்னுடைய சேஷ்டைகள் **ஸ்வஸ்ய**- **குதூஹலஸ்ய**-தங்களுடைய குதூகலத்தின், **கரணம்**- அநுஷ்டான ரூபம்என்பது, **நி:சிதம்**- நிச்சயம். **தஸ்மாத்**- ஆகையால், **பசு1பதே**- ஏ பரமேச்வர! **மாமகரக்ஷணம்**- என்னை இரக்ஷித்தல் என்பது, **த்வயா**- தங்களால், **கர்த்தவ்யமேவ**. செய்யத்தகுந்ததாகவே ஆகிறது.

(க-ரை) உலகில் ஒருவன் விளையாடுவதற்கு என்று மான் முதலிய மிருகங்களை சிருஷ்டித்தானேயாகில் அந்த மான் முதலிய

வைசெய்யும் காரியங்கள் எல்லாம் விளையாடுகின்றவனின் திருப்திக்கே சாதனங்களாக ஆகும் "ஆதலால் ஏ பரமேச்வர! நான் தங்களுடைய க்ரீடாமிருகமாகையால் நான் செய்வதெல்லாம் தங்களுக்கு திருப்தியைத்தான் அளிக்கும். ஆதலால் என்னை தாங்கள் இரக்ஷித்தே ஆகவேண்டும்." என வேண்டிக்கொள்ளுகிறார். (66)

बहुविधपरितोषवाष्पपूर
स्फुटपुलकांकितचारुभोगभूमिम् ।
चिरपदफलकांक्षिसेव्यमानां
परमसदाशिवभावनां प्रपद्ये ॥ 67

ப3ஹுவித4பரிதோஷபா3ஷ்பபூரம்
ஸ்பு2டபுலகாங்கிதசாருபோ4கபூமிம் ।
சிரபத3ப2லகாங்க்ஷிஸேவ்யமானாம்
பரமஸத3ாசி1வபா4வநாம் ப்ரபத்3யே ॥

(ப-ரை) **ப3ஹுவித4 பரிதோஷ பா3ஷ்பபூரஸ்பு2டபுலகாங்கிதசாருபோ4க3பூ4மிம்-** பலவித ஆனந்த பாஷ்பப் பெருக்கிற்கும், தெளிவான மயிர்கூச்சலுக்கும் அழகியபோகஸ்தானம் போன்றதும், **சிரபத3ப2லகாங்க்ஷிஸேவ்யமாநாம்-** அழிவற்ற பதவியாகிற (மோக்ஷமாகிற) பயனை விரும்புகின்றவர்களால் சேவிக்கப்படுகின்றதுமான, **பரமஸத3ாசி1வபா4வநாம்-** அனைவரையும்விட சிறந்தவரும் நித்யானந்தஸ்வரூபியுமான ஸ்ரீபரமேச்வரனுடைய த்யானத்தை, **ப்ரபத்3யே-** சரணமாக அடைகின்றேன்.

(க-ரை) இதில் இடைவிடாமல் ஸ்ரீபரமேச்வரத்யானத்திலேயே நான் ஈடுபட்டிருக்கிறேன் எனக்கவி கூறுகின்றார். சாச்வதமான பதவி, அதாவது மோக்ஷத்தை விரும்புகின்றவர்கள் எல்லோரும் ஸ்ரீ பரமேச்வரத் தியானத்தை செய்து கொண்டிருக்கின்றனர். ஆனந்த பாஷ்பமும், ரோமாஞ்சமும் களங்கமற்ற பக்தியின் அடையாளம். பரமேச்வரத்யானத்தில் ஈடுபட்டவர்களிடம் இவ்விரு அடையாளங்களையும் எப்பொழுதும் காணலாம். (67)

अमितमुदमृतं मुहुर्दुहन्तीं
विमलभवत्पदगोष्ठमावसन्तीम् ।
सदयं पशुपते सुपुण्यपाकां
मम परिपालय भक्तिधेनुमेकाम् ॥ 68

அமிதமுத3ம்ருதம் முஹுர் து3ஹந்தீம்
விமலப4வத்பத3கோ3ஷ்ட2 மாவஸந்தீம் ।
ஸதய பசு1பதே ஸுபுண்யபாகாம்
மம பரிபாலய ப4க்திதே4நுமேகாம் ॥

(ப-ரை) **ஸத3ய**- தயவுடன்கூடிய, **பசு1பதே**- ஜீவர்களாகிற பசுக்களுக்கு பதியான ஏபரமேச்வரா? **அமிதமுத3ம்ருதம்**- அளவுகடந்த ஆனந்தமாகிறபாலை, **முஹு:**- அடிக்கடி, **து3ஹந்தீம்**- கறந்துகோண்டே இருக்கின்றதும், **விமலப4வத்பத3கே3ாஷ்ட2ம்**- பரிசுத்தமான, தங்களுடையசரணங்களாகிற கொட்டிலில், **ஆவஸந்தீம்**- வாசஞ்செய்கின்றதும், **ஸுபுண்யபாகாம்**- புண்யத்தின் பயனைப் பெற்றதுமான, **மம**- என்னிடமுள்ள, **ப4க்திதே4நும்**- பக்தியாகிற பசு ஒன்றை மட்டும், **பரிபாலய**, தாங்கள் வளர்த்து போஷிக்க வேண்டும்.

(ச-ரை) உலகில், பசுவை வளர்க்க சக்தியற்ற ஒருவன் பல பசுக்களை வளர்த்து வருகின்றவனிடம் தன்பசுவை வளர்ப்பதற்காக ஒப்படைப்பதுபோல், ஸ்ரீ பரமேச்வர பக்தியாகிற பசுவை, பசுக்களுக் கெல்லாம் பதியான ஸ்ரீ பரமேச்வரனே இரக்ஷித்து வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறார். பக்தியாகிற பசு எப்பொழுதும் ஆனந்தமாகிற பாலை கறந்து கொண்டே இருக்கிறது. பல ஜன்மங்களில் செய்த புண்ணிய வசத்தால்தான் அது கிடைக்கக்கூடும். ஸ்ரீபரமேச்வர சரணங்களாகிற பரிசுத்தமான கொட்டிலில் அது வாசஞ்செய்கிறதாம்.

ஏ பரமேச்வரா! தங்களிடம் உள்ள பக்தி எனக்கு மேன் மேலும் அபிவிருத்தியாகும்படி தாங்கள் அருள்புரிய வேண்டுமென்பது கருத்து. (68)

जडता पशुता कलङ्किता
कुटिलचरत्वं च नास्ति मयि देव ।

अस्ति यदि राजमौले
भवदाभरणस्य नास्मि किं पात्रम् ॥ 69

ஜட3தா பசு1தா கலங்கிதா
குடிலசரத்வம் ச நாஸ்தி மயி தே3வ ।
அஸ்தி யதி3 ராஜமௌலே
ப4வத3ாப4ரணஸ்ய நாஸ்மி கிம் பாத்ரம் ॥

(ப-ரை) **ஜட3தா**- மூடனாக இருக்கும்தன்மை, (ஜலமயமாக இருக்குந்தன்மை) **பசுதா**- பசுபோல் விவேகமில்லாமை, **கலங்கிதா**- ஏதாவது ஒரு குறையுடனிருந்தல், (உடலில் கருத்த களங்கத்துடன்கூடியிருத்தல்) **குடிலசரத்வம்**- ஒழுங்கீனமாக நடத்தல் (உடல் மூளியாகவே திரிதல்) இவையெல்லாம், **தே3வ**- ஏ பரமேச்வர! **மயி**- என்னிடத்தல், **நாஸ்தி**- இல்லை. **அஸ்தி யதி3**- இருந்தாலுங்கூட, **ராஜமௌளே**- சந்திரனை தலையில் அணிந்திருக்கும் ஏ பரமேச்வர! **ப4வத3ாப4ரணஸ்ய**- தங்களுடைய ஆபரணமாக ஏற்றுக்கொள்ளுவதற்கு, **கிம் பாத்ரம் நாஸ்மி**- நான் தகுதியுள்ளவன் அல்லவா என்ன?

(க-ரை) குற்றங்குறை உள்ளவர்களை பலர் தன்னுடன் சேர்த்துக் கொள்வதில்லை. இருந்தாலும் பரமகருணாமூர்த்தியான ஸ்ரீ பரமேச்வரன் பல தோஷங்களுடன் கூடிய சந்திரனை தலையில் அணிந்து கொண்டிருக்கிறார். சந்திரன் அமாவாசை யன்று பிரகாசமற்ற ஜடவஸ்துவாக ஆகிவிடுகின்றான். பசுபோல் விவேகமற்று குருபத்நியை இச்சித்தான். உடலில் எப்பொழுதும் களங்கமுள்ளவன். உடல் மூளியாக இருந்தாலும் இங்குமங்கும் சஞ்சரித்துக்கொண்டே இருப்பவன். இவ்வித குற்றங்கள் நிறைந்த சந்திரனையே தலையில் அணிந்திருக்கும் தாங்கள் அவ்வித குற்றங்களுள் ஒன்றுகூட இல்லாத என்னை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது என வினவுகிறார். (69)

अरहसि रहसि स्वतन्त्रबुद्ध्या
वरिवसितुं सुलभः प्रसन्नमूर्तिः ।
अगणितफलदायकः प्रभुर्मे
जगदधिको हृदि राजशेखरोऽस्ति ॥ 70

அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ரபு3த்3த்4யா
வரிவஸிதும் ஸுலப4: ப்ரஸந்நமூர்த்தி: ।
அக3ணிதப2லதா3யக: ப்ரபு4ர்மே
ஜக3த3தி4கோ ஹ்ருதி3 ராஜசே1க2ரோஸ்தி ॥

(ப-ரை) **ப்ரஸந்நமூர்த்தி:**- எனக்கு அருள்புரியும் நோக்கங் கொண்ட உருவத்தைப் பெற்றவரும், **அக3ணிதப2லதா3யக:**- கணக்கில்லாத என் இஷ்டங்களை எல்லாம் அளிக்கின்றவரும், **ப்ரபு4:**- எல்லா காரியங்களையும் சாதிக்குந் திறமையுள்ளவருர், **ஜக3த3தி4க:**- உலகிலேயே மிகச்சிறந்தவராயுமிருக்கின்ற, **ராஜசே1க2ர:**- சந்திரனை தலையில் அணிந்த ஸ்ரீ பரமேச்வரன் (அரசர்களுக்கெல்லாம் தலைவன்) **மேஹ்ருதி3**- என்னுடைய ஹ்ருதய குஹையிலேயே, **அஸ்தி**- இருக்கின்றார். (ஆகையால்) **அரஹஸி,** அனைவரும் அறிந்த இடத்திலோ, **ரஹஸி**- ஒருவரும் அறியாத என் மனதிலோ, **ஸ்வதந்த்ரபு3த்3த்4யா**- எனக்கு ஸ்வாதீனமானவர் என்ற எண்ணத்துடன், **வரிவஸிதும்**- உபாஸிப்பதற்கு, **ஸுலப4:**- சுலபராக (இருக்கின்றார்.)

(க-ரை) அளவுகடந்த பயன்களை அளிக்கும் ஓர்பிரபு எனக்கு ஸ்வாதீனமாக இருக்கின்றார். ஹ்ருதயகுஹையிலோ, அல்லது வெளியிலேயோ அவர் என்னால் உபாஸிக்கக் கூடியவராகவும் இருக்கின்றார். எனக்கு என்ன குறைவு ? (70)

आरूढभक्तिगुणकुञ्चितभावचाप—
युक्तैः शिवस्मरणबाणगणैरमोघैः ।
निर्जित्य किल्बिषरिपून् विजयी सुधीन्द्रः
सानन्दमावहति सुस्थिरराजलक्ष्मीम् ॥ 71

ஆருட4ப4க்திகு3ணகுஞ்சித பா4வசாப-
யுக்தை: சிவஸ்மரணபா3ணக3ணைரமோகை4: ।
நிர்ஜித்ய கில்பி3ஷரிபூந் விஜயீ ஸுதீ4ந்த்3ர:
ஸாநந்த3மாவஹதி ஸுஸ்தி2ரராஜலக்ஷ்மீம் ॥

(ப-ரை) **ஆருட4ப4க்திகுணகுஞ்சிதபா4வசாபயுக்தை:**- திருடமானபக்தியாகிறநாண் கயிற்றால்வளைக்கப்பட்டபுத்தியாகிற

வில்லில் தொடுக்கப்பட்டவையும், **அமோகை4:-** ஒருநாளும் வீணாக ஆகாதவையுமான, **சி1வஸ்மரண ப3ாணக3ணை:-** சிவஸ்மரணங்களாகிற பாணக்கூட்டங்களால், **கில்பி3ஷரிபூந்-** பாபங்களாகிற எதிரிகளை, **நிர்ஜித்ய-** ஜயித்து **விஜயீ-** ஜயசீலனான, **ஸுதீ4ந்த்3ர:-** சிறந்த மேதாவி, **ஸுஸ்தி2ரராஜலக்ஷ்மீம்-** ஸ்திரமான ராஜலக்ஷ்மியை (மோக்ஷத்தை) **ஸாநந்த3ம்-** மிகவும் ஆனந்தத்துடன், **ஆவஹதி-** அநுபவித்துக் கொண்டிருக்கிறுன்.

(க-ரை) உலகில் ஒரு அரசன் எதிரிகளை வென்று ஸ்திரமான ராஜலக்ஷ்மியை அநுபவிப்பதுபோல் சிறந்த புத்திமான், புத்தியாகிற வில்லை பக்தியாகிற நாண்கயிற்ருல் வளைத்து, அதில் சிவஸ்மரணமாகிற பழுதற்ற அம்புகளைத் தொடுத்து, அவற்ருல் பாபங்களாகிற விரோதிகளை வென்று, ஸ்திரமான மோக்ஷலக்ஷ்மியை அநுபவிக்கின்ருன். உலகில் முக்தன் ஒருவன்தான்பிரகாசித்துக் கொண்டிருக்கிருன். ஆதலால் அவன் "ராஜா" என்று சொல்லத் தகுந்தவன். அவனிடமுள்ள லக்ஷ்மீ, மோக்ஷம். அது அழிவற்றது. ஆதலால் இங்கு "ஸுஸ்தி2ர ராஜலக்ஷ்மீ" என்பதற்கு மோக்ஷம் என அர்த்தங் கூறப்பட்டது. (71)

ध्यानाञ्जनेन समवेक्ष्य तमःप्रदेशं
भित्वा महाबलिभिरीश्वरनाममन्त्रैः ।
दिव्याश्रितं भुजगभूषणमुद्वहन्ति
ये पादपद्ममिह ते शिव ते कृतार्थाः ॥ 72

த்4யாநாஞ்ஜநேந ஸமவேக்ஷ்ய தம: ப்ரதே3சம்
பி4த்வா மஹாப3லிபி4ரீச்வரநாமமந்த்ரை; 1
தி3வ்யாச்1ரிதம் பு4ஜக3பூ4ஷணமுத்3வஹந்தி
யே பாத3பத்மமிஹதே சி1வதே க்ருதார்த்த2ா: ll

(ப-ரை) **ஹேசிவ-** ஏபரமேச்வரா, **த்4யாஞ்ஜநேந-** தியானமாகிற அஞ்ஜனத்தால் (அஞ்ஜனம் என்பது மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வஸ்துவைபிரகாசப்படுத்தும் ஒருவிதமான மை) **ஸமவேக்ஷ்ய-** உள்ளே இருக்கும் பொருளை உற்றுகவனித்துப்பார்த்து, **ஈச்வரநாம மந்த்ரை:-** ஈச்வர நாமாக்கள் என்ற

மந்திரங்களாகிற, **மஹாப3லிபி4:**- மிக்கபலசாலிகளைக்கொண்டு **தம:ப்ரதே3ச1ம்** வஸ்துவை மறைக்கும் இருள் அடைந்த பிரதேசத்தை, **பி4த்வா**- பிளந்த, **யே**- எந்தபக்தர்கள், **தி3வ்யாச்1ரிதம்**- தேவர்களால் போற்றப்பட்டதும், **பு4ஜக3பூ4ஷணம்**- ஸர்பங்களை ஆபரணமாகக்கொண்டதுமான, **தே பாத3பத்3மம்**, தங்களுடைய தாமரை போன்ற சரணத்தை, **இஹ**- இதே ஜன்மத்தில், **உத்வஹந்தி**- எடுத்து அநுபவிக்கின்றனரோ, **தே** அவர்கள், **க்ருதார்த2ா:**- பிறவிப்பயன் எல்லாவற்றையும் பெற்றவர்களாக ஆகின்றனர்.

(க-ரை) உலகில் புதையல் இருக்கும் இடத்தை ஒருவித மையின் உதவியால் கண்டுபிடித்து, இருளடைந்த அவ்விடத்தை மிக்க பலசாலிகளைக்கொண்டு பிளந்து தள்ளி உள்ளே இருக்கும் புதையலைப்பெற்று ஒருவன் ஆனந்தத்தை அடைவதுபோல், த்யானமாகிற மையால் ஸ்ரீபரமேச்வர சரணாரவிந்தமிருக்குமிடத்தை அறிந்து, அவருடைய நாமாக்களாகிற பலிஷ்டர்களின் உதவியால், ஸ்ரீபரமேச்வர சரணத்தை மறைக்கும் அஞ்ஞானமாகிற ஸ்தலத்தைப் பிளந்து தள்ளி, ஸ்ரீபரமேச்வர சரணத்தைக் கண்டு பிடித்து எவர் அதை சிரஸால் வஹிக்கின்றனரோ, அவர்களே கிருத கிருத்யர்கள். (72)

भूदारतामुदवहद्यदपेक्षया श्री—
भूदार एव किमतः सुमते लभस्व ।
केदारमाकलितमुक्तिमहौषधीनां
पादारविन्दभजनं परमेश्वरस्य ॥ 73

பூ4த3ாரதாமுத3வ ஹத்யத3பேக்ஷயா ஸ்ரீ-
பூ4த3ார ஏவ கிமத:ஸுமதே லப4ஸ்வ ।
கேத3ாரமாகலிதமுக்திம ஹௌஷதீ4நாம்
பாத3ாரவிந்த3ப4ஜநம் பரமேச்1வரஸ்ய ॥

(ப-ரை) **ஹேஸுமதே!** ஏ நல்லமனதே! **யத3பேக்ஷயா**- எந்த சரணத்தைக் காணவேண்டுமென்ற விருப்பத்தால், **ஸ்ரீபூ4**

த3ாரஏவ- ஸ்ரீதேவி பூதேவி இவர்களை பார்யையாகப்பெற்ற ஸ்ரீமஹாவிஷ்ணுவே, **பூ4த3ாரதாம்**- பன்றியாக இருக்கும் தன்மையை, **உதவஹத்**- பெற்றார் (என்பது) **கிம்**- பிரசித்தம். **அத:**- ஆதலால், **ஆகலிதமுக்திமஹௌஷதீ4நாம்**- அணைவராலும்விரும்பப்படுகின்ற நான்குவித முக்திகளாகிற சிறந்த ஓஷதிகளுக்கு, **கேத3ாரம்**- உற்பத்தி ஸ்தானமாகின்ற வயல்போன்ற, **பரமேச1வரஸ்ய**- ஸ்ரீபரமேச்வரனுடைய, **பாத3ாரவிந்த3ப4ஜநம்**- சரணாரவிந்த பஜனத்தை, **லப4ஸ்வ**- கைப்பற்று.

(க-ரை) ஸர்வலோகபூஜ்யரான ஸ்ரீமஹாவிஷ்ணுவே ஸ்ரீபரமேச்வர சரணாரவிந்தபஜனத்திற்காக பன்றி உருவத்தைக்கூட ஏற்றார் என்றால் மற்றவர்கள் அச்சரணத்தை அவசியம் பஜனம்செய்தே ஆகவேண்டும் என்பதை உரைக்கவும் வேண்டுமோ. ஸ்ரீபரமேச்வரசரண பஜனத்தால் ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாயுஜ்யம், ஸாரூப்யம், என்ற நான்குவித முக்திகளையும் பெறலாம். (73)

आशापाशक्लेशदुर्वासनादि—
भेदोद्युक्तै र्दिव्यगन्धैरमन्दैः ।
आशाशाटीकस्य पादारविन्दं
चेतःपेटीं वासितां मे तनोतु ॥ 74

ஆச1ாபாச1க்லேச1 து3ர்வாஸநாதி3
பே4தே3ாத்யுக்தைர் தி3வ்யக3ந்தை4ர மந்தை3: ।
ஆசாசாடீகஸ்ய பாத3ாரவிந்த3ம்
சேத: பேடீம் வாஸிதாம் மே தநோது ॥

(ப-ரை) **ஆச1ா சா1டீகஸ்ய**- திசைகளையே ஆடையாகக் கொண்ட ஸ்ரீபரமேச்வரனுடைய, **பாத3ாரவிந்த3ம்**, தாமரை போன்ற சரணம், **மே** என்னுடைய, **சேத:பேடீம்**- மனதாகிற பெட்டியை, **ஆச1ாபாச1க்லேச1து3ர்வாஸநாதி3பே4தே3ாத்யுக்தை:**- கயிறுபோல் கட்டக்கூடிய ஆசை, க்லேசங்கள், இவைகளாகிற துர்கந்தம் முதலியவற்றை அகற்றுவதில்ஈடுபட்ட **அமந்தை3:**- குறைவற்ற, **தி3வ்யகந்தை4:**- தேவர்களுக்கு உரியநறுமணங்களால், **வாஸிதாம்**- வாசனையுள்ளதாக, **தநோது**- செய்யட்டும்.

(க-ரை) மனதாகிற பெட்டி, ஆசை, க்லேசங்கள் என்ற கெட்ட வாசனைகள் நிறம்பியதாக இருக்கின்றது. அதை ஸ்ரீபரமேச்வரனுடைய சரணமாகிற தாமரை, அதனுடைய திவ்ய கந்தங்களால் வாசனையுள்ளதாகச் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொள்ளப்படுகிறது.

கயிறுபோல் ஆசை மனிதனை கட்டுகின்றபடியால் "ஆசாபாசம்" என்று குறிப்பிடப்படுகின்றது. "அவித்யா, அஸ்மிதா, ராகம், த்வேஷம், அபிநிவேசம்" என்று ஐந்து க்லேசங்கள். அவற்றுள் அவித்யா என்பது ஆத்மஸ்வரூப அஜ்ஞானம். அஸ்மிதா- தேகத்தில் நான் என்ற அபிமானம். ராகம்- ப்ரியமான விஷயத்தில் ஆசை. த்வேஷம்- அப்ரியமான விஷயத்தில் வெறுப்பு அபிநிவேசம்- பயனற்ற காரியங்களை செய்தே ஆகவேண்டும் என்ற பிடிவாதம். (74)

कल्याणिनं सरसचित्रगतिं सवेगं
सर्वेङ्गितज्ञमनघं ध्रुवलक्षणाढ्यम् ।
चेतस्तुरङ्गमधिरुह्य चर स्मरारे
नेतः समस्तजगतां वृषभाधिरूढ ॥ 75

கல்யாணிநம் ஸரஸசித்ரக3திம் ஸவேக3ம்
ஸர்வேங்கி3தஜ்ஞமநக4ம் த்4ருவலக்ஷணாட்4யம் ।
சேதஸ்துரங் க3மதி4ருஹ்ய சர ஸ்மராரே
நேத: ஸமஸ்தஜகதாம் வ்ருஷப4ாதி4ரூட4 ॥

(ப-ரை) **வ்ருஷபாதி4ரூட4-** விருஷபவாஹனராயும், **ஸமஸ்த ஜகதாம்- நேத:-** எல்லா உலகங்களையும் நடத்துகின்றவராயுமிருக்கின்ற, **ஸ்மராரே-** மன்மதனுக்கு விரோதியான ஏ பரமேச்வர! **கல்யாணிநம்-** நல்ல லக்ஷணங்களுடன், அதாவது யஜமானனுக்கு சுபங்கள் உண்டாகும் என்பதை சூசனம் செய்யும் லக்ஷணங்களுடன் கூடியதும், (நல்ல எண்ணங்களுடன் கூடியதும்) **ஸரஸசித்ரக3திம்-** ஆசையுடன் பலவிதகதிகளில் செல்லக் கூடியதும் (விருப்பத்திற்கேற்றவாறு பல விஷயங்களை நாடிச் செல்லக்கூடியதும்) **ஸவேக3ம்-** மிகவேகமாகச் செல்லுகின்றதும், **ஸர்வேங்கி3தஜ்ஞம்-** அனைவருடைய உள்ளத்தில் இருப்பதை

யும் அறியக்கூடியதும், **அநக4ம்**- குற்றமற்றதும், **த்4ருவல க்ஷணட்4யம்**- ஸ்திரமான நல்ல சுழிகளையுடையதுமான (விஷய ங்களை விட்டு ஈசனிடத்திலேயே நிலைத்திருக்கும் தன்மையைப் பெற்றதும்) **சேதஸ்துரங்க3ம்**- மனதாகிற குதிரையில், **அதி4 ருஹ்ய**, ஏறி, **சர**- பலவிடங்களுக்குச் செல்லுங்கள்.

(க-ரை) ஏ பரமேச்வர! தாங்கள் உலகமெல்லாம் சென்று பல காரியங்களை நேரில் கவனிக்கவேண்டியிருப்பதால் காலை போல் ஏறிச் செல்லுவதை விட வெகு வேகமாகச் செல்லக்கூடிய என் மனதாகிற குதிரையில் ஏறிச் செல்லுவதுதான் சரி. அவ் விதமே செய்யுங்கள். என் மனதிலேயே எப்பொழுதும் வாசஞ் செய்ய வேண்டு மென்று கருத்து, மனதைக் குதிரையாகக் கற் பித்திருக்கின்றபடியால் இங்குள்ள **கல்யாணிநம்** முதலிய விசேஷணங்கள் குதிரை மனது இவ்விரண்டையும் குறிப்பிடு கின்றன. (75)

भक्तिर्महेशपदपुष्करमावसन्ती
काद‍म्बिनीव कुरुते परितोषवर्षम् ।
संपूरितो भवति यस्य मनस्तटाक—
स्तज्जन्मसस्यमखिलं सफलं च नान्यत् ॥ 76

ப4க்திர் மஹேச1 பத3புஷ்கரமாவஸந்தீ
காத3ம்பி3நீவ குருதே பரிதோஷவர்ஷம் ।
ஸம்பூரிதோ ப4வதி யஸ்ய மநஸ்தடாக-
ஸ்தஜ்ஜந்மஸஸ்ய மகி2லம் ஸப2லம் ச நாந்யத் ॥

(ப-ரை) **மஹேசபத3புஷ்கரம்**- ஸ்ரீ பரமேச்வர சரணாவிந் தத்தில், **ஆவஸந்தீ**- நிலைபெற்றிருக்கும், **ப4க்தி:**- பக்தியானது, **காத3ம்பி3னீவ**- மேகங்களின்வரிசைபோல், **பரிதோஷவர்ஷம்** ஆனந்தமாகிற மழையை, **குருதே**- பொழிகின்றது. **யஸ்ய**- எவ னுடைய, **மநஸ்தடாக:**- மனதாகிறகுளம், **ஸம்பூரிதோ ப4வதி** (அந்த ஆனந்தவர்ஷத்தால்) நிறம்பியதாக ஆகின்றதோ, **தஜ்ஜந்ம ஸஸ்யம்**- அவனுடைய பிறவியாகின்ற பயிர், **அகி2லம்**- முழுவ தும், **ஸப2லம்**- பயனுள்ளதாக ஆகின்றது. **அந்யத்ச**- மற்றவர் களுடைய பிறவியோவென்றால், **-ந** பயனற்றதே.

(க-ரை) ஸ்ரீ பரமேச்வர சரணாரவிந்த பஜனத்தால்தான் நித்ய ஆனந்தம் உண்டாகும். ஆதலால் அவற்றில் பக்தியுள்ளவனுடைய பிறவியே பயனுள்ளது. மற்றது வீண் தான். (76)

वुद्धिः स्थिरा भवितुमीश्वरपादपद्म—
सक्ता वधूर्विरहिणीव सदा स्मरन्ती ।
सद्भावनास्मरणदर्शनकीर्तनादि
सम्मोहितेव शिवमन्त्रजपेन विन्ते ॥ (77)

பு3த்3தி4: ஸ்தி2ரா ப4விதுமீச்1வரபாத3பத்3ம-
ஸக்தா வதூ4ர்விரஹிணீவ ஸத3ா ஸ்மரந்தீ ।
ஸத்ப4ாவநாஸ்மரணத3ர்ச1நகீர்த்தநாதி3
ஸம்மோஹிதேவ சி1வமந்த்ரஜபேந விந்தே ॥

(ப-ரை) **விரஹிணீ-** கணவனைவிட்டு பிரிந்திருக்கும், **வதூ4ரிவ-**, மனைவிபோல் **ஈச்வரபாத3பத்3மஸக்தா-** ஸ்ரீபரமேச்வரனுடைய சரணாரவிந்தத்திலேயே ஈடுபட்டவளாயும், (ஆதலாலேயே) **ஸத3ா-** எப்பொழுதும், **ஸ்மரந்தீ-** அதையே தியானம் செய்துகொண்டுமிருக்கின்ற, **பு3த்3தி4:-** எனது புத்தி, **ஸ்தி2ரா ப4விதும்-** ஒரே இடத்தில் நிலை பெற்றிருப்பதற்காக, **ஸத்ப4ாவநாஸ்மரண தர்சநகீர்த்தநாதி3ஸம்மோஹிதேவ-** சரணாரவிந்த தியானம், ஸ்மரணம், தர்சனம், கீர்த்தனம் இவற்றுள் எதைச் செய்வது என்று அறியாதது போல், **சி1வமந்த்ரஜபேந-** "சிவ சிவ" என்ற மந்திர ஜபத்துடன் கூடவே, **விந்தே-** விசாரம் செய்துகொண்டிருக்கிறது.(ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்கிறது)

(க-ரை) கணவனை விட்டுப்பிரிந்த ஒரு ஸ்திரீ, எப்பொழுதும் அவனையே ஸ்மரித்துக்கொண்டு மறுபடியும் அவனை அடைந்து அவனை விட்டுப்பிரியாமல் வாழவேண்டுமென்பதற்காக ஏதாவது சில மந்திரங்களையும் ஜபித்துக்கொண்டு பற்பல உபாயங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பாள். அதுபோல் என்னுடைய புத்தியும், பரமேச்வர சரணங்களிலேயே நிலைபெற்றிருப்பதற்காக, சரணத்யானம், ஸ்மரணம் தர்சனம், கீர்த்தனம் முதலியவற்றுள் எதைச்செய்யலாம் என்று அறியாததுபோல், சிவமந்திர ஜபத்துடன் ஆராய்ச்சி செய்துகொண்டே இருக்கிறது

இவ்விதம் ஒன்றும் புரியாமல் பலவாருக விசாரம் செய்து கொண்டிருக்கும் புத்திக்கு நல்ல உபதேசங்களைச் செய்து அதை அக்கவலையிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று அடுத்த சுலோகத்தில் வேண்டிக்கொள்ளுகிருர். (77)

सदुपचारविधिष्वनुबोधितां
सविनयां सुहृदं समुपाश्रिताम्।
मम समुद्धर बुद्धिमिमां प्रभो
वरगुणेन नवोढवधूमिव ॥ (78)

ஸது3பசாரவிதி4ஷ்வநுபோதி4தாம்
ஸவிநயாம் ஸுஹ்ருத3ம் ஸமுபாச்ரிதாம் ।
மம ஸமுத்3த4ர புத்3தி4மிமாம் ப்ரபே4ா
வரகு3ணேந நவோட4 வதூ4மிவ ॥

(ப-ரை) **ப்ரபே4ா-** எல்லா காரியங்களையும் நிறைவேற்றும் திறமையுடைய ஏ பரமேச்வர! **ஸது3பசாரவிதி4ஷு-** ஸாதுக்களை உபசரிக்கும் விஷயங்களில், **அநுபே3ாதி4தாம்-** முறைப்படி கற்பிக்கப்பட்டதாயும், **ஸவிநயாம்-** வினயத்துடன் கூடியதும், **ஸுஹ்ருத3ம்-** நல்லமனதையுடைய ஓர் நண்பனை, **ஸமுபாச்1ரிதாம்-** அண்டியதாயுமிருக்கின்ற, **மம-** என்னுடைய, **இமாம் பு3த்3தி4ம்-** பலவிதமாக ஆலோசித்துக் கொண்டிருக்கும் இந்த புத்தியை, **நவோட4வதூ4மிவ-** புதிதாக மணந்து கொள்ளப்பட்ட பெண்ணைப்போல், **வரகு3ணேந-** சிறந்த குணங்களை உபதேசிப்பதால், **ஸமுத்3த4ர-** பலவித சந்தேஹங்களிலிருந்து விடுவியுங்கள்.

(க-ரை) உலகில் ஒருவன் புதிதாக மணந்து கொள்ளப்பட்ட பெண்ணுக்கு எவ்விதம் பல நல்ல உபதேசங்களைச் செய்து, அவள் மனதிலுள்ள பல சந்தேஹங்களை நீக்கி தன்னை நேசிக்கும்படி செய்வானே, அவ்விதமே ஏபரமேச்வர! என்மனதில் உள்ள பல சந்தேஹங்களை நீக்கி அதைத் தங்களிடமே நிலை பெற்றிருக்கும்படி செய்யவேண்டும். (78)

नित्यं योगिमनस्सरोजदलसञ्चारक्षमस्त्वत्क्रमः
शंभो तेन कथं कठोरयमराड्वक्षःकवाटक्षतिः ।
अत्यन्तं मृदुलं त्वदङ्घ्रियुगलं हा मे मनश्चिन्तय—
त्येतल्लोचनगोचरं कुरु विभो हस्तेन संवाहये ॥ 79

நித்யம் யோகி3மநஸ்ஸரோஜத3லஸஞ்சார க்ஷமஸ்த்வத்க்ரம:
சம்பே4ா தேந கத2ம் கடோ2ர யமராட்வக்ஷ:கவாட க்ஷதி:।
அத்யந்தம் ம்ருது3லம் த்வத3ங்க்4ரியுக3லம் ஹாமே மந: சிந்தய
த்யேதல்லோசநகோசரம் குருவிபே4ா ஹஸ்தேந ஸம்வாஹயே॥

(ப-ரை) **ச1ம்பே4ா-** ஏ பரமேச்வர! **த்வத்க்ரம:-** தங்களுடைய சரணம், **யோகி3மநஸ்ஸரோஜத3ளஸஞ்சாரக்ஷம:-** யோகிகளுடைய மனதாகிற தாமரை தளத்தில் நடப்பதற்கு தகுதியுள்ளது. **தேந-** அத்தகைய மிருதுவான சரணத்தால், **கடோ2ரயமராட்வக்ஷ: கவாடக்ஷதி:-** யமனுடைய மிகக்கடினமான கதவுபோன்ற மார்பை பிளத்தல் என்பது, **கத2ம்-** எப்படி சாத்தியமாயிற்று? **ஹா-** என்ன ஆச்சர்யம்? **இதி-** என்று, **மேமந:-** என்னுடைய மனது, **சிந்தயதி-** ஆலோசிக்கின்றது. **விபே4ா-** ஏ பரமேச்வர! **அத்யந்தம் ம்ருது3லம்-** மிகவும் மிருதுவான, **த்வத3ங்க்4ரியுக3லம்-** தங்களுடைய இரு சரணங்களையும், **லோசநகே3ாசரம்-** என் கண்ணுக்கு புலப்படும்படி- **குரு-** செய்யுங்கள். **ஏதத்-** இவ்விரு சரணங்களையும், **ஹஸ்தேந,** என்கையினால், **ஸம்வாஹயே-** பிடிக்கிறேன். (79)

एष्यत्येष जनिं मनोऽस्य कठिनं तस्मिन्नटानीति म—
द्रक्षायै गिरिसीम्नि कोमलपदन्यासः पुराभ्यासितः ।
नोचेद्दिव्यगृहान्तरेषु सुमनस्तल्पेषु वेद्यादिषु
प्रायः सत्सु शिलातलेषु नटनं शम्भो किमर्थं तव ॥ 80

ஏஷ்யத்யேஷ ஜநிம் மநோ'ஸ்ய கடி2நம் தஸ்மிந்நடாநீதி ம-
த்3ரக்ஷாயை கி3ரிஸீம்நி கோமல பத3ந்யாஸ: புராப்4யாஸித:।
நோசேத்தி3வ்யக்3ருஹாந்தரேஷு ஸுமநஸ்தல்பேஷு வேத்3யாதி3ஷு
ப்ராய:ஸத்ஸு சி1லாதலேஷு நடநம் ச1ம்பே4ா கிமர்த்த2ம் தவ॥

(ப-ரை) **சம்பே4ா**- ஏ பரமேச்வர! "**ஏஷ:**- இந்த மனிதன், **ஜநிம் ஏஷ்யதி**- பிறக்கப்போகின்ருன். **அஸ்ய**- இவனுடைய, **மந:**- மனது, **கடி2நம்**- மிகக்கடினமானது. **தஸ்மிந்**- அதில் **அடாநி**- நான் சஞ்சரிக்க வேண்டும்.' **இதி**- என்று, **மத்3ரக்ஷா யை**- என்னை இரக்ஷிப்பதின் பொருட்டே **கி3ரிஸீம்நி**- மலைப்பிர தேசத்தில், **கோமலபத3ந்யாஸ:**- மிருதுவானசரணத்தைவைத்து நடத்தல் என்பது, **புரா**- நான் பிறப்பதற்கு முன்பே, **அப்4யா ஸித:**- (தங்களால்) பழக்கப்பட்டது. **நோசேத்**- அப்படி இல்லா விடில், **தி3வ்யக்3ருஹாந்தரேஷு**- மிக உயர்ந்த வீடுகளின் உள் அறைகளும், **ஸுமநஸ்தல்பேஷு**- புஷ்பங்கள் நிறப்பிய படுக்கைகளும் அல்லது புஷ்பம்போல் மிருதுவானபடுக்கைகளும், **வேத்3யாதி3ஷு**- நன்ருக அலங்கரிக்கப்பட்ட மண்டபங்கள் முதலியவைகளும், **ஸத்ஸு**- இருக்குங்கால், **சிலாதலேஷு**- கற் பாறைகளின்மேல், **தவ**- தங்களுடைய, **நடனம்**- நாட்டியமானது **கிமர்த2ம்**- எதற்காக?

(க-ரை) ஏ பரமேச்வர? மிருதுவானஸ்தலங்கள் பல இருப் பினும் மிகக்கடினமான என்மனதில் சஞ்சரிக்க வேண்டுமென் பதற்காகவே தாங்கள் முன்பே கற்பாறைகளில் நர்த்தனம் செய்து பழகி இருக்கிறீர்கள். ஆதலால் அவசியம் இப்பொழுது என்மனதிலேயே குடிகொள்ள வேண்டும். (80)

कंचित्कालमुमामहेश भवतः पादारविन्दार्चनैः
कंचिद्ध्यानसमाधिभिश्च नतिभिः कंचित्कथाकर्णनैः ।
कंचित् कंचिदवेक्षणैश्च नुतिभिः कंचिद्दशामीदृशीं
यः प्राप्नोति मुदा त्वदर्पितमना जीवन्स मुक्तः खलु ॥ 81

கஞ்சித்காலமுமாமஹேச ப4வத: பாத3ாரவிந்த3ார்ச்சனை:
கஞ்சித்3த்4யானஸமாதி4பி4:ச நதிபி4: கஞ்சித்கத2ாகர்ணனை:1
கஞ்சித் கஞ்சிதவேக்ஷணை:ச நுதிபி4: கஞ்சித்த3சாமீத்3ருசீம்
ய: ப்ராப்நோதி முத3ா த்வத3ர்பிதமநா ஜீவந் ஸ முக்த: க2லு ॥

(ப-ரை) **உமாமஹேச**- ஸ்ரீபார்வதியுடன் கூடிய ஏ பரமேச் வர! **முத3ா**- சந்தோஷத்துடன், **ய:**- எவன், **த்வத3ர்பிதமநா:**- தங்களிடம் அர்ப்பணம் செய்யப்பட்ட மனதை உடையவனாக

இருந்து கொண்டு, **கஞ்சித்காலம்**- சிலகாலம், **ப4வத:**- தங்களுடைய, **பாத3ாரவிந்த3ார்ச்சனை:**- சரணாரவிந்த பூஜைகளுடனும், **கஞ்சித்**- கொஞ்சகாலம், **த்4யானஸமாதி4பி:ச**- (தங்களுடைய) தியானம் ஸமாதி இவைகளுடனும், **கஞ்சித்**- சிலநேரம், **நதிபி4:** தங்களை வணங்குதலுடனும், **கஞ்சித்**- கொஞ்சநேரம், **கத2ாகர்ணனை:**- தங்கள் கதையைக் கேட்பதுடனும், **கஞ்சித்கஞ்சித்**- சிற்சிலநேரம், **அவேக்ஷணை:ச**- தங்களுடைய திவ்ய விக்ரஹத்தை தரிசனம் செய்தலுடனும், **கஞ்சித்**- சிலகாலம், **நுதிபி4:**- தங்களை துதித்தலுடனும் கூடியவனாக, **ஈத்3ருசீ1ம்.த3சா1ம்**- மேற்படி உயர்ந்த நிலையை, **ப்ராப்நோதி**- அடைகின்றானோ, **ஸ:**- அவன், **ஜீவந்**- உயிருடன் இருக்கும்பொழுதே, **முக்த:க2லு**- முக்தனாகவே ஆகிவிடுகிறான். (81)

बाणत्वं वृषभत्वमर्धवपुषा भार्यात्वमार्यापते
घोणित्वं सखिता मृदङ्गवहता चेत्यादिरूपं दधौ ।
त्वत्पादे नयनार्पणं च कृतवांस्त्वद्देहभागो हरिः
पूज्यात्पूज्यतरः स एव हि नचेत्को वा तदन्योऽधिकः ॥ 82

ப3ாணத்வம் வ்ருஷப4த்வமர்த்த4வபுஷா ப4ார்யாத்வமார்யாபதே
கே4ாணித்வம் ஸகி2தா ம்ருத3ங்க3வஹதா சேத்யாதி3ரூபம் [த3தௌ4
த்வத்பாதே3 நயநார்ப்பணம் ச க்ருதவாம்ஸ்த்வத்3தே3ஹப4ா [கே3ா ஹரி:
பூஜ்யாத்பூஜ்யதர: ஸ ஏவஹி நசேத் கோ வா தத3ந்யோதி4க:॥

(ப-ரை) **ஆர்யாபதே**- ஏ பார்வதிபதே! **ஹரி:**- விஷ்ணு, (திருபுரஸம்ஹாரகாலத்தில்) **ப3ாணத்வம்**- (தங்களுக்கு) அம்பாக இருக்குந்தன்மை, **வ்ருஷப4த்வம்**- வாஹனமான விருஷபமாக இருக்கும் தன்மை, **அர்த்த4வபுஷா**- பாதிஉடலால், **ப4ார்யாத்வம்**- மனைவியாக இருக்குந்தன்மை, **கே4ாணித்வம்**- (தங்களுடைய சரணதரிசனத்திற்காக) வராஹமாக இருக்குந்தன்மை, **ஸகி2தா**- (மோஹினி அவதாரகாலத்தில்) தோழியாக இருக்குந் தன்மை, **ம்ருத3ங்கவஹதாச**- (தாங்கள் ஆனந்த தாண்டவமாடுங் காலத்தில்) ம்ருதங்க வாத்யத்தை வாசிக்குந்தன்மை, **இத்யாதி3ரூபம்**- இம்மாதிரி உருவங்களையெல்லாம் **த3தௌ4**- தரித்தார். **ச**-

மேலும், **த்வத்பாதே3-** தங்களுடையசரணத்தில், **நயநார்ப்பணம்-** நேத்ரஸமர்ப்பணத்தையும், **க்ருதவாந்-** செய்தார். **த்வத்தே3ஹபா4க3:-** தங்கள் உடலில் ஒரு பகுதியாகவும் (சங்கர நாராயணனாக இருக்கும் அவசரத்தில்) இருந்தார். **ஹி-** இத்தகைய காரணங்களால், **ஸஏவ-** அந்த விஷ்ணுவே, **பூஜ்யாத்-** பூஜிக்கத்தகுந்த பிருஹ்மா முதலிய தேவஸமுதாயத்தைக் காட்டிலும், **பூஜ்யதர:** மிகவும் பூஜிக்கத்தகுந்தவர். **நோசேத்-** இல்லாவிடில் **ததந்ய:** விஷ்ணுவைக்காட்டிலும் வேறான, **கோவா-** யார்தான், **அதி4க:-** சிறந்தவர்?

(க-ரை) மற்ற தேவதைகளைக் காட்டிலும் ஸ்ரீ மஹாவிஷ்ணு சிறந்தவர் என்பதற்கு பலகாரணங்களை இங்கு கவி விவரிக்கின்றார். ஸ்ரீ விஷ்ணு, திருபுரஸம்ஹார காலத்தில் பரமேச்வரனுக்கு பாணமாக இருந்தார். பார்வதியும் விஷ்ணுவும் ஒரே அம்சமாகையால் அவரே சிவனுக்கு பார்யையாக இருந்தார் என்று இங்கு கூறப்படுகிறது. சிவபாத தரிசனத்திற்காக வராஹ ரூபத்தைப் பெற்றார். மோஹினீ அவதார காலத்தில் சிவனுக்குத் தோழியாக இருந்தார். சிவன் தாண்டவமாடுங்காலத்தில் அவருக்குமிருதங்கம் வாசித்தார். மேலும், ஒரு சமயம் மஹாவிஷ்ணு ஆயிரம் தாமரை புஷ்பங்களால் சிவனுக்கு அர்ச்சனை செய்யத்தொடங்கினார். அப்பொழுது ஒருபுஷ்பம் குறைவாக இருந்தது. உடனே அவருடைய நேத்திரத்தை ஸ்ரீபரமேச்வர சரணத்தில் அர்ப்பணம் செய்து ஆயிராவது எண்ணிக்கையை பூர்த்திசெய்தார். மேலும் சங்கர நாராயண மூர்த்தியில் ஸ்ரீபரமேச்வரனுடைய உடலில் ஒரு பகுதியையும் பெற்றார். இவ்வளவு பெருமைகளும் மற்ற எந்ததேவதைகளுக்கு மில்லாததால் மற்ற தேவசமுதாயத்தைவிட ஸ்ரீவிஷ்ணுவே சிறந்தவர். அவராலும் ஸ்ரீ பரமேச்வரன் பூஜிக்கப்பட்டபடியால் அவரை விடவும் ஸ்ரீ பரமேச்வரன் சிறந்தவர் என்று ஏற்படுகிறது.

ஆக இந்த சுலோகத்தால் பிருஹ்மா முதலிய தேவர்கள் பூஜிக்கத் தகுந்தவர்கள். விஷ்ணு அவர்களைவிட பூஜிக்கத்தகுந்தவர். பரமேச்வரன் எல்லோரையும்விட பூஜிக்கத் தகுந்தவர் என்று நிரூபிக்கப்படுகிறது. (82)

जननमृतियुतानां सेवया देवतानां
न भवति सुखलेशः संशयो नास्ति तत्र ।
अजनिममृतरूपं साम्बमीशं भजन्ते
य इह परमसौख्यं ते हि धन्या लभन्ते ॥ 83

ஜநநம்ருதியுதாநாம் ஸேவயா தே3வதாநாம்
ந ப4வதி ஸுக2லேச1: ஸம்ச1யோ நாஸ்தி தத்ர ।
அஜநிமம்ருதரூபம் ஸாம்ப3மீச1ம் ப4ஜந்தே
ய இஹ பரமஸௌக்2யம் தே ஹி த4ந்யா லப4ந்தே ॥

(ப-ரை) **ஜநநம்ருதியுதாநாம்**- ஜனனம் மரணம் இவற்றுடன் கூடிய, **தே3வதாநாம்**- தேவதைகளுடைய, **ஸேவயா**- சேவையினல், **ஸுக2லேச1:**- ஸ்வல்பசுகங்கூட, **நப4வதி**- உண்டாகிறதில்லை. **தத்ர**- அவ்விஷயத்தில், **ஸம்ச1ய:** **நாஸ்தி**- சந்தேகமே இல்லை. **அஜநிம்**- பிறப்பற்றவரும், **அம்ருதம்**- மரணமற்ற ஸ்வரூபத்தை யுடையவரும், **ஸாம்ப3ம்**- அம்பிகையுடன் கூடியவருமான, **ஈச1ம்**- பரமேச்வரனை, **யே**- எவர், **இஹ**- இப்பிறவியிலேயே, **ப4ஜந்தே**- சேவிக்கின்றனரோ, **தே**- அவர்கள், **த4ந்யா:** செய்ய வேண்டியவற்றை யெல்லாம் செய்தவர்களாக இருந்து கொண்டு, **பரமஸௌக்2யம்**- மிகச்சிறந்தஸௌக்யத்தை அதாவது மோக்ஷ சுகத்தை, **லப4ந்தே**- அடைகின்றனர்.

(க-ரை) மற்ற தேவதைகளையெல்லாம்விட மிகச்சிறந்த ஸ்ரீ பரமேச்வரனுடைய சேவையினல்தான் மோக்ஷ சுகத்தைப் பெற முடியும் என்பதாம். (83)

शिव तव परिचर्यासन्निधानाय गौर्या
भव मम गुणधुर्यां बुद्धिकन्यां प्रदास्ये ।
सकलभुवनबन्धो सच्चिदानन्दसिन्धो
सदय हृदयगेहे सर्वदा संवस त्वम् ॥ 84

சி1வ தவ பரிசர்யாஸந்நித4ாநாய கௌ3ர்யா
ப4வ மம கு3ணது4ர்யாம் பு3த்3தி4கந்யாம் ப்ரதா3ஸ்யே ।
ஸகலபு4வநப3ந்தே4ா ஸச்சித3ாநந்த3ஸிந்தே4ா
ஸத3ய ஹ்ருத3யகே3ஹே ஸர்வதா3 ஸம்வஸ த்வம் ॥

(ப-ரை) சி1வ! மங்களஸ்வரூபியே! ப4வ!- ஸகல உலகங்களின் உற்பத்திக்கும் காரணமாக இருப்பவரே? ஸகலபு3வநப3ந்தே4ா!- எல்லா உலகத்தில் உள்ளவர்களுக்கும் பந்துவாக இருப்பவரே! ஸச்சித3ாநந்த3ஸிந்தே4ா- எங்கும் எப்பொழுதும் இருக்கின்ற, அறிவுவடிவமான ஆனந்தக்கடலே,! ஸத3ய- தயையுடன் கூடியவரே! கு3ணது4ர்யாம்- பெண்களிடம் இருக்க வேண்டிய எல்லா குணங்களும் நிறம்பிய, மம- என்னுடைய, பு3த்3தி4கந்யாம்- புத்தியாகிற கன்னியை, கௌ3ர்யா- பார்வதியுடன் கூட, தவ- தங்களுக்கு, பரிசர்யாஸந்நித4ாநாய- பணிவிடை செய்வதின் பொருட்டு சமீபத்தில் இருப்பதற்காக, ப்ரத3ாஸ்யே- கன்னிகாதானம் செய்கிறேன். த்வம்- தாங்கள், ஹ்ருத3யகேஹே- ஹ்ருதயமாகிறகிருஹத்தில், ஸர்வத3ா- எப்பொழுதும் ஸம்வஸ- சுகமாக வாசஞ் செய்யுங்கள்.

(க-ரை) இங்கு ஸ்ரீ பரமேச்வரனை மணமகனுகவும், புத்தியை மணமகளாகவும் கற்பித்து, இந்தமணமகளை தங்களுக்கு கன்னிகதானம்செய்துகொடுக்கின்றேன். அவளுடனும் பார்வதியுடனும் என்ஹ்ருதயமாகிற கிரஹத்தில் சுகமாக வாசஞ் செய்யுங்கள் என்று கவி வேண்டிக் கொள்ளுகின்றுர். அதாவது ஹ்ருதய குஹையில் வசிக்கும் ஸ்ரீ பார்வதீ பர்மேச்வரர்களிடம் நமது புத்தி இடைவிடாமல் ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பது கருத்து. இங்கு பரமேச்வரனைக் குறிக்கும் சொற்கள் எல்லாப், பரமேச்வரனிடம் ஸமஸ்த வரகுணங்களும் நிறம்பியிருக்கின்றன என்பதை குறிப்பிடுகின்றன. (84)

जलधिमथनदक्षो नैव पातालभेदी
न च वनमृगयायां नैव लुब्धः प्रवीणः ।
अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां
कथय कथमहं ते कल्पयानीन्दुमौले ॥ 85

ஜலதி4மத2நத3க்ஷோ நைவ பாதாளபே4தீ3
நச வநம்ருக3யாயாம் நைவ லுப்3த4: ப்ரவீண: ।
அச1நகுஸுமபூ4ஷாவஸ்த்ரமுக்2யாம் ஸபர்யாம்
கத2ய கத2மஹம் தே கல்பயாநீந்து3மௌளே ॥

(ப-ரை) இந்து3மௌளே?- சந்திரனை சிரஸில் அணிந்து கொண்டிருக்கும் ஏ பரமேச்வர! அச1நகுஸுமபூ4ஷாவஸ்த்ரமுக்2யாம்- நிவேதனத்திற்குரிய பொருள், புஷ்பம், அலங்காரம், வஸ்திரம் இவற்றை முக்கியமாகக்கொண்ட, ஸபர்யாம்- பூஜையை, தே- தங்களுக்கு, கத2ம் கல்பயாநி- எப்படிச் செய்வேன்? கத2ய- சொல்லுங்கள். (ஏனென்றால்) அஹம்- நான், ஜலதி4மத2நத3க்ஷ:- சமுத்திரத்தைக் கடைவதில் திறமையுள்ளவனாக, நைவ இல்லை, பாதாளபே4தீ3ச-பூமியில் உள்ளபொந்துகளை, பிளக்கக்கூடியவனாகவும், ந- இல்லை. வநம்ருக3யாயாம்-ப்ரவீண:- காட்டில் வேட்டையாடுவதில் ப்ரவீண:- தேர்ச்சி பெற்ற, லுப்3த4:- வேடனாகவும், நைவ- இல்லவே இல்லை.

(க-ரை) தேவர்களுக்குச்செய்யப்படும் பூஜையில், நிவேதனம் அலங்காரம், புஷ்பம், வஸ்திரம், இவை மிகவும் முக்கியமானவை. ஸ்ரீ பரமேச்வரனுக்கு ஆஹாரமாகிய விஷத்தையும், புஷ்பமாகிய சந்திரனையும் நான் அளிக்கவேண்டுமானால் பாற்கடலைக்கடையும் திறமையுள்ளவனாக இருக்கவேண்டும். அத்திறமையோ என்னிடமில்லை. அவருடைய ஆடையோ யானைத்தோல். அதைசம்பாதிக்கவேண்டுமானால் நான் ஓர் சிறந்த வேடனாகஇருக்கவேண்டும். அப்படியுமில்லை. மேலும்அவருடைய ஆபரணங்கள் சர்ப்பங்கள். அவை பொந்துகளிலேயே அதிகம். அவற்றை பிளக்கும் திறமையும் எனக்கில்லை. ஆதலால் நான் எப்படி தங்களுக்குதிருப்திகரமான பூஜையைச்செய்யமுடியும்.85

पूजाद्रव्यसमृद्धयो विरचिताः पूजां कथं कुर्महे
पक्षित्व न च वा किटित्वमपि न प्राप्तं मया दुर्लभम् ।
जाने मस्तकमङ्घ्रिपल्लवमुमाजाने न तेऽहं विभो
न ज्ञातं हि पितामहेन हरिणा तत्त्वेन तद्रूपिणा ॥ 86

பூஜாத்3ரவ்யஸம்ருத்3த4யோ விரசிதா: பூஜாம் கத2ம் குர்மஹே
பக்ஷித்வம் நச வா கிடித்வமபி ந:ப்ராப்தம் மயா து3ர்லப4ம் ।
ஜாநே மஸ்தகமங்க்4ரிபல்லவ முமாஜாநே நதேஹம் விபே4ா
நஜ்ஞாதம் ஹி பிதாமஹேந ஹரிணா தத்வேந தத்3ரூபிணா ॥

(ப-ரை) உமாஜாநே- ஏ பார்வதிபதே, பூஜாத்3ரவ்யஸம்ரு த்3த4ய:- பூஜைக்குரிய வஸ்துக்களின் குவியல்கள், விரசிதா:- தேடிவைக்கப்பட்டிருக்கின்றன. (அப்படி யிருந்தும்) பூஜாம்:- (தங்களுக்கு) பூஜையை, கத2ம்- எப்படி, குர்மஹே- செய்வோம். (ஏனென்றால்) து3ர்லப4ம்- அடைதற்கரிய, பக்ஷித்வம்- பறவைத் தன்மை மயா- என்னால், நசப்ராப்தம்:- அடையப்படவில்லை. கிடித்வமபி- பன்றியாக இருக்குந்தன்மையும் நவா- (ப்ராப்தம்) அடையப்படவில்லை. (ஆதலால்) விபே4ா- எங்கும் வியாபித்திருக்கும் ஏ பரமேச்வர! தே- தங்களுடைய, மஸ்தகம்- சிரஸையும், அங்க்4ரிபல்லவம்- துளிர்போன்ற சரணத்தையும், நஜாநே- நான் அறியவில்லை. தத்3ரூபிணா- (முறையே) பன்றி, ஹம்ஸம் இந்த உருவங்களை எடுத்துக்கொண்ட, ஹரிணா- விஷ்ணுவினாலும், பிதாமஹேந- பிருஹ்மாவினாலும் தத்வேந- உள்ளபடி, நஞாதம்ஹி- (தங்களுடைய சரணமும் சிரஸும்) அறியப்படவில்லை அல்லவா?

(க-ரை) ஏ பரமேச்வர! பூஜையென்பது சிரஸிலும் பாதத்திலும் செய்யப்படவேண்டும். எங்கும் நிறைந்த தங்களுடைய சிரஸ்ஸையும் பாதத்தையும் அறியவேண்டுமென்பதற்காகவே விஷ்ணு, பன்றி உருவத்தையும், பிருஹ்மா ஹம்ஸத்தின் உருவத்தையும் பெற்றார்கள். அவர்களாலேயே அவை அறியமுடியவில்லையென்றால் அவ்விதஉருவங்களை யெல்லாம் எடுத்துக்கொள்ளாத என்னால் எப்படி அவை அறியக்கூடும். அவற்றை அறியாமல் நான் எப்படி பூஜைசெய்ய முடியும்? (86)

अशनं गरलं फणी कलापो
वसनं चर्म च वाहनं महोक्षः ।
मम दास्यसि किं किमस्ति शम्भो
तव पादाम्बुजभक्तिमेव देहि ॥ 87

அச1நம் க3ரலம் ப2ணீ கலாபோ
வஸநம் சர்ம ச வாஹநம் மஹோக்ஷ: ।
மம த3ாஸ்யஸி கிம்கிமஸ்தி ச1ம்பே4ா
தவ பாத3ாம்பு4ஜப4க்திமேவ தே3ஹி ॥

(ப-ரை) **ச1ம்பே4ா**- ஏ பரமேச்வர! **அச1நம்** (தங்களுக்கு) ஆஹாரமாக இருப்பது, **க3ரலம்**- விஷம். **கலாப:**- நகையாக இருப்பதோ, **ப2ணீ**- சர்ப்பம், **வஸநம்**- வஸ்திரமோ, **சர்ம**- தோல், **வாஹநம்**- வாஹனமோ, **மஹோக்ஷ:**- கிழட்டுக்காளை, (இவற்றுள் பக்தர்களால் விரும்பத்தகுந்தது) **கிம் அஸ்தி**- என்ன இருக்கிறது. **மம**- எனக்கு, **கிம்**- எதை, **த3ாஸ்யஸி**- கொடுக்கப்போகிறீர்கள். **தவ**- தங்களுடைய, **பாத3ாம்பு3ஜப4க்திம் ஏவ**- சரணாரவிந்தங்களில் பக்தியையே, **தே3ஹி**- அளியுங்கள்.

(க-ரை) ஏ பரமேச்வர! என்னால் விரும்பக் கூடிய பொருள் தங்களிடம் ஒன்றுமே இல்லை. ஆஹாரமோ விஷம். ஆபரணமோ பாம்பு. ஆடையோ, தோல். வாஹனமோ காளை. இவற்றுள் பக்தர்கள் விரும்பக் கூடியது என்ன இருக்கிறது? ஆதலால் என்னால் விரும்பப்படும் தங்கள் சரணாரவிந்த பக்தி ஒன்றை மட்டும் அவசியம் கொடுத்தருள வேண்டும்.

இந்த சுலோகத்தில் வெளிப்படையாக பரமேச்வரனை நிந்திப்பதுபோல் தோன்றினாலும், அவரை பலவாறாகப் புகழ்வதிலேயே தாத்பர்யம். விஷத்தை உட்கொண்டாவது பக்தர்களை பாதுகாக்கும் கருணைக்கடல்என்றும், ஸர்ப்பங்களை ஆபரணமாக அணிந்து அனைவருக்கும் அபயத்தை அளித்தவர் என்றும், ஸர்வேச்வரராக இருந்தும் தோலை அணிந்து கொள்வதால் எதிலும் பற்று அற்றவர் என்றும், போற்றி, அப்படிப்பட்டவரிடம் "இதைக்கொடு அதைக்கொடு" என்று நாம் வேண்டிக்கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது? அவருடைய சரணாரவிந்த பக்தி இருந்துவிட்டால் மற்றவை எல்லாம் தானேசித்தித்துவிடும் என்ற அபிப்ராயத்துடன் கவி அதை மட்டும் வேண்டிக்கொள்ளுகிறார்.

(87)

यदा कृताम्भोनिधिसेतुबन्धनः
करस्थलाधःकृतपर्वताधिपः ।
भवानि ते लङ्घितपद्मसंभव—
स्तदा शिवार्चास्तवभावनाक्षमः ॥ 88

யத3ா க்ருதாம்பே4ாநிதி4ஸேதுப3ந்த4ந:
கரஸ்த2லாத4:க்ருத பர்வதாதி4ப: ।
ப4வாநி தே லங்கி4தபத்3மஸம்ப4வ-
ஸ்தத3ா சிவார்சாஸ்தவப4ாவநாக்ஷம: ॥

(ப-ரை) **சி1வ-** ஏ பரமேச்வர! **யத3ா-** எப்பொழுது, **க்ருதாம்பே4ாநிதி4ஸேதுப3ந்த4ந:-** சமுத்திரத்தில் ஸேது பந்தனம் செய்தவனுகவும், (இராமராகவும்) **கரஸ்த2லாத4:க்ருதபர்வதாதி4ப:** கையால் விந்தியமலையை தரையோடு தரையாகச்செய்தவராகவும் (அகஸ்தியராகவும்) **லங்கி4த பத்3மஸம்ப4வ:-** பிரும்மாவை அதிக்கிரமித்தவராகவும் (விஷ்ணுவாகவும்) (ஆவேனே) **தத3ா-** அப்பொழுதே, **தே-** தங்களுடைய, **அர்சாஸ்தவப4ாவநாக்ஷம:-** அர்ச்சனே, ஸ்தோத்ரம், த்யானம் இவற்றில் தகுதியுள்ளவனுக, **ப4வாநி- ஆவேன்.**

(க-ரை) ஸ்ரீபரமேச்வரனுடைய அர்ச்சனேயில் இராமரும், ஸ்தோத்திரத்தில் அகஸ்தியரும், தியானத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவும் பிரசித்தி பெற்றவர்கள். அவர்களைப்போல் நானும் இருந்தால் அர்ச்சனே, ஸ்தோத்ரம், தியானம் இவற்றை முறைப்படி செய்யக்கூடும். (88)

नतिभिर्नुतिभिस्त्वमीशपूजा—
विधिभिर्ध्यानसमाधिभिर्न तुष्टः ।
धनुषा मुसलेन चाश्मभिर्वा
वद ते प्रीतिकरं तथा करोमि ॥ 89

நதிபி4ர் நுதிபி4 ஸ்த்வமீச1 பூஜா-
விதி4பி4ர்த்4யாநஸமாதி4பி4ர் ந துஷ்ட: ।
த4நுஷா முஸலேந சாச்1மபி4ர் வா
வத3 தே ப்ரீதிகரம் தத2ா கரோமி ॥

(ப-ரை) **ஈச1** ஏபரமேச்வர! **த4நுஷா-** வில்லாலும், **முஸலேந-** உலக்கையாலும், **அச்1மபி4:-** கற்களாலும் அடிப்பதால் திருப்தியடைவதுபோல், **நதிபி4:-**நமஸ்காரங்களாலும், **நுதிபி4:-** துதிகளாலும், **பூஜாவிதி4பி4:-** பூஜாவிதிகளாலும், **த்யான**

ஸமாதி4பி4:- தியானம் ஸமாதி இவற்ருலும், **த்வம்**- தாங்கள், **நதுஷ்ட:**- திருப்தியடையவில்லை. இவ்விருவகைக்குள், **தே**- தங்களுக்கு, **ப்ரீதிகரம்**- ப்ரீதியளிக்கக்கூடியது(எது?என்பதை)**வத3**- சொல்லுங்கள். **தத2ா**-அப்படியே, **கரோமி**- செய்கின்றேன். 89

वचसा चरितं वदामि शम्भो—
रहमुद्योगविधासु तेऽप्रसक्तः ।
मनसा कृतिमीश्वरस्य सेवे
शिरसा चैव सदाशिवं नमामि ॥ 90

வசஸா சரிதம் வத3ாமி ச1ம்பே4ா
ரஹமுத்3யோக3 வித4ாஸு தேஅப்ரஸக்த: ।
மநஸா க்ருதிமீச்1வரஸ்ய ஸேவே
சி1ரஸா சைவ ஸத3ாசி1வம் நமாமி ॥

(ப-ரை) **அஹம்**- நான், **உத்3யோக3வித4ாஸு**- உயர்ந்த யோகாநுஷ்டான முறைகளில், **அப்ரஸக்த:**- பயிற்சியற்றவனுக இருக்கின்றேன். (ஆதலால்) **ச1ம்பே4ா:தே**- ஸுகங்களுக்கெல்லாம் இருப்பிடமான தங்களுடைய, **சரிதம்**- சரித்திரத்தை, **வத3ாமி**- சொல்லுகிறேன். **ஈச்வரஸ்ய**- ஈச்வரனுடைய, **ஆக்ருதிம்**- உருவத்தை, **மநஸா**- மனதால், **ஸேவே**- சேவிக்கின்றேன் (தியானம் பண்ணுகிறேன்) **சிரஸாச**- சிரஸினலும், **ஸதாசிவம் ஏவ**- ஸதா சிவனேயே, **நமாமி**- வணங்குகிறேன்.

(க-ரை) மனம், வாக்கு, காயம்என்ற மூன்று காரணங்களாலும் ஸ்ரீபரமேச்வரனேயேபோற்றுகின்றேன், எனக்கூறுகின்ருர்.

आद्याविद्या हृद्गता निर्गतासी-
द्विद्या हृद्या हृद्गता त्वत्प्रसादात् ।
सेवे नित्यं श्रीकरं त्वत्पदाब्जं
भावे मुक्तेर्भाजनं राजमौले ॥ 91

ஆத்3யா வித்3யா ஹ்ருத்க3தா நிர்க3தாஸீ-
த்வித்3யா ஹ்ருத்3யா ஹ்ருத்கதா த்வதபரஸாத3ாத் ।
ஸேவே நித்யம் ஸ்ரீகரம் த்வத்பத3ாப்3ஜம்
ப4ாவே முக்தேர் ப4ாஜநம் ராஜமௌலே ॥

(ப-ரை) **ராஜமௌலே**- ஏ சந்திரசேகர! **த்வத்ப்ரஸாத3ாத்**- தங்களுடைய அநுக்கிரஹத்தால், **ஹ்ருத்க3தா**- என் மனதில் உள்ள, **ஆத்3யா**- ஆநாதியாயுள்ள, **அவித்3யா**- அஜ்ஞானம், **நிர்க3தா ஆஸீத்**- அழிந்துவிட்டது. **ஹ்ருத்3யா**- ஆனந்தத்தை அளிக்கின்ற, **வித்3யா**- ஆத்மஞ்ஞானம், **ஹ்ருத்க3தா**- மனதில் உதித்துவிட்டது. (ஆதலால்) **ஶ்ரீகரம்**- ஸமஸ்த ஐச்வர்யங்களையுமளிக்கக்கூடியதும், **முக்தே:**- மோக்ஷத்திற்குகாரணமாயுமிருக்கின்ற, **த்வத்பத3ாப்3ஜம்**- தங்களுடைய சரணாரவிந்தத்தை, **ப4ாவே**- மனதில், **நித்யம்**- எப்பொழுதும் **ஸேவே**- த்யானம் செய்கின்றேன். (91)

दूरीकृतानि दुरितानि दुरक्षराणि
दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि ।
सारं त्वदीयचरितं नितरां पिबन्तं
गौरीश मामिह समुद्धर सत्कटाक्षैः ॥ 92

தூ3ரீக்ருதாநி து3ரிதாநி து3ரக்ஷராணி
தௌ3ர்பாக்ய து3:க2து3ரஹங்க்ருதிது3ர்வசாம்ஸி ।
ஸாரம் த்வதீ3யசரிதம் நிதராம் பிப3ந்தம்
கௌ3ரீச1 மாமிஹ ஸமுத்3த4ர ஸத்கடாக்ஷை: ॥

(ப-ரை) **கௌரீச1**- ஏ பரமேச்வரா! **து3ரக்ஷராணி**- கெட்ட பிருஹ்மலிபிக்கு சூசகங்களான, **து3ரிதாநி**- பாபங்களும், **தௌ3ர்ப4ாக்3ய து3:க2து3ரஹங்க்ருதி- து3ர்வசாம்ஸி**- துரதிஷ்டம், துக்கம், துரஹங்காரம், கெட்டவார்த்தைகள் இவையும், **ஸத்கடாக்ஷை:** தங்களுடைய திவ்யமான கடைக்கண் பார்வைகளால், **தூ3ரீக்ருதாநி**- தூரத்தில் விலக்கப்பட்டுவிட்டன. (ஒழிக்கப்பட்டுவிட்டன) **ஸாரம்**- அனைவருடைய சரித்திரத்தையும் விட மிகச்சிறந்த, **த்வதீ3யசரிதம்**- தங்களுடையதான சரித்திரத்தை, **நிதராம்**- மிகவும் அதிகமாக, **பிப3ந்தம்**- பானம் செய்து கொண்டிருக்கும், (கேட்டுக்கொண்டிருக்கும்) **மாம்**- என்னை, **ஸமுத்3த4ர**- இந்த ஸம்ஸார ஸமுத்திரத்திலிருந்து (கரையேற்றி விடுங்கள்.) (92)

सोमकलाधरमौले
कोमलघनकंधरे महामहसि ।
स्वामिनि गिरिजानाथे
मामकहृदयं निरन्तरं रमताम् ॥ 93

ஸோமகலாத4ரமௌலே
கோமலக4நகந்த4ரே மஹாமஹஸி ।
ஸ்வாமிநி கி3ரிஜாநாதே2
மாமகஹ்ருத3யம் நிரந்தரம் ரமதாம் ॥

(ப-ரை) **ஸோமகலாத4ரமௌலே**- சந்திரகலையை சிரஸில் தரித்துக்கொண்டிருப்பதும், **கோமலக4நகந்த4ரே**- மிருதுவான, மேகம் போல் கருத்த கழுத்தையுடையதும், **ஸ்வாமிநி**- அனைவரையும் அடக்கியாளுகின்றதும், **கி3ரிஜாநாதே2**- பார்வதிக்கு பதியாயுமிருக்கின்ற, **மஹாமஹஸி**- பெரியஜ்யோதிஸ்வரூபமான பரப்பிரும்மத்தினிடம், **மாமகஹ்ருத3யம்**- என்னுடையமனது, **நிரந்தரம்**- இடைவிடாமல், **ரமதாம்**- ரமித்துக் கொண்டே இருக்கவேண்டும். (93)

सा रसना ते नयने
तावेव करौ स एव कृतकृत्यः ।
या ये यौ यो भर्गं
वदतीक्षेते सदार्चतः स्मरति ॥ 94

ஸா ரஸநா தே நயநே
தாவேவ கரௌ ஸ ஏவ க்ருதக்ருத்ய: ।
யா யே யௌ யோ ப4ர்க3ம்
வத3தீக்ஷேதே ஸதா3ர்சத: ஸ்மரதி ॥

(ப-ரை) **யா**- எது, **ப4ர்க3ம்**- ஸ்ரீபரமேச்வரனை, **வத3தி**- சொல்லுகின்றதோ, **ஸா**- அதுவே, **ரஸநா**- ரஸநேந்திரியமாகும், **யே**- எவை, (பரமேச்வரனை) **ஈக்ஷேதே**- பார்க்கின்றனவோ, **தே**- அவைகளே, **நயநே**- நயநேந்திரியங்களாகும். **யௌ**- எவை, (பரமேச்வரனை) **ஸதா3**- எப்பொழுதும், **அர்சத:**- அர்ச்சனை

செய்கின்றனவோ, **தாவேவ**- அவைகளே, **கரௌ**- கைகளாகும், **ய:**- எவன் (பரமேச்வரனை) **ஸ்மரதி**- ஸ்மரிக்கின்றானோ, **ஸஏவ**- அவனே, **க்ருதக்ருத்ய:**- செய்ய வேண்டியதைச் செய்தவனாக ஆகின்றான். (94)

अतिमृदुलौ मम चरणा
वतिकठिनं ते मनो भवानीश ।
इति विचिकित्सां सन्त्यज
शिव कथमासीद् गिरौ तथा ऽऽवेशः ॥ 95

அதிம்ருது3ளௌ மம சரணா
வதிகடி2னம் தே மனோ ப4வானீச1 ।
இதி விசிகித்ஸாம் ஸந்த்யஜ
சி1வ கத2மாஸீத் கி3ரௌ தத2ா வேச1: ॥

(ப-ரை) **ப4வானீச1**- பார்வதீகாந்தனை, **சி1வ**- ஏ பரமேச்வர! **மம**- என்னுடைய, **சரணௌ**- பாதங்கள், **அதிம்ருதுலௌ**- மிகவும் மிருதுவாக இருப்பவை. **தே**- உன்னுடைய, **மந:**- மனது, **அதிகடி2நம்**- மிகவும் கடினமானது. (அதில் எப்படி நான் சஞ்சரிக்கமுடியும்?) **இதி**- என்ற **விசிகித்ஸாம்**- ஸந்தேஹத்தை, **ஸந்த்யஜ**- விட்டு விடுங்கள். **தத2ா**- மனது போலவே மிக்ககடினமான, **கி3ரௌ**-மலையில், **ஆவேச1:**- இங்கு மங்கும் சுற்றித்திரிதல் என்பது, **கத2ம் ஆஸீத்**- எப்படி ஏற்பட்டது?

(க-ரை) மிகக்கடினமான மலையில் சுற்றித்திரிந்த தாங்கள் என்மனதில் குடிகொள்ளுவதைப்பற்றி சந்தேஹிக்க வேண்டாம் என் மனதிலேயே கவலையற்று தங்கியிருப்பீராக. (95)

धैर्याङ्कुशेन निभृतं
रभसादाकृष्य भक्तिशृङ्खलया ।
पुरहर चरणालाने
हृदयमदेभं बधान चिद्यन्त्रैः ॥ 96

தை4ர்யாங்குசே1ந நிப்4ருதம்

ரப4ஸாத3ாக்ருஷ்ய ப4க்திச்1ருங்க2லயா ।

புரஹர சரணாலானே

ஹ்ருத3ய மதே3ப4ம் ப3த4ாந சித்யந்த்ரை: ॥

(ப-ரை) முப்புரமெரித்த ஏ பரமேச்வர!, **ஹ்ருத3யமதே3ப4ம்**- என்மனதாகிற மதயானையை, **தை4ர்யாங்குசே1ந**- தைர்யமாகிற அங்குசத்தால், **ரப4ஸாத்**- வேகமாக, **ஆக்ருஷ்ய**- இழுத்து, **ப4க்திச்ருங்க2லயா**- பக்தியென்னும் சங்கிலியால் **சரணாலானே**- உமது பாதமாகிற யானையைக்கட்டும் கம்பத்தில், **சித்யந்த்ரை:**- உமது மஹிமைகளின் அறிவாகிறயந்திரங்களால், **நிப்4ருதம்**- அசைவற்றிருக்கும்படி, **ப3த4ாந**- கட்டிவிடுங்கள்.

(க-ரை) ஏ பரமேச்வர! தங்களுடைய சரணங்களிலேயே என்மனது இடைவிடாமல் ஈடுபட்டிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறார். (96)

प्रचरत्यभितः प्रगल्भवृत्त्या

मदवानेष मनःकरी गरीयान् ।

परिगृह्य नयेन भक्तिरज्ज्वा

परमस्थाणुपदं दृढं नयामुम् ॥ 97

ப்ரசரத்யபி4த: ப்ரக3ல்ப4வ்ருத்யா

மத3வானேஷ மந: கரீ க3ரீயாந் ।

பரிக்3ருஹ்ய நயேந ப4க்திரஜ்வா

பரமஸ்த2ாணுபத3ம் த்3ருட4ம் நயாமும் ॥

(ப-ரை) **பரம**-ஒப்புயர்வற்ற ஏ பரமேச்வர! **மத3வாந்**- மதம்பிடித்த, **க3ரீயாந்**- மிகவும் பலமுள்ள, **மந:கரீ**- என் மனதாகிற யானை, **ப்ரக3ல்ப4வ்ருத்யா**- அடக்கமுடியாத சேஷ்டைகளுடன், **அபி4த:**- இங்கு மங்குப், **ப்ரசரதி**- சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. **அமும்**- இந்த யானையை, **ப4க்திரஜ்வா**- பக்தியாகிறகயிற்றால், **நயேந**- நல்வழியில் திருப்பும் சமாதான முறையில், **பரிக்3ருஹ்ய**- உமது வசப்படுத்தி, **ஸ்த2ாணுபத3ம்** சாச்வதமான ஸ்தானத்தை அதாவது பிருஹ்மபதத்தை, **த்3ருட4ம்**

திரும்பிவராமல் இருக்கும்படி, நய- அடையச்செய்வீராக.

(க-ரை) இவ்வளவு நேரம் ஸகுணமூர்த்தியை உபாஸித்த மனது நிர்குண ப்ருஹ்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெறவேண்டுமென்று கிரந்தத்தின் முடிவில் வேண்டிக் கொள்ளப்படுகிறது. (97)

सर्वालङ्कारयुक्तां सरलपदयुतां साधुवृत्तां सुवर्णां
सद्भिः संस्तूयमानां सरसगुणयुतां लक्षितां लक्षणाढ्यां ।
उद्यद्भूषाविशेषामुपगतविनयां द्योतमानार्थरेखां
कल्याणीं देव गौरीप्रिय ममकविताकन्यकां त्वं गृहाण॥ 98

ஸர்வாலங்கார யுக்தாம் ஸரலபத3யுதாம் ஸாது4வ்ருத்தாம் ஸுவர்ணாம்
ஸத்பி4: ஸம்ஸ்தூயமானாம் ஸரஸகு3ணயுதாம் லக்ஷிதாம் லக்ஷணாட்4யாம் ।
உத்3யத்பூ4ஷாவிசேஷாமுபக3தவிநயாம் த்3யோதமானார்த்த2 ரேகா2ம்
கல்யாணீம் தே3வ கௌ3ரீப்ரிய மம கவிதாகந்யகாம் த்வம் க்3ருஹாண ॥

(ப-ரை) கௌ3ரீப்ரிய- பார்வதியை பார்யையாக அடைந்த **தே3வ**- ஏ பரமேச்வர! **ஸர்வாலங்காரயுக்தாம்**- "உபமானம்" முதலிய எல்லா அலங்காரங்களுடன் கூடியதும், (ஸபல்த ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டவளும்) **ஸரலபத3யுதாம்** எளிதில் அர்த்தத்தை போதிக்கும் சுலபமான பதங்களுடன் கூடியதும். (ஹம்ஸம்போல் மெள்ள மெள்ள அடியை வைத்து அழகாக நடப்பவளும்) **ஸாது4வ்ருத்தாம்**- லக்ஷணங்கள் பொருந்திய "ஆர்யா" முதலிய விருத்தங்களையுடையதும், (நற்காரியங்களில் ஈடுபட்டவளும்) **ஸுவர்ணாம்**- இனிமையான அகாரம் முதலிய அக்ஷரங்களையுடையதும், (அழகிய நிறத்தைப் பெற்றவளும்) **ஸத்3பி4:** காவ்யலக்ஷணங்களை அறிந்தவர்களால், (உடல் லக்ஷணங்களை அறிந்தவர்களால்) கொண்டாடப்படுகின்றவளும், **ஸரஸகு3ணயுதாம்**- சிருங்காரம் முதலிய ரஸம், "மாதுர்யம்" முதலிய குணம் இவற்றுடன் கூடியதும், (கணவனுக்குப்பிரிய

மான பல குணங்களுடன் கூடியவளும்) **கல்யாணீம்**- சிறந்த அர்த்தங்களை இனிமையாக எடுத்துரைக்கின்றதுமான (மங்கள கரமாகப்பேசுகின்றவளும்) **மம**- என்னுடைய **கவிதாகந்ய காம்**- கவிதை (ஸாஹித்யம்) என்னும் பெண்ணை, **த்வம்**- தாங்கள் **க்3ருஹாண**-ஏற்றுக்கொள்ளுங்கள்.

(க-ரை) இந்த சுலோகத்தில் கவி தனது கவிதையை கன்னிகையாகக் கற்பித்து, அவளை ஸ்ரீ பரமேச்வரன் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறார். இங்குள்ள சொற்கள் எல்லாம் கவிதை, கன்னிகை இருவரையும் குறிப்பிடுகின்றன. சிறந்த காவ்யத்திலும், விவாஹத்திற்குரிய பெண்ணிடத்திலும் இருக்கவேண்டிய ஸமஸ்தகுணங்களையும் சிலேடையாக கவி இங்கு விவரித்திருப்பது பெரிதும் போற்றத்தக்கது.

அலங்காரம், சொல், விருத்தம், அக்ஷரம், ரஸம், குணம், காவ்யலக்ஷணம், வளம் பொருந்திய அர்த்தம், கவித்திறமை, வியங்கியார்த்தம், இவையெல்லாம் சிறந்து விளங்கும் காவ்யமே உத்தமகாவ்யமாகும். மேலும் அது அறிஞர்களால் பலவாறாக அலசிப்பார்க்கப்பட்டு போற்றப்பட்டதாகவும் இருக்கவேண்டும். இக்காவ்யத்தில் மேற்கூறியவை யெல்லாம் பொருந்தி இருக் கின்றன என்பதை கவி குறிப்பிடுகின்றார்.

ஆபரணங்கள், அழகியநடை, நற்காரியங்களில் பழக்கம், வசீகரமான உடல்நிறம், நற்குணங்கள், உடலில் நல்ல லக்ஷணங் கள், குறிப்பிடத்தக்க சில ஆபரணங்கள், அடக்க ஒடுக்கம், நல்ல அதிருஷ்டத்தை சூசனம் செய்யும் ரேகைகள், அர்த்தமுள்ள பேச்சு, இவை எல்லாவற்றுடன் கூடிய பெண், பந்துக்களும் அங்கீகரித்தபின், மணந்துகொள்ளத்தகுந்தவள் என்றும் இங்கு சூசனம் செய்யப்படுகிறது.

கவி இந்த சுலோகத்தில் தான்செய்த காவ்யத்தை ஸ்ரீபரமே ச்வரனுக்கே அர்ப்பணம் செய்கிறார். (98)

इदं ते युक्तं वा परमशिव कारुण्यजलधे
गतौ तिर्यग्रूपं तव पदशिरोदर्शनधिया ।

हरिब्रह्माणौ तौ दिवि भुवि चरन्तौ श्रमयुतौ
कथं शम्भो स्वामिन् कथय मम वेद्योसि पुरतः ॥ 99

இத3ம் தே யுக்தம் வா ப்ரமசிவ காருண்யஜலதே4

க3தௌ திர்யக்3ரூபம் தவ பத3சி1ரோத3ர்ச1னதி4யா 1
ஹரிப்3ரஹ்மாணௌ தௌ தி3வி பு4வி சரந்தௌ ச்1ரமயுதௌ
கத2ம் ச1ம்பே4ா ஸ்வாமிந் கத2ய மம வேத்3யோஸி புரத: ll

(ப-ரை) **காருண்யஜலதே4**- கருணைக்கடலான, **பரமசி1வ**- ஏ பரமேச்வர!, **தவ**- தங்களுடைய, **பத3சி1ரோத3ர்சனதி4யா**- (முறையே) சரணத்தையும், சிரஸ்ஸையும் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன், **திர்யக்3ரூபம்-க3தௌ**- மிருகம், பக்ஷி இவற்றின் உருவத்தைப் பெற்ற, **தௌ**- பிரசித்தி பெற்ற, **ஹரிப்ரஹ்மாணௌ**- விஷ்ணு, பிருஹ்மா இருவர்களும், **பு4வி**- பூமியிலும், **தி3வி**- ஆகாயத்திலும், **சரந்தௌ**- சுற்றி, **ச்1ரமயுதௌ**- களைப்புற்றனர். (அப்படியிருக்கையில்) **ஸ்வாமிந்- ச1ம்பே4ா**- ஏ ஸ்வாமிந், ஏ பரமேச்வர! **மம**- எனக்கு, **புரத:**- எதிரில், **கத2ம்**- எப்படி **வேத்3ய:**- அறியத்தகுந்தவராக, **அஸி**- ஆகிறீர்கள்? **கத2ய**- சொல்லுங்கள். **இத3ம்**- இவ்விதம் செய்வது, **தே யுக்தம் வா!** தங்களுக்குத் தகுதியா?

(சு-ரை) முன் சுலோகத்தில் இவ்வரிய காவ்யத்தை ஸ்ரீ பரமேச்வரனுக்கு அர்ப்பணம் செய்தவுடன் அதைக்கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த ஸ்ரீபரமேச்வரன் இக்கவிக்கு எதிரில் காக்ஷியளித்திருக்கலாம். உடனே இந்த சுலோகத்தை இயற்றியிருக்கலாம் என்று இதிலிருந்து ஊஹிக்க இடமிருக்கிறது. "பக்ஷியாகவும், பன்றியாகவும் தோன்றின பிருஹ்மா, விஷ்ணு இவர்களுக்குக்கூட காக்ஷியளிக்காத தாங்கள் என் எதிரில் காக்ஷியளிக்கின்றீர்களே? இது தகுமா?" என்று கேட்பதிலிருந்து பரமேச்வரன் கவிக்கு முன் காக்ஷியளித்தார் என்று தெரியவருகிறது. காவ்யத்தை முடித்து அதை பரமேச்வரனுக்கும் அர்ப்பணம் செய்தபின் இந்த சுலோகம் எழுதப்பட்டிருப்பதிலிருந்து இதை பரமேச்வரனுடன் நேரில் பேசிய பேச்சு என்றே கருதவேண்டும். (99)

स्तोत्रेणालमहं प्रवच्मि न मृषा देवा विरञ्चादयः
स्तुत्यानां गणनाप्रसङ्गसमये त्वामग्रगण्यं विदुः ।
महात्म्याग्रविचारणप्रकरणे धानातुषस्तोमव—
द्धूतास्त्वां विदुरुत्तमोत्तमफलं शम्भो भवत्सेवकाः ॥100

ஸ்தோத்ரேணலமஹம்ப்ரவச்மி நம்ருஷா தே3வா விரிஞ்சாத3ய:
ஸ்துத்யாநாம் க3ணநாப்ரஸங்க3ஸமயே த்வாமக்3ரக3ண்யம் விது3: ।
மாஹாத்ம்யாக்3ர விசாரணப்ரகரணே த4ா நாதுஷஸ்தோமவ-
த்3தூ4தாஸ்த்வாம் விது3ருத்தமோத்தம ப2லம் ச2ம்பே4ா ப4வத்ஸேவகா: ॥

(ப-ரை) **சம்பே4ா-** ஏ பரமேச்வர! **விரிஞ்சாத3ய:-** பிருஹ்மா முதலிய, **ப4வத்ஸேவகா:-** தங்களுடைய பக்தர்கள், **ஸ்துத்யாநாம்-** துதிக்கத்தகுந்தவர்களின், **க3ணநாப்ரஸங்க3ஸமயே-** எண்ணிக்கையைப் பற்றி சர்சை செய்யுங்காலத்தில், **த்வாம்-** தங்களை, **அக்3ரக3ண்யம்-** முதலில் எண்ணத்தகுந்தவராக **விது3:** அறிகின்றனர். **மாஹாத்ம்யாக்3ரவிசாரணப்ரகரணே-** மிகச் சிறந்த மஹிமை யாருக்கு என்று ஆலோசிக்குந் தருணத்தில், **தா4நாதுஷஸ்தோமவத்-** ஸாரமற்ற தானியம் அதாவது கருக்காயின் உமிக்குவியல்கள்போல், **தூ4தா:-** தூரத்தில் ஒதுக்கப்பட்ட (மற்ற தேவர்கள் அனைவரும்) **த்வாம்-** தங்களை, **உத்தமோத்தபலம்-** மிகமிகச்சிறந்த ஸாரமுள்ள தானியம்போல், **விது3:-** கருதுகின்றனர். **ஸ்தோத்ரேண அலம்-** (தங்கள் மஹிமையைப் பற்றி) ஸ்தோத்ரம் செய்து சாதிக்கவேண்டியது ஒன்றுமே இல்லை. **அஹம்-** நான், **ம்ருஷா-** இல்லாத விஷயத்தை **ந ப்ரவச்மி-** புகழ்ந்து கூறவே இல்லை.

(க-ரை) ஏ பரமேச்வர! உலகில் ஸ்தோத்ரம் என்றால் இல்லாத விஷயங்களைக்கூட சேர்த்துச் சொல்லுவதே இயற்கை. தங்கள் விஷயத்தில் அம்மாதிரி சொல்லி சாதிக்கவேண்டியது ஒன்றுமே இல்லை. பிருஹ்மா முதலிய தேவர்கள் தாங்களே துதிக்கத்தகுந்தவர்களுள் முதல்வர்என்று நிர்மானித்திருக்கிறனர்

மேலும் களத்தில் அறுவடை செய்த நெல்லை தூத்துங்காலத்தில் கருக்காய் எல்லாம் ஒதுங்கி விடும். ஸாரமுள்ள நெல்லே மிஞ்சி நிற்கும். அதுபோல் சிறந்த மஹிமையைப் பற்றி ஆலோசிக்குங் காலத்தில் மற்ற தேவர்கள் எல்லாம் தூரத்தில் விலகி விட்டதால் தாங்களே மிகச்சிறந்தவர் என்று நிச்சியிக்கப் பட்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தங்களுக்கு என்னுடைய ஸ்தோத்ரத்தால் ஆகக்கூடியது என்ன இருக்கிறது? தாங்கள் ஸர்வோத்தமர் என்று சுருதி ஸ்மிருதி இதிஹாஸம் முதலியவற்றுலும் பிருஹ்மா முதலிய தேவர்களாலும், மற்றும் அனைவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம்.

முற்றிற்று.